ஆனந்த போதினி

மலர் 19. பகுதி 4. 1933 அக் 17

O:2.11,N13 A3.
N33
222945

மதனாம்பாள் 2-பாகம்.

இதில், காளிங்கனாகிய லோகநாதன் என்னும் ஓர் நயவஞ்சகன், சகோதரத் துரோகியாய் அவனை அடுத்துக் கெடுதலும், பட்டாபிராமன் என்னும் ஓர் உத்தமனைக் காதலித்திருந்த மதனாம்பாள் என்னும் உத்தமியைத் தான் மணஞ்செய்துகொள்ள விரும்பி, வேலாயுதன் என்பவனைத் தன் மோசச் செய்கைகளுக்குத் துணைக்கருவியாகக்கொண்டு பல வஞ்சனைகளைச் செய்து, மதனாம்பாளை ஆதரித்துவந்த பாங்கிக்கார் மனைவியாகிய விமலாம்பாளைப் பயமுறுத்தி, மதனாம்பாளைத் தன் விருப்பத்திற் கிணங்கச் செய்வதும், பாங்கியில் மகாமாயக் களவு நடத்தி அக்குற்றத்தை நிரபராதியாகிய பட்டாபிராமன் மேல் சுமத்துவதும் படிப்போர்க்கு ஆச்சர்யத்தை விளைவிக்கும்.

2 பாகமும் விலை ரூபா 3.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-10-33 வரை விலை ரூ. 1—8—0

இந்திராபாய் அல்லது இந்திரஜாலக்கள்ளன்

இந்த சம்பந்தப்பட்ட குற்றவாளியாகிய முஷ்டிக்கரம் என்ற கள்ளன் கல்வி, சாஸ்திர ஆராய்ச்சி, தந்திரம் சாமார்த்தியம் முதலிய யாவும் உடையவனாதலின், அவன் தன் கூட இருக்கும் ஆட்களுக்குக் கூட தன் சுய ரூபத்தைக் காட்டாமலே கேட்போர் நெஞ்சம் கலங்கும்படியாகச் செய்யும் பல கொலை களவுகள் அதிசயமானவைகளே. இந்திராபாய் பன் முறைகளில் அக்கள்வனிடம் சிக்கிக்கொண்டு சற்றும் எதிர் பாராத ஆச்சரியமான விதமாய்ப் பிராணாபத்துக்களி லிருந்து தப்புவதும் அவளைக் காப்பாற்றவும், முஷ்டிக்கரத்தைக் கண்டு பிடிக்கவும் துப்பறியும் கிருஷ்ணராவ் செய்யும் அற்புத சாமார்த்தியங்களும் வாசிப்போர்க்கு மிக்க பிரமையை யுண்டாக்கும்.

இதன் விலை ரூபா 2—8—0

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-10-33 வரை விலை ரூ. 1—4—0

தமிழ் மெட்டீரியா மெடிக்கா

என்னும் அருமையான வைத்திய நூல்.

MATERIA MEDICA

இவ்வரிய பெரிய வைத்திய புஸ்தகமானது ஆங்கில மருந்துக் கலப்பு வினா முறைகளைத் தமிழில் விளக்கமாக உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்கு விளக்குவது. இன்னின்ன நோய்க்கு இன்னின்ன விதமாக மருந்துகளைச் சேர்த்து மிக்சர் (Mixture) முதலானவை செய்து சாப்பிடவேண்டுமென்பதை இந்நூல் நன்றாகக் கூறுகின்றமையால் இதை ஓர் 'ஆபத்துக் குதவும் தோழன்' என்று அனைவரும் நம்பலாம். இது வைத்திய அநுபவம் மிகப் பெரிதும் உடைய ஒருவரால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தங்களுக்குத் தாங்களே கூடிய வரையில் நோய்களுக்குப் பரிகாரம் செய்து கொள்ளவும் இந்நூல் மிகவும் உபயோகப்படும். இதன் விலை ரூபா 3.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

புதிய நாவல்! புதிய நாவல்!

கிருஷ்ணஸிங்

அல்லது

துப்பறியும் சீடன்

ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்கள் எழுதியது.

அறிவைப் புகட்டும் அரிய நாவல் இதுவே.

துப்பறியும் இரகசியங்களும், தந்திர சாமார்த்தியங்களும், வீரதீரச் செயல்களும், உலகில் பல படுமோசப் படுகுழியிலிருந்து தப்புவதற்கான புத்தி மதிகளும், கெடுவான் கேடு நினைப்பான் என்பதற் கிணங்க நீதிமதியோடு கூடிய பல அத்தாட்சிகளும், இன்னும் பல இனிய அரிய போதனைகளும் அடங்கியது.

இதன் விலை அணா 14.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-10-33 வரை விலை அணா 10.

அம்பாலிகை

அல்லது

அதிசய மரணம்

அறிவைப் புகட்டும் ஓர் அருமையான துப்பறியும் நாவல் இதுவே. இதில் கொலைகளவுக் கஞ்சாப் பாதகனான கறுப்பண்ணன் என்பவன் தந்திர சாமர்த்தியமாய் அம்பாலிகை யென்னும் தன் உறவினளை அவள் ஆஸ்திக்காக மணம் புரியக்கருதி, அவளை இறந்தவள் போல யாவரும் நம்பும்படியான சூழ்ச்சிசெய்து, ஏற்கனவே அவளுக்குச் சகோதரன் முறையும் அவளால் காதலிக்கப்பட்டவனுமான மனோகரன் என்பவன் மேல் குற்றஞ்சுமத்தி, குற்றஞ் செய்தவனைக் கண்டுபிடிக்க தவறுதலாய், பல கொலை களவுகளைக் கண்டுபிடித்தும், ரஸாயன சாஸ்திரத்தில் தேர்ச்சி பெற்றவனும், மகா வீரதீர சிங்கமும், ஆபத்துகளை அணுவளவும் மதிக்காது நேர்முகமாக எதிர்த்து வெற்றிமாலை சூடுபவனுமாகிய துப்பறியும் ஆனந்த சிங்கை ஏற்படுத்துவதும், கடைசியில் ஆனந்தஸிங் உண்மையான குற்றவாளியை அதாவது கறுப்பண்ணனையே, பலவித தந்திர சாமர்த்தியங்களால் கண்டு பிடிப்பதும், அம்பாலிகையை உயிருடனேயே மீட்பதும், தவறுதலாக அம்பாலிகையால் கருதப்பட்ட மனோகரன் கடைசியில் அவளை மணம் செய்துகொண்டு இன்புற்று வாழ்வதும், கறுப்பண்ணன் தான் செய்த குற்றங்களுக்காக தேசாந்தரம் போய்விடுவதும் துப்பறியும் ஆனந்தசிங் வெற்றிமாலை சூடி தான் அமிர்தம்மாள் என்னும் கன்னிகையை மணம் செய்துகொண்டு மேலும் பிரக்[illegible] படிக்கப் படிக்க மிகவும் அறிவை வளர்க்கும் என்பது நிச்சயம்.

இதன் விலை அணா 12.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-10-33 வரை விலை அணா 8.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

புதிய நாவல்! பெருகும் ஆவல்!!

சற்குணவல்லி

அல்லது

சித்தூர் இளைய ஜமீன்தாரணி.

(ஸ்ரீ. எஸ். எஸ். அருணகிரிநாதர் எழுதியது)

இதில் தர்மசீலன் என்னும் கதாநாயகன் முதலில் ஆனந்தசுந்தரி என்னும் மாதை மணக்கிறான். இவளோ கணவனை மதியாத மாபாதகி, சிற்றின்ப ஆனந்தத்தையே மதித்து அன்னிய ஆடவருடன் அடிக்கடி உறவாடி கொடு நீலியாகி கொண்டவனை விட்டு கண்டவனுடன் திடீரென்று மறைந்து விட்டாள். தர்மசீலன் மிகவும் யோக்கியன். பிறகு அவன் மேல் காதல் கொண்ட கோடீஸ்வரி சற்குணவல்லி என்னும் சித்தூர் இளைய ஜமீன்தாரணி அவனை உள்ளன்புடன் மணக்கிறாள். இவளோ கற்பின் அணிகலம், பொறுமையின் பொற்கொடி, பொறுமையின் பொக்கிஷம், நிறையுடைமை நங்கை, வீரத் தெய்வம். கணவனைக் கடவுளென மதித்தவள். தர்மசீலன் முதல் மனைவியைக் கொன்றுவிட்டு மறு மணம் செய்துகொண்டான் என்னும் ஆபாண்டமான பழி, சந்தர்ப்ப சாக்ஷியங்களால் அவனைப் பலவித பரிசோதனைகட்கும், ஆபத்துகளுக்கும் உட்படுத்திற்று. இருந்தாலும் சற்குணவல்லி அவன் மீது வைத்த பிரியம் மாறவில்லை. கடைசியில் ஆனந்தசுந்தரி திடீரென்று ஒரு நாள் தோன்றி தன் நடக்கைக்குத் தக்க தண்டனையைத் தானே ஏற்று தன் கணவன் மீது சுமத்தப்பட்ட வீண் பழியை விளக்கி, ஆவி நீத்தாள். இதில் இருவித மாதர் நடத்தை விளக்கப்பட்டிருப்பதோடு பலவித நீதிமதிகள் தெள்ளிய எளிய இனிய நடையில் படிப்போர் மனதைப் பரவசப்படுத்தும்படி எழுதப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆடவரும் பெண்டிரும் இதை வாசித்து இருமைப் பயனைத் தேடி இன்புறுவார்களாக.

இதன் விலை ரூபா 1—8—0.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-10-33-வரை விலை ரூபா 1—0—0.

கைவல்ய நவநீத வசனம்.

ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்கள் எழுதியது.

ஆன்மாக்கள், மாயையினின்றும் விடுபட்டு மோக்ஷசாதனத்தை அடையும் பொருட்டுக் கருணாநிதியாகிய கடவுள் அருளிய வேதத்தின் உட்பொருள்களைத் தழுவிப் பல மகான்கள் பல நூற்களை இயற்றி யிருக்கின்றனர். அவற்றுள் தாண்டவராய சுவாமிகள் இயற்றிய கைவல்ய நவநீதமும் ஒன்று. இதன் நடை செய்யுளாகவும் மிகவும் கடினமாயிருப்பதால் எவரும் எளிதில் வாசித்துணரும்படி இதை வசனமாக எழுதி வெளியிடப்பட் டிருக்கிறது. இதனால் முத்தி மார்க்கத்தை எவரும் நன்குணரலாம். விலை ரூபா 1—8—0.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-10-33 வரை விலை ரூ. 1—2—0

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

ஆசிரியரின்றி ஆங்கிலந் தெரிந்துகொள்ளும் ஆனந்த

ஆங்கில பாஷா போதினி.

(நான்காம் பதிப்பு) விலை ரூபா 2.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூ. 1—8—0.

எம். ஏ., எல். டி. பட்டம் பெற்ற ஆங்கில போதகாசிரியராகிய திருவானர் எம். ஷண்முகசுந்தர முதலியாரவர்களால் இயற்றப்பெற்ற உயர்ந்த திருத்தங்களோடும், சிறந்த அமைப்புகளோடும், நிறைந்த போதனைகளோடும் இப்பதிப்பு வெளிவந்திருக்கிறது.

800-பக்கங்களுக்குமேல் திக்கு காகிதத்தில் அச்சிடப்பட்டு சீமை காலிகோ பைண்டு செய்யப்பட்டது.

பற்பல கதைகளும், பாரதக் கதைகளும், ஸ்ரீ கிருஷ்ணர் சரித்திர சுருக்கமும் அடங்கியது. அவற்றிற்குப் பொருத்தமான அழகிற் சிறந்த 16-ஆப்டோன் படங்களுடன் கூடியது.

இக்காலத்தில் இங்கிலீஷ் இராஜ பாஷையாயிருப்பதால் அதை எல்லோரும் கற்றுக்கொள்ளவேண்டியது அவசியமா யிருக்கின்றது. அப்படிப் படிக்காத சிலர், பல சங்கடங்களை அடைகின்றனர். ஆதலின், அத்தகையினர் கற்றுக்கொள்வதற் குதவியாயிருக்கும்படி ஆங்கில பாஷையைத் தமிழ் மக்களுக்கு எளிதிற் போதிக்கும் அரிய போதனாமுறை நூலாகிய இது பலர் வேண்டுகோளுக்கிணங்க வெளிப்படுத்தப் பெற்றிருக்கின்றது.

இதனைச் சிரத்தையுடன் படிப்பவர் பணச் செலவில்லாமலும், வேறெவ்விதக் கஷ்டமில்லாமலும் மிக எளிதில் இங்கிலீஷ் பேசவும் படிக்கவும் எழுதவும் கற்றுக் கொள்ளலாம். ஆயிரக் கணக்கான பணச் செலவு செய்து 10 வருஷம் படிப்பதனால் எவ்வளவு ஆங்கில தேர்ச்சி யுண்டாகுமோ அவ்வளவு தேர்ச்சியை ஒரு மாதம் அல்லது 40-நாளில் இப் புத்தகத்தின் உதவியைக்கொண்டு அடைந்து, ஆங்கிலத்தை அதி விரைவில் படித்துக்கொள்ளலாம். மனிதர் தாமே சுலபமாக இங்கிலீஷ் கற்றுக்கொள்ளத் தக்க மார்க்கங்களெல்லாம் இதில் விளக்கமாக அமைக்கப் பெற்றிருக்கின்றன.

இதில் இதுவரை வெளிவாராத நூதன பாடமுறைகளெல்லாம் வெளியிடப்பட்டிருக்கின்றன. இன்னும் ஒரு ரூபா முதல் 10 ஆயிரம் ரூபாவரை சம்பளப்பட்டிக் கணக்கு, வட்டிக்கணக்கு, ஒவ்வொரு தேசத்திலும் ஏற்படும் மணி வித்தியாசம், அன்னிய தேச நாணய மதிப்பு முதலியனவெல்லாம் தெளிவாக விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது.

மேற்படி தெலுங்கு பதிப்பு விலை ரூபா 2.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

ஔவையார் அருளிச்செய்த

பெட்டகம்.

புதிதாய் அச்சிடப்பட்டு வெளிவந்துவிட்டது. விலை அணா 2.

கற்கோட்டை

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் வரையப்பட்டது.

இந்த அற்புதமான நாவல் ஏற்கனவே நமது சஞ்சிகையில் தொடர்ச்சியாய்ப் பிரசுரிக்கப் பட்டு வந்ததாகும். இதன் விசேஷத்தையறிந்து நமது சந்தாநேயர்களில் அநேகர் இதைப் புத்தகமாய் முடித்துத்தர வேண்டுமென்று பன்முறை கேட்டுக் கொண்டபடியால் இது வெளியிடப் பட்டது. ஸ்ரீமான் முதலியாரவர்களுடைய நாவல்களை வாசித்துள்ள நம் தமிழ நாட்டார்க்கு இந்நாவலின் சுவையையும் அழகிய கதைப் போக்கையும் நாம் எடுத்துக் காட்டவேண்டியது அநாவசியம் என்றே நினைக்கின்றோம். அவர் எழுதிய நாவல்களுள் இதுவே தலை சிறந்ததாகும். இதன் விசேஷ அம்சங்களைச் சுருக்கமாய்க் கீழே குறிப்பிடுகின்றோம்.

இந்த நாவல் ஆரம்பத்திலேயே வாசிப்போர் மனதைப் பூரணமாய்க் கவர்ந்துகொள்வதோடு முடியுமட்டும் அக்கவர்ச்சி நீங்காது. இது சரித்திர சம்பந்தமான நாவல் எனலாம். இதில் தேசப்ரஷ்டமடைந்த சில உயர்குல மகுட வர்த்தனர்கள் தலை மறைந்து வசிக்கும்போது, நெஞ்சு திடுக்கிடும் பிராணாபத்துகளில் சிக்கிக் கொள்வதும், அவற்றினின்றும் தப்பித்துக்கொள்ள அவர்கள் செய்யும் வீர தீர சாமர்த்தியச் செயல்களும் சொல்லொணா வியப்பையும் சோகத்தையும் வீரரசத்தையும் ஊட்டும். சில ஸ்திரீகளின் அற்புத நடக்கைகளும் துணிகரமான தீரச் செயல்களும், தம் காதலரிடத்தில் மெய்க் காதல் கொண்ட உத்தம ஸ்திரீகள் தம் காதலர் பொருட்டாய் எவ்வளவு வரையில் ஆடவருக்குச் சமமாய் நடந்து கொள்ளச் சக்தியுடையவர்களா யிருக்கிறார்களென்பதை நன்கு விளக்கும். இக் கதையிலுள்ள முக்கிய விசேடமாவது, இதிலுள்ள கதா பாத்திரங்களில் ஒவ்வொருவருடைய நடக்கைகளும் அவற்றின் பயன்களும் மாணிடர்க்கு இன்றியமையாததான ஒவ்வொரு நீதியை அத்தாட்சியோடு புகட்டுகின்றன.

இது தெளிவான இனிய நடையில், ஆங்காங்கு நாம் உணரவேண்டிய முக்கிய விஷயங்களையெல்லாம் விளக்கிக் காட்டி எழுதப்பட்டிருக்கிறது. இதில் நூலாசிரியர் திருவுருவப் படமும் அமைக்கப்பட்டிருக்கிறது.

இதன் விலை ரூபா 2—0—0.

"ஆனந்தபோதினி" சந்தாதாரர்களுக்கு

விலை ரூபா 1—8—0.

காமவல்லி இன்பரசம் பொருந்தியது, பெண்களின் மாயஜாலத்தை விளக்குவது, நீதியைப் போதிப்பது. இதன் விலை அணா 8.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

சே. இராஜு செட்டியார், எம்.பி. பி.ஐ., அவர்கள் இயற்றியவை.

புதிய நாவல்! புதிய நாவல்!!

சந்திரசேகரி.

(இரண்டாம் பதிப்பு)

எளிய இனிய நடையில் எழுதப்பட்டது. உலகானுபவமும் இலக்கண அறிவும் விசேஷமாகக் கொண்டது; அன்பின் மகிமை, பொறுமையின் பெருமை, கேடு நினைப்போர் கெடுவர், கடவுளை நம்பினோர் கைவிடப்படார் முதலிய பல அரிய விஷயங்கள் இதில் விளக்கமாகவும் படிப்போர் மனதைக் கவரக்கூடியதாகவும் எழுதப்பட்டிருக்கிறது. அறிவை விருத்திசெய்யக்கூடிய நாவல் இதுவே.

இதன் விலை ரூபா 1—4—0

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-10-33 வரை விலை ரூ. 1.

காதலி? ஒரு இனிய அருமையான தமிழ் நாவல்.

இதில் நவீன நாகரிகம், காதலின் வெற்றி, 'அவனன்றி ஓரணுவும் அசையாது', 'விதியின் வலி' என்னும் பல உயரிய நீதிகள் செல்வர்களின் ஆடம்பர வாழ்க்கை, சீர்திருத்தத்தின் சீர்கேடு ஆகிய பல அரிய அறிவைப் புகட்டும் அதியற்புத விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

இதன் விலை அணா 10.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-10-33 வரை விலை அணா 8.

அன்பானந்தன்

அல்லது

அருஞ்செல்வன் விளைந்த பெருஞ்செல்வம்

இந்நூலின் கதாநாயகன் பெயரே இந்நூற்கும் பெயராய் அமைந்தது. அன்பானந்தன் என்னும் பெயரால் இரண்டு உண்மைகள் அறியலாகும்; அன்பு, ஆனந்தத்தில் முடிந்து அதனோடு ஒன்றாகி விளங்கும் என்பதொன்று; மற்றொன்று இந்நூல் எந்தப் பாஷையில் எழுதப்பட்டுள்ளதோ, எந்தப் பாஷை நமக்குத் தாய்ப்பாஷையாக வுள்ளதோ, அந்தப் பாஷையின் பெருமை இப்படிப்பட்டதென்பது. தமிழ் என்னும் சொல்லே இனிமை என்று பொருள்படும். அன்பைவிட இனிமையுள்ளது வேறில்லை. இவ்வன்பும் அவ்வினிமையும் கலந்தால் ஆனந்தம் பிறக்கத் தடையென்ன? இந்த ஆனந்தம் தமிழ்ப்பாஷை முழுவதும் நிரம்பியிருக்கிறது என்பதைக் குறிப்பிக்கவே, தமிழ் எழுத்துக்களின் முதலெழுத்தாகிய 'அ' என்பதும், இறுதி எழுத்தாகிய 'ன்' என்பதும் இந்நூற் பெயர்க்கு முதலும் இறுதியுமாக அமைந்தன.

இதன் விலை ரூபா 1-4-0

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-10-33 வரை விலை ரூ. 1.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

ஓம்
பரப்பிரஹ்மணே நம:

ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 19 | ஸ்ரீமுகஹு ஐப்பசிமீ கஉ — 1933ஹு அக்டோபர்மீ 17உ | பகுதி 4

கடவுள் வணக்கம்.

குன்றாத மூவுருவாய் அருவாய் ஞானக்
கொழுந்தாகி அறுசமயக் கூத்துமாடி
நின்றாயே மாயையெனும் திரையை நீக்கி
நின்னையார் அறியவல்லார் நினைப்போர் நெஞ்ச
மன்றாக அன்பக்கூத் தாடவல்ல
மணியேயென் கண்ணேமா மருந்தே நால்வர்க்கு
அன்றாலின் கீழிருந்து மோன ஞானம்
அமைத்தசின் முத் திரைக்கடலே அமரரேறே. (1)

திரையில்லாக் கடல்போலச் சலனந் தீர்ந்து
தெளிந்தருளும் பொன்போலச் செகத்தை எல்லாம்
கரையவே கனிந்துருக்கு முகத்தி லேநீ
கனிந்தபர மானந்தக் கட்டி இந்நாள்
வரையிலே வரக்காணேன் என்றாற் கட்டி
வார்த்தை சொன்னாற் சுகம்வருமோ வஞ்ச னேனை
இரையிலே இருத்திநிரு விகற்ப மான
இன்பநிஷ்டை கொடுப்பதையா எந்தநாளோ. (2)

ஆன மான சமயங்கள் ஆறுக்கும்
தான மாய்நின்று தன்மயங் காட்டிய
ஞான பூரண நாதனை நாடியே
தீன னேனின்பந் தேக்கித் திளைப்பதே. (3)

அன்ப ரெல்லாம் இன்பம் அருந்திடவும் யானொருவன்
துன்புறுதல் நன்றோநீ சொல்லாய் பராபரமே. (4)

அரும்பொருள் விளக்கம்

(1) இதனால் இறைவனை அறியும் அருமை கூறுகின்றார்.

(இ-ள்) அழியாத மூன்று உருவங்களாகியும், அருவாமாகியும், ஞானமுடி வாகியும், அறுசமயக் கூத்து ஆடியும் நின்றனையே ! மாயை என்கின்ற திரையை விலக்கி உன்னை உணரவல்லார் யார்? நினைம்பவர்களின் மனதையே நடன சபையாகக் கொண்டு ஆனந்தக்கூத்து ஆடவல்ல இரத்தினமே ! சநகாதி நால்வர்க்கு அக்காலத்தில் ஆலமரத்தின் கீழிருந்து மௌனஞானத்தினை உணர்த்தின சின்முத்திரா சாகரமே! தேவர்களுக்குள் உத்தமனே என்க.

பரம்பொருள் ஒன்றே வேறுவேறு வடிவங்கொண்டு ஆக்கல் அளித்தல் அழித்தல் ஆகிய மூத்தொழில்களைச் செய்தலின் "மூவுருவாய்" என்றனர். அறு சமயத்தினருக்கும் அவரவர்கள் தியானிக்கும் மூர்த்தி பேதங்கள தானாய் நின்று அருள் சுரந்து வருதலின் "அறுசமயக் கூத்தும் ஆடி"என்றனர்.

(2) இதனால் நமக்கு இன்பநிஷ்டை கைகூடவேண்டும் என்று விரும்புகின்றார்.

(இ-ள்) அலையற்ற சமுத்திரம்போல அசைவற்றுத் தெளிவாகி உருகுகின்ற பொன்போல உலகத்தையெல்லாம் இளகிக்கரைய உருக்குமிடத்தில் நன்றாய் உருகிநின்ற பரமசுகத்தைக் கொடுப்பதாகிய பொன்கட்டி நிலையாயிருக்கிறாய். ஆனால் இந்நாள்வரையில் நீவரக்கண்டிலேன். என்னால் நிர்ப்பந்திக்கப்பட்டுச் சும்மா பேசப்படுவதால் இன்பம் உண்டாகுமோ? வஞ்சகனாகிய என்னைச் சோற்றுத் துருத்தியாகிய உடம்பிலே இருக்கச்செய்து விகற்பம் இல்லாத சுகத்தைத் தருகின்ற நிஷ்டையை அனுக்கிரகிப்பது எந்தக்காலமோ அறிகிலேன் ஐயனே !

அலையற்ற சாகரம்போலச் சித்தம் அசைவறத் தெளிந்து நின்றகாலத்தில் அருள் அடைதற்கு ஏதுவாம் ஆகலின் "திரையில்லாக் கடல்போலச் சலநந் தீர்ந்து" என்றனர். மாயா காரியமாகிய பிரபஞ்சத்தின் உண்மையை ஆராய்ந்து, அது நிலையற்றதெனத் தேர்ந்து, பிரபஞ்ச வாசனை சிறிதுமின்றி நின்ல அவசரத்தில் முதல்வன் வெளிப்படுவானாகலின் "தெளிந்துருகும் பொன்போலச் செகத்தையெல்லாம் கரையவே கனிந்துருக்கு முகத்திலே நீ கனிந்த பரமானந்தக்கட்டி" என்றனர். அங்ஙனம் பிரபஞ்சத்தின் உண்மையைத் தோராதலால் நீ வெளிப்பட இல்லை என்பார் "இந்நாள்வரையிலே வரக்காணேன்" என்றனர்.

(3) இதனால் இறைவனை அடைந்து இன்பம் அநுபவிப்பேன் என்கிறார்.

(இ-ள்) பெருமை பொருந்திய ஆறு சமயங்கட்கும் இடமாய் நின்று தன்னுருக்காட்டிய ஞான நிறைவுள்ளவனாகிய தலைவனை நாடி எளியனேன் இன்பத்தைப் பூரணமாய் அநுபவிப்பேன் என்க.

நூற்றுக்கணக்காக விரிந்து கிடக்கும் பற்பல சமயங்களும் அறுவகைச் சமயத்துள் அடங்குமாகலின் "சமயங்கள் ஆறுக்கும்" என்றனர்.

(4.) (இ-ள்) பராபரமே! உன்னுடைய அன்பர்கள் எல்லாரும் இன்பத்தை அநுபவித்துக்கொண்டிருக்க நான் ஒருவன் மாத்திரம் துன்பத்தை அநுபவித்துக் கொண்டிருத்தல் உனக்கு அழகுதானோ? நீயே சொல்வாய் என்க

ஆனந்தபோதினி
ஸ்ரீமுகஷூ
ஐப்பசிமீ 1௨

உண்மைத் தீபாவளி எது?

அடுத்த புதன்கிழமை தீபாவளி. நமது நாடெங்கும் தீபாவளி ஒரு சிறந்த பண்டிகையாகக் கொண்டாடப்படுகிறது. நம் மக்கட்குப் பண்டிகைகளில் பற்று அதிகம். கடன்பட்டேனும் பண்டிகைகளைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்றே விரும்புகின்றார்கள். இந்துக்களுக்கு பண்டிகைகட்கு குறைவில்லை. அநேகமாய் ஆண்டெல்லாம் பண்டிகைகளும் திருநாள்களும் நிறைந்திருக்கின்றன. ஒவ்வொரு நாளும் திதியும், நக்ஷத்திரமும் ஹிந்துக்களுக்குச் சிறந்தனவே யாகும். ஆனால் அவர்கள் அவைகளைக் கொண்டாடும் முறைகள் பொருளற்றவைகளாக இருக்கின்றன. பண்டிகைகள் எல்லாம் பண்டைக்காலத்தில் எந்நோக்கங்கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டனவோ அந்நோக்கம் இப்பொழுது பாழடைந்து விட்டது என்றே கூற வேண்டும். இக்காலத்தில் பண்டிகைகள் உயிரற்ற பிணங்களாகிவிட்டன—சத்தற்ற சக்கைகளாகிவிட்டன என்று கூறுவது மிகையாகாது. தேவாலய உற்சவாதிகளும் இவ்விதமே வீண் செலவுகட்குக் காரணங்களாக இருக்கின்றன.

தீபாவளிப் பண்டிகையின் நோக்கம் என்ன? தத்துவம் என்ன? மக்கள் அதை எவ்வாறு கொண்டாட வேண்டும்? அதன் நோக்கத்தையும் தத்துவத்தையும் வாழ்க்கை முறையில் எவ்விதம் பயன்படுத்த வேண்டும்? என்ற உண்மைகளை ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ள வேண்டும். தெரிந்துகொண்டு வாழ்க்கையை வளம்படுத்த முயல வேண்டும்.

தீபாவளிப் பண்டிகை ஆண்டுதோறும் ஐப்பசிமீ கிருஷ்ண பக்ஷ திரயோதசி இரவில் [illegible]துர்த்தசி சம்பந்தம் அடைகையில் உல

கத்தைத்துன்புறுத்தித் துன்ப இருள் மூடச் செய்திருந்த—பிராக்சோதிடபுரியாண்ட நரகாசுரனைக் கண்ணன் கொன்றதின் பொருட்டுக் களிப்பினால் எண்ணெயிட்டு ஸ்நானம் செய்து விளக்கிட்டுக் களிப்பதின் நினைவுக் குறியாக வருவது. நரகாசுரன் உலகமக்களைப் பெரிதும் துன்புறுத்தினான். அவனது கொடுமை அக்காலமக்கட்குச் சகிக்க முடியாததா யிருந்தது. அவர்கள் தங்கள் சொந்த வீடுகளில் நிம்மதியாயிருந்து காலங்கழிக்கவும் அஞ்சினர். அடுப்புக்களில் தீமூட்டிச்சமையல்செய்யவும் அவர்களால் முடியவில்லை! வீடுகளில் விளக்குகளை வைக்கவும் அஞ்சினர். எங்கும் இருள். எல்லாருடைய உள்ளங்களிலும் துன்ப இருள். என்ன செய்வர்? கண்ணனை வேண்டினர். கண்ணபிரானும் அத்துஷ்டனை நிக்கிரகம் செய்து சிஷ்டர்களைக் காத்தனன். எல்லாரும் விடுதலை இன்பம் நுகர்ந்தனர். பலநாள் இருள் சூழ்ந்து கிடந்த இல்லங்களில் விளக்குகளை வரிசை வரிசையாக வைத்துக் களித்தனர். பலநாள் எண்ணெயிட்டு ஸ்நானம் செய்ய முடியாதிருந்தவர்கள் உடல் குளிர உள்ளங் குளிர எண்ணெய் ஸ்நானம் செய்தனர். புத்தாடைகளை அணிந்தனர். பலகார பக்ஷணங்களைக் கண்ணனுக்குப் படைத்து உண்டு களித்தனர். எங்கும் மகிழ்ச்சி. எங்கும் மங்களம், அந்த விடுதலைநாளே அடுத்த புதன்கிழமை வருகிறது. நேயர்களே! நாம் இப்பொழுது அந்த விடுதலை இன்பம் நுகர்ந்து கொண்டிருக்கின்றோமா என்று சற்றே சிந்தியுங்கள்! சிந்தியுங்கள் !!

அந்தக்காலத்தில் ஒரு நரகாசுரன் மக்களைத் துன்புறுத்தி வாட்டினான். இந்தக்காலத்திலோ? கொடுமை! கொடுமை!! எத்தனை நரகாசுரர்கள் நம்மை வாட்டி வருகின்றனர் என்பதைக் கூர்ந்து கவனியுங்கள். நமது நாட்டில் கல்வியில்லை. நூற்றுக்குத் தொண்ணூறு பேர் எழுத்து வாசனையற்ற மூடப்பூச்சிகளாய்க் காலங் கழித்துவருகின்றனர். எனவே அறியாமை என்னும் நரகாசுரனது கொடுமை பொறுக்க முடியாததாய் இருக்கின்றது. நமதுநாட்டில் நல்ல விவசாயமுறை இல்லை. கைத்தொழில் இல்லை. வர்த்தகம் இல்லை. எனவே வறுமை என்னும் நரகாசுரன் அட்டகாசம் செய்துகொண்டிருக்கிறான். நமது நாட்டில் அறியாமையும் வறுமையும் குடிகொண்டிருப்பதால் பலவிதப் பிணிகளான நரகாசுரர்கள் மக்களை விழுங்கிக்கொண்டிருக்கிறார்கள். இம்மட்டோ? கள்-சாராய நரகாசுரர்களும், அன்னியத் துணி நரகாசுரர்களும் செய்யும் கொடுமைகளை எம்மொழிகொண்டு வருணிப்பது என்று எமக்கு விளங்கவில்லை. இத்தனை நரகாசுரர்களும் கோடிக் கணக்கான ஏழை மக்களைத் துன்புறுத்திக் கொண்டிருக்கும்போது நீங்கள் ஆண்டுதோறும் தீபாவளிப் பண்டிகையை எப்படிக் கொண்டாடுகிறீர்கள் என்று கேட்கின்றோம். பட்டாசு போன்ற அர்த்தமற்ற வேடிக்கைகளில் பாடுபட்டுத் தேடிய பொருளைக் கொட்டிவிடுகிறீர்கள். பகட்டான அந்நியத் துணிகளில் மோகம் வைத்துப் பொருள்களை வீண்

விரயம் செய்து வருகிறீர்கள். சுகாதார முறைக்கு முரண்பட்ட வகையில் பலகார பக்ஷணங்களைச் செய்து உண்டு உடம்புகளைக் கெடுத்துக்கொள்ளுகிறீர்கள். இதுவா தீபாவளி நாளைக் கொண்டாடும் முறை? சிலர் இந்நாளில் கள் சாராயங்களைக் குடித்து மயங்கித் திரிகின்றனர். ஆடு கோழிகளை அதம்செய்து தின்கின்றனர். நமதுநாடு அடிமைப்படுகுழியிலாழ்ந்து பற்பல நரகாசுரர்களின் கொடுமைகட்கு உட்பட்டிருக்கும்போது நீங்கள் தீபாவளிப் பண்டிகை கொண்டாடும்முறை இதுவா? என்று கேட்கின்றோம். இப்பொழுது நமக்கு வேண்டியது விடுதலை. அந்த விடுதலைக்கு ஆக்கம் அளிக்கும் வழியில் பழைய தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடவேண்டும் என்று விரும்புகின்றோம். அந்த வழி என்ன? அந்நிய ஆடை வாங்கி அலங்கரிப்பதல்ல; பட்டாசு சுட்டுக் கரியாக்குவதல்ல; பலகார பக்ஷணங்களுண்டு அஜீரண நோய்க்குட்படுவதல்ல. நமக்கு விடுதலை வழிகாட்ட மகாத்மா காந்தியடிகள் அவதரித்திருக்கிறார். அஹிம்ஸா தர்ம வழியில் நம்மை வாட்டும் நரகாசுரர்களை வதைக்க வழிகாட்டுகிறார்.

நமது நாட்டுமக்கள் அச்செந்நெறியிற் சென்று விடுதலை இன்பம் நுகரவேண்டும் என்று விரும்புகின்றோம். இன்றேல் பழைய நரகாசுரன் வதையை நினைத்துக்கொண்டு இப்பொழுது பட்டாசு சுடுவதிலும், புத்தாடை புனைவதிலும், பலகார பக்ஷணம் உண்பதிலும் ஏதேனும் பொருளுண்டா என்று கேட்கின்றோம்.

காந்தியடிகள் உலகத்தை உய்விக்க வந்த உத்தமர் என்று எல்லாரும் போற்றுகிறார்கள்—கொண்டாடுகிறார்கள். சமீபத்தில் "காந்தி ஜயந்தி" வாரமும் நாடெங்கும் கொண்டாடப்பட்டது? இந்தக் கொண்டாட்டத்தின் கருத்தென்ன? நமது நாட்டில் திருவிழாக்களுக்கும் பண்டிகைகட்கும் பஞ்சமாகி விட்டதினாலா "காந்தி ஜயந்தி" விழா ஏற்பாடு செய்யப்பட்டது? அப்படி யொன்றும் இல்லை என்பது தெளிவு. காந்தியடிகள் மேற்கொண்டுள்ள அஹிம்ஸாதர்ம தத்துவமும் சத்தியமும் நாடெங்கும் பரவவேண்டும். சாதிசமயவேற்றுமை நீங்கி ஒற்றுமை ஏற்படவேண்டும். தாழ்த்தப்பட்ட மக்கட்கு விமோசனம் கிடைக்கவேண்டும். சிறப்பாகக் கதரும் பொதுவாகச் சுதேசிப் பொருளும் பெருகவேண்டும். இவைகளை நிறைவேற்றி வைப்பதின் மூலம் நமது மக்கள் விடுதலை இன்பம் நுகரவேண்டும். இவைவே "காந்தி ஜயந்தி" விழாவின் நோக்கம். வரப்போகிற தீபாவளிப் பண்டிகைக் கொண்டாட்டம் இந்நன்னோக்கத்தைப் பூர்த்தி செய்யவேண்டும் என்று விரும்புகின்றோம். தீபாவளிப் பண்டிகையை நாம் இக்காலத்தில் கொண்டாடுவதாயிருந்தால் மேலே காட்டிய உண்மைகளை எல்லாரும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். காந்தியடிகள் வாழ்க. புதிய நரகாசுரர்கள் அழிக. 'வந்தே மாதரம்'.

ஓம் தத் ஸத்.

சன்மார்க்க சற்போதங்கள்

தெல்லிப்பழை—கா. சின்னப்பா

அஞ்சா நெஞ்சனாய்த் துஞ்சும் வரையிரு
ஆன்ம தரிசனம் நூன் முறைப்படி செய்
இன்பம் சுகிக்கத் துன்பம் புரியேல்
ஈசனைப் போற்றிப் பாசம் விலக்கு
உற்சாகத்தால் நற்பய னடை நிதம்
ஊரவர் மெச்ச நேர்வழி தேடு
எல்லாராலும் நல்லவ னெனப் படு
ஏற்பவர் தம்மைத் தூற்றுத லொழி நீ
ஐந்து புலன்களின் பந்த மகற்று
ஒற்றுமை யென்றும் வெற்றிக் குறுதுணை
ஓர்ம மிக்கோரை ஆர்வம் சாரும்
ஔவையின் போதனை செவ்வையாய் நீ படி
கன்னியர் கற்பைப் பொன்னெனப் போற்று
காலத்திற் கேற்ற கோலத்தை நாடு
கிரக நிலைப்படி அரனரு ளணையும்
கீழ் நிலையோரை யெந்நாளும் நீபார்
குலத்திற் கேற்ற நலத்தைத் தாங்கு
கூடா நட்பை நாடா திருநீ
கெதியாயெதையும் விதி முறைப்படி செய்
கேட்டி லுன்னை மாட்டிக் கொள்ளாதே
கையாற் கெட்ட தையலைத் தொடாதே
கொலைகள விரண்டும் பலஇடர் விளைக்கும்
கோடணை பவரைக் கேடு தொடரும்
சற்குணம் நாடித் துர்க்குண மகற்று
சாதிப் பெருமை வேதனை விளைக்கும்
சித்த சுத்தியாய் அத்தனருள் பெறு
சீவியம் முழுவதும் பாவிகள் பற்றொழி
சுருங்கச் சொல்லி அருங்கருத் தமைத்திடு
சூழ விருக்கும் கேளிரைப் பேணு
செல்வம் சேர்க்க நல்வழி நாடு
சேர்ந்தோர் தம்மைச் சார்ந்துணை தாங்கு
சையென் றெவரையும் வையச் செய்யேல்
சொற்சோர் வற்றோர் நற்பயனடைவர்

சோர்விலா மனது ஆர்வ மளிக்கும்
தன்னயங் கருதா நன்மகனா யிரு
தாங்கருங் கஷ்டமும் பாங்குடன் தாங்கு
தினமு மெம்பரனை நினைவில் நிறுத்து
தீயவை யனைத்தும் நீயகற் றிடுவாய்
துன்ப மெதுவும் அன்பை யகற்றும்
தூய்மை யுடையோர் வாய்மையை வழுத்து
தெய்வ பக்தியால் உய்வதற் கெண்ணு
தேடித் திருவருள் வீடடைந்திட நினை
தையலர் குணங்களை மெய்யா யறிந்திடு
தொழில்பல கற்றவர் எழிலுற வாழ்வர்
தோகையர் கண்வலை சாரும்வரை மற
நன்றி செய்தோரைப் பொன்றும் வரைநினை
நாட்டின் நன்மைக் கீட்டிய பொருள்கொடு
நிந்தைசெய் தெவரையும் நைந்திடச் செய்யேல்
நீற்றைப் புனைந்து நீபோற்றிடெம் மீசனை
நுட்பமா யெதையும் பெட்புடன் செய்திடு
நூல்பல கற்றுநற் சால்புட னொழுகு
நெசவு தொழில் புரிந்திசை பெற்றிடுவாய்
நேர்மை நெறியில் ஆர்வமாய் நீநில்
நைந்து வருந்திச் சிந்தை கெடாதே
நொய்ய வுரைப்பவர் செய்வர் மாஃகடு
நோய்பல தாக்கின் மாய்வது நிச்சயம்
பயமதை யொழித்து ஜெயம்பெற வெண்ணு
பாலரைப் போலச் சீலமா யொழுகு
பிறர் பொருளாசை பிறவி பெருக்கும்
பீடுடை யதைநீ நாடிடு என்றும்
புன்மையை நீக்கி நன்மையை நாடு
பூசுரர்தமை நிதம் பூசனை செய்திடு
பெறற்கரும் தவத்தை அறத்தாற் பேணு
பேசுவதெதற்கும் யோசனை வேண்டும்
பைகொடு வருபவர்க் கையமிடுநீ
பொன்றுங் காலம் என்றுங் காத்திரு
போலிச் சைவரின் சாலம் வெறுத்திடு
மரணத்தை யென்றும் திரணமா யெண்ணு
மாதரின் சொற்படி பேதையர் நடப்பர்
[illegible] பெருமை கொள்ளாதே

மீனா வசைக்கு ஆளாகாதே
முப்புர மெரித்த அப்பனை வணங்கு
மூன்று பாசமும் தோன்றா தடக்கு
மெச்சத் தக்கதை அச்சமிலாது செய்
மேட்டிலுன் வீட்டை நாட்டிடு என்றும்
மைவிழியார் மேல் மையலை நீக்கு
மொழிவ தெதனையும் அளவறிந்தே மொழி
மோகமடக்கி ஏகனை யேத்து
வருத்த முறினும் தாத்திடு கவலையை
வாழ்வை விரும்பின் ஊழ்வலி நீக்கு
விடுதலை வேண்டின் நடுநிலை நாடு
வீட்டுச் செல்வம்நற் தேட்டமெனத் தகும்
உலக வாழ்வில் மலைவுறா திருந்திடு
ஊக்கமாய்த் தீமையை நீக்க முயற்சிசெய்
வெற்றியை யென்றும் பெற்றிட எண்ணு
வேத நாதனின் பாதம் பற்றிடு
வைராக்கியத்தாற் தைரியங் கூடும்
ஒருவரை யேனும் அரு வருக்காதே
ஓடெடுத்தேனும் வீறு முயற்சி செய்

வெளி நாட்டு ஜீவிய சந்தாதார்

தென்னாபிரிகா—நெட்டால் டர்பனில் வசிக்கும் ஸ்ரீமான் பி. ரத்தினவேல் பத்தர் அவர்கள் நமது "ஆனந்த போதினி" மாத சஞ்சிகையின் ஜீவிய சந்தாதாராகச் சேர்ந்துள்ளார்கள். அவர்கட்கு எமது மனமார்ந்த நன்றி உரிமை, வெளி நாட்டில் வசிக்கும் நமது அன்பர் ஸ்ரீமான் பத்தரவர்களின் தமிழ் மொழிப்பற்றும் தாய் நாட்டுப் பற்றும் பெரிதும் போற்றத்தக்கவையாகும். ஸ்ரீமான் பி. ரத்தினவேல் பத்தரவர்கள் எல்லாச் செல்வமும் பெற்று இனிது வாழுமாறு பல்லாண்டு கூறுகின்றோம்.

பத்திராதிபர்.

உள்ள நூல்

திரு. மா. பாலசுப்பிரமணியம், பி. ஏ.

நினைவு மீட்சி (Recall)

பாடம் பண்ணவேண்டிய முறையில் பாடம் பண்ணப்பட்டு, உள்ளத்தமைக்க வேண்டிய முறையில் உள்ளத்தமைக்கப் பட்ட பொருள்கள், வேண்டுங்கால், யாதொரு தடையுமின்றி, மீண்டும் நினைவுக் குட்படுவது, நினைவு மீட்சி என்று சொல்லப்படும். இதை ஆங்கிலத்தில் ரீகால் (Recall) என்பார்கள். இதன் தன்மைகளைப்பற்றி இங்கு ஆராய்வோம்.

நான் ஒரு சாலை வழியாகப் போகின்றேன்; எதிரில் ஒருவரைச் சந்திக்கின்றேன்; இவர் எனக்கு அறிமுகமானவர்; இவருடைய பெயர் எனக்குத் தெரியும்: ஆனால் இப்பொழுது இவருடைய பெயர் என் நினைவுக்கு வரவில்லை. இதற்கு என்ன காரணம்? "நெஞ்சிலேயே இருக்கின்றது; ஆனால் நினைவுக்கு வரவில்லை" என்னும் பொது மொழியும் நாம் கேட்டிருக்கின்றோம். இந் நிலைமைக்கு என்ன காரணம்? ஒரு மாணவன், ஒரு கேள்விக்குப் பொருத்தமான விடையை அறிந்திருந்தும் தவறான விடையை எழுதிவிட்டு, பிறகு தன் தவறை உணர்கின்றான். அவனுடைய நினைவின்மைக்குக் காரணம் என்ன? இவை போன்ற கேள்விகளுக்கு நாம் விடைகூற முயல்வோம். எவ்வகையான மறதிக்கும் நினைவுக் குறைவுக்கும் காரணம் நினைவுத் தடையே. ஆனால், இந்த நினைவுத்தடை நேர்வதற்குரிய சார்புகள் பல. அவைகளை ஒரு முறையில் கீழே குறிப்போம்.

(1.) மெய்ப்பாடுகள் (Emotions).

(அ.) அச்சம் (Fear).

(ஆ.) நாண நடுக்கம் (Stage fright).

(இ.) பொய்யடக்கம் (Anxious Self-consciousness)

(2.) இருவகை நினைவு எழுச்சிகளினால் நேரும் மாறுபாடு.

சில மாணவர்கள் தங்கள் பாடங்களை நன்றாய் கற்றிருப்பார்கள். ஆனால் கையில் கோலுடன் நிற்கும் ஆசிரியரைக் கண்டவுடன், அச்சத்தின் மிகுதியால் நினைவு மழுங்கித் தம் பாடங்களைக் கூற முடியாதவர்களாகின்றனர்.

சொற்பொழிவாளர் ஒருவர் தாம் ஒரு அவையின் கண் பேசவேண்டிய பொருள்களை ஒரு ஒழுங்கு படுத்தி நல்ல முறையில் பேசுதற்குத் தம் வீட்டில் முன்னரே பழகிக் கொள்கிறார். ஆனால் அவைக்களம் சென்று, மேடையின்

மேல் ஏறி நின்று அவையிலுள்ளாரை நோக்கும்பொழுது ஒரு வகை நாணத்தால் நடுக்குற்று, தம் பணியை ஆற்ற இயலாதவராகின்றார். ஒரு சீர்திருத்தக்காரர் தம் கொள்கைகளைப் பற்றி ஒரு விரிவுரை நிகழ்த்த ஒரு அவையின்கண் புகுகின்றார். தம்முடைய சொல்வன்மையில் தமக்கே நம்பிக்கை யில்லாமையாலும், 'இச் சீர்திருத்தக் கொள்கைகளைக் கூற நாம் தகுதியுடையோம் அல்லம்' என்னும் ஐயத்தாலும் ஒரு வகையான பொய்யடக்கம் மிகுதிபட்டுத் தம் பணியைச் செய்யாது ஒழிகின்றார். சாலையில் எதிர்பட்டவரின் பெயரை நினைவுக்குக் கொண்டுவர முயலும் ஒருவருக்கு இரண்டு பெயர்கள் ஏற்புடை பெயர்களாகத் தோன்றுகின்றன. இவை யிரண்டில் எது எதிர்ப்பட்டவரின் உண்மைப் பெயர் என்று துணிய இயலவில்லை. இது நாம் மேற்கூறிய இரு வகை நினைவு எழுச்சிகளினால் நேரும் மாறுபாட்டுக்கு ஓர் எடுத்துக் காட்டு.

குறைபட்ட நினைவு மீட்சி (Partial recall)

நாம் ஒருகால் கற்றவைகளையும் கேட்டவைகளையும் பன் முறை நினைத்துப் பழகாம விருப்பின், காலக் கழிவில் அவை மறதியின்வாய்ப் படுகின்றன. எனவே, வேண்டுங்கால், அவை யாவும் முழு நினைவு மீட்சிக்கு உட்படுவதில்லை. குறைபட்ட நினைவு மீட்சியே நிகழ்கின்றது. சில எடுத்துக் காட்டுகளை இங்கு குறிப்போம். பல ஆண்டுகளுக்கு முன்னர் 'பாரதச் செல்வன்' என்னும் நூலை நான் படித்தேன். இப்பொழுது நான் அந்நூலின் பெயரை நினைவுக்குக் கொணர முயலும் பொழுது 'பாரத புத்திரன்', 'பாரத பாக்கியம்' 'பாரத மைந்தன்' என்ற பெயர்கள் நினைவில் எழுகின்றனவே தவிர 'பாரதச் செல்வன்' என்னும் பெயர் தோன்றவில்லை. இது ஒரு வகையான குறைபட்ட நினைவு மீட்சி. சில சமயங்களில் நாம் சில பழமொழிகளையாதல் சில சொற்களையாதல் நினைவுக்குக் கொணர முயற்சிக்கும் பொழுது, ஒத்த பொருள்களைக் கொண்ட வேறு பழமொழிகளும் சொற்களும் மனத்தின் கண் எழுகின்றனவே தவிர நாம் வேண்டியவைகள் நினைவுக்குத் தோன்றுவதில்லை. இதுவும் ஒரு வகையான குறைபட்ட நினைவு மீட்சி. இதற்குச் சில எடுத்துக் காட்டுகளைப் பகர்வோம். 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்னும் முது மொழியை நினைவு கூரும் பொழுது 'தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை' என்னும் முது மொழியாவது, 'தாய் சொல் துறந்தால் வாசகமில்லை' என்னும் முது மொழியாவது, நினைவில் எழுகின்றது. அவ்வாறே 'வெற்றி வீரன்' என்பன போன்ற சொற்களை நினைவு கூரும்பொழுது, ஒத்த பொருளையுடைய 'ஜயதீரன்' என்பன போன்ற சொற்கள் நினைவின் கண் எழுகின்றன. சில சமயங்களில் எச் சொல்லை நாம் நினைவுக்குக் கொணர விரும்புகின்றோமோ, அச் சொல்லைப்போல ஒலிக்கும் பிறிதோர் சொல் நினைவில் எழுகின்றதே யொழிய வேண்டப்பட்ட சொல் மனத்தின் கண் தோன்றுவதில்லை. இதுவும் ஒரு வகையான குறைபட்ட நினைவு மீட்சியாம். இதற்குச் சில எடுத்துக் காட்டுகளை வரைவோம். 'நேத்ர சிகாமணி' என்பன போன்ற சொற்களை நினைவு கூரும்பொழுது 'சாந்த சிந்தாமணி' என்பன போன்ற ஒலித் தொடர்புடைய சொற்கள் நினைவின்கண் தோன்றுகின்றன. இவ் வுண்மையை உணர்ந்தே நம் தமிழ் நாட்டுப் பழம் புலவர்கள் எதுகை, மோனை என்னும் ஒலிச் சார்புள்ள குறிகளைச் செய்யுளிலக்கணத்தில் புகுத்தினார்கள்.

குழவிப் பருவ நுகர்ச்சிகளின் நினைவு மீட்சி (Recall of childhood experiences)

குழவிப் பருவத்தில் நிகழ்ந்தவைகளை நினைவு மீட்சிக்கு உட்படுத்தல் முதியவர் யாவர்க்கும் ஒத்த அளவில் இயல்வதல்ல. சிலர் தம் ஐந்தாம் அல்லது ஆறாம் ஆண்டில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை இறுதி நாள் வரை நினைவுக்குக் கொண்டு வருவார்கள். சிலருக்குத் தம்முடைய பத்தாம் ஆண்டுக்கு முன்னர் நடந்த நிகழ்ச்சிகள் நினைவுக்கு வருவதில்லை. இவ் வேற்றுமைக்குக் காரணம் என்ன? காலக் கழிவாலும், பழக்க மின்மையாலும் உள்ளத் தமைத்த பொருள்கள் நழுவி விடுகின்றமையே காரணமாம். சிலர் அடிக்கடித் தம் குழவிப் பருவ நிகழ்ச்சிக்களை நினைப்பூட்டிக் கொள்வதால் அவர்களுக்கு அத் தன்மையில் மறதி ஏற்படுவதில்லை. மறதிவாய்ப்பட்டவைகளையும் வருந்தி முயன்றால் நினைவுக்குக் கொணர வியலும், என்பது உள்ள நூற் புலவர்களுடைய கொள்கை. அதற்கெனச் சில சாதகங்களையும் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். ஆங்கிலத்தில் அவைகள் ஹிப்னாடிஸம் (Hypnotism), கிறிஸ்டல் கேஸிங் (Crystal gazing), ஆடோமேடிக் ரைடிங் (Automatic writing) என்று சொல்லப்படும். தமிழில் அவைகளை முறையே நுண்ணுடற் படுத்தல், பளிங்கு நோக்கல், கருத்தின்றி வரைதல் என்று கூறலாம். இவைகளைப்பற்றி பிறிதோர் இடத்தில் வரைவோம்.

நினைவு மீட்சிச் செய்கை (The Process of recall)

கற்றலினால் நாம் உண்மைகளைக் காரண காரிய முறையிலும், இடத் தொடர்பு காலத் தொடர்புகளாலும், முக்கிய முண்மை முக்கிய மின்மை என்னும் வேற்றுமை உணர்ச்சிகளாலும், ஒரு முறையாக உணர்கின்றோம். உள்ளத் தமைத்தலினால் நாம் கற்ற உண்மைகளை மனத்தின்கண் நன்கு பதிய வைக்கின்றோம். நினைவு மீட்சியினால் அவ்வுண்மைகளை எளிதில் நினைவுக்குக் கொண்டுவருகின்றோம்.

நினைவு மீட்சிக்குச் சாதகமான நினைவுத் தூண்டிகள் (The cue or stimulus to recall)

பல ஆண்டுகளுக்கு முன்னர், ஒருவர், திருமுருகாற்றுப்படையை நன்றாக ஊன்றிப் படித்திருக்கின்றார் என்று வைத்துக்கொள்வோம்; இப்பொழுது அவரை முருகன் திருவுருவத்தைப் பற்றி அந்நூலில் காணப்படும் அடிகளைக் கூறும்படி கேட்கின்றோம். 'முருகன் திரு வுருவம்' என்ற சொற்கூட்டைக் கேட்ட மாத்திரத்தில் அவ்வடிகளை அவர் கூறுவாரா? அல்லது முதலடியை அவருக்கு நினைப்பூட்டின பிறகு அவ்வடிகளைக் கூறுவாரா? என்பது ஐயம். ஊக்கத்துடனும் ஆர்வத்துடனும் கற்க வேண்டிய முறையில் கற்று உள்ளத் தமைக்க வேண்டிய முறையில் அமைத்திருப்பாரே யானால், முருகன் திரு வுருவம் என்னும் சொற்கூட்டே அவருக்கு ஒரு நினைவுத் தூண்டியாக விருந்து அவர் அவ்வடிகளை விரைவில் கூறுவார். சிலர், தலையடியை நினைப்பூட்டின பிறகு தான் தம் நினைவு தூண்டப் பெறுவர். முருகன் திருவுருவத்தைப் பற்றி அந்நூலில் கூறப்பட்டவை யனைத்தையும் 'முருகன் திரு வுருவம்' என்னும் ஒரு சொற்கூட்டில் புகுத்தி உணர்கின்றவன் நினைவு மீட்சியில் வல்லவன். அவனுக்கு ஒரு பொருளை நினைப்பூட்ட வேண்டுமானால் நாம் விரிவாக

ஒன்றும் கூறவேண்டியதில்லை; நினைவைத் தூண்டத் தகுந்த ஒரு சொல்லே அமையும்.

எதிர்ந்தவை உணர்தல் (Recognition)

சில ஆண்டுகளுக்கு முன்னர் நான் ஒருவரை ஓரிடத்தில் கண்டு அளவளாவினேன் என்று வைத்துக்கொள்வோம். இன்று அவரை நான் ஒரு சாலையில் எதிர்ப்பட்டேன். உடனே, சில ஆண்டுகளுக்கு முன் நம்மால் காணப்பட்டவர் இவர் என்பதை உணர்கின்றேன். இது, எதிர்ந்தவை உணர்தல் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு. சில திங்கள்களுக்கு முன்னர் ஒரு பெரியாருடைய சொற்பொழிவைக் கேட்கும்பொழுது அவர் ஒரு புதிய நூலைக் குறிப்பிட்டுப் பேசினார் என்று வைத்துக்கொள்வோம். பிறகு, பிறிதோரிடத்தில் வேறோர் புலவர் அதே புதிய நூலைக் குறிப்பிட்டார். உடனே "அது முன்னர் நாம் அப்பெரியார் கூறக் கேட்ட நூல்" என்று உணர்கின்றேன். இதுவும் எதிர்ந்தவை உணர்தலுக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

நினைவு மீட்சியில் எவ்வாறு முழு நினைவு மீட்சி, குறைபட்ட நினைவு மீட்சி என இரண்டு வகைகள் உள்ளனவோ, அவ்வாறே எதிர்ந்தவை யுணர்தலிலும் முழுமையும் எதிர்ந்தவை யுணர்தல், குறைபட்ட எதிர்ந்தவை யுணர்தல் என இரு வகைகள் உள. மேல்கூறப்பட்டுள்ள இரண்டு எடுத்துக் காட்டுகளும் முழுமையும் எதிர்ந்தவை யுணர்தலுக்கு உரியன. "எங்கோ பார்த்ததுபோலிருக்கின்றது; ஆனால் நினைவுக்கு வரவில்லை" என்பதும் "பழக்கமான முகம் போலிருக்கின்றது; ஆனால் எங்கே பார்த்ததென்று நினைவுக்கு வரவில்லை" என்பதும் குறைபட்ட எதிர்ந்தவை யுணர்தலுக்கு எடுத்துக்காட்டுகள்.

எதிர்ந்தவை உணர்தலின் குற்றங்கள் (Errors of recognition)

சில சமயங்களில் நாம் ஒரு பொருளைக் கண்டு 'அது முன்னர் எங்கோ கண்டது போலிருக்கின்றது' என்று நினைக்கின்றோம். ஆனால் உண்மையில் முன்னர் கண்ட பொருளை யொத்த வேறொரு பொருளையே நாம் முன்னர் கண்ட பொருளாக நினைக்கின்றோம். இக்குற்றத்துக்குக் காரணம் இரண்டு பொருள்களுக்குமிடையே உள்ள ஒரு ஒற்றுமைத் தன்மையே யாகும். ஒரு பொருளைக் கண்டவுடனாவது கேட்டவுடனாவது "இது முன்னர் நாம் கண்டது அல்லது கேட்டது" என்று விரைவில் உணர்ந்தால் அது குற்றமற்ற எதிர்ந்தது உணர்தலாம். சற்று தாமதப்பட்டால் ஐயமாவது தவறாவது நேர்கின்றது என்பது தெளிவு. முன்னர் கண்டிராத ஒரு பொருளைக் கண்டவுடன் "இது முன்னர் நாம் காணாதது" என உணர்தலும் குற்ற மற்ற எதிர்ந்தது உணர்தலின்பாற்படும். சிலர் எந்த புதிய இடத்திற்குச் சென்றபோதிலும் "இவ்விடத்திற்கு நான் முன்னர் வந்திருக்கின்றேன்; இது எனக்குப் பழக்கமான விடம்" என்று நினைக்கின்றார்கள். இது ஒருவகையான எதிர்ந்தவை யுணர்தலின் பாற்பட்ட குற்றமாம். இதை ஆங்கிலத்தில் "இல்யூஷன் ஆப் ஹேவிங் பீன் தேர் பிபோர்" ("Illusion of having been there before") என்பார்கள். இதை நாம் தமிழில் 'இல்லதை உளதென மயங்கும் எதிர்ந்தவை உணர்தற்பாற் பட்ட குற்றம்" என்று கூறலாம். சிலர் தமக்கு மிகவும் பழக்கமான பொருள்களைக் கண்டாலும் பழக்கமான இடங்களுக்குச் சென்றாலும் "இப்பொருளை நான் கண்டதில்லையே; இவ்விடத்திற்கு நான்

வந்ததில்லையே" என்று உண்மையாகவே நினைக்கின்றார்கள். இதுவும் எதிர்ந்தவை யுணர்தலின்பாற் பட்ட குற்றமாம். இதை ஆங்கிலத்தில் "பீலிங் அப் ஸ்ட்ரேன்ஜ்னெஸ்" ("Feeling of strangeness") என்பார்கள். இதை நாம் தமிழில் "உள்ளதை இலதென மயங்கும் எதிர்ந்தவை உணர்தற்பாற் பட்ட குற்றம்" என்று கூறலாம்.

நினைவுச் சாயல்கள் (Memory images)

நான் ஒரு பெரிய மலை வெளியைக் காண்கின்றேன்; ஒரு நீண்ட இன்னிசை நிகழ்ச்சியைக் கேட்கின்றேன். சில நாட்கள் கழித்து அவைகளை நினைப்பூட்டிக் கொள்கின்றேன். இச்சில நாட்களாக என் உள்ளத்தில் அக்காட்சியும் ஒலியும் இருந்தவாறு என்ன என்பது கேள்வி. மலை வெளியும் இசை யொலியும் மனத்தின்கண் எவ்வாறு தங்கின? உருவப் பொருள்களாய அவைகள் அருவப் பொருளாய மனத்தின் கண் எவ்வாறு பொருந்தி யிருந்தன? உள்ள நூற் புலவர்கள் இக்கேள்விக்குத் தகுந்த விடையளித்துள்ளார்கள். அதாவது, நாம் காண்கின்ற பொருள்களும் கேட்கின்ற ஒலிகளும் தம்முடைய சாயல்களை நம் மனத்தில் பதிக்கின்றன என்பதே. நினைவில் இச்சாயல்கள் பதிந்து கிடப்பதால் இவைகளுக்கு நினைவுச்சாயல்கள் என்று பெயரிடலாம். ஆங்கிலத்தில் இவை மெமரி இமேஜெஸ் (Memory Images) எனப்படுகின்றன. பொதுவாக விதிக்குமிடத்து "நினைவுச் சாயல்கள் என்பன புலனறி பொருள்களால் நினைவின் கண் பொறிக்கப்பட்ட சாயல்களே" எனக் கூறலாம்.

தோற்றந் தேற்ற மாக்கொளும் மயக்கம் (Hallucinations)

சில மன நோயுள்ளவர்கள், நாம் மேல் கூறிய நினைவுச் சாயல்களை மெய்ப்பொருள்களாகவே எண்ணி நடக்கின்றார்கள். நோய்வாய்ப்பட்ட தம் மனக்கண்ணுக்குத் தோன்றும் காட்சிகளை உண்மைக் காட்சிகளாகவே கொள்கின்றார்கள்: தோற்றங்களைத் தேற்றங்களாகவே மயங்குகின்றார்கள். தம் சீர்கெட்ட மனத்தில் தோன்றும் பொய்த் தோற்றங்களாகிய மனிதர்களை மெய் மனிதர்களாகவே கருதி அவர்களுடன் பேசவும் முயல்கின்றார்கள்.

நினைவு வளர்ச்சிப் பழக்கம் (Memory Training)

இதுகாறும் நாம் நினைவியல் என்னும் இவ்வியலில் கற்றவைகளினின் ஏற்படும் பயனென்ன? அல்லது நினைவை வளர்க்கும் வழிகள் எவை? என்பது பற்றி இப்பொழுது ஆராய வேண்டும். (1) பொருள் தொடர்புகள், ஒலித் தொடர்புகள் முதலியவைகளை நன்கு ஊன்றிக் கவனிக்க வேண்டும். (2) பா நடை அல்லது உரை நடை (style) என்பதைக் கவனிக்க வேண்டும். (8) கூறப்பட்ட கொள்கைகளை தொகை வகை விரிகளாக உணர வேண்டும். (4) தன்னுடைய நினைவு ஆற்றலில் (ஞாபக சக்தியில்) திட நம்பிக்கை கொள்ள வேண்டும். (5) பலகால் பன்னிக் கூறல். (6) இடையீட்டுடன் பலகால் நினைவு மீட்டல். இவ் வாறு வகைகளால் நாம் நினைவை, அதாவது, நினைவாற்றலை வளர்க்கலாம்.

ஹோமரும் வால்மீகரும்

(எஸ். கே. சாமி.)

பல்லாண்டு காலம் பழைமை படைத்த கதிரவனின் ஒளி இதுகாறும் மங்கி மாய்ந்தொழியாம லிருப்பது போலவே பழக்க வழக்கத்தின் பயனாக பழுதுறாத பல பொருள்கள் அவனியின்கண் உள. இலியட்-இராமாயணம்" இவை இரண்டையும் இவ்வினத்தில் கணித்தல் வேண்டற்பாலது. ஹோமர் கிரேக்காது தேசத்திலும், வால்மீகர் பாரத நாட்டிலும் தோன்றிய மாபெரும் புலவர்களென்பது மறக்கற்பால தன்று. "உடெஸி" "இலியட்" என்ற இரு அரிய காப்பியங்களை ஆக்கிய பெருமை ஹோமருடைய உரிமையேயாகும். உலகம் போற்றும் உயரிய காதையாம் இராம காதையை உலக மக்களுக்கு ஒதிய பெருமை வால்மிகருடைய தாகு மென்பது நோக்கத் தக்கதாகும். இந்தியராகிய நாம் இராம காதையை நன்கறிவோ மாதலின் அதைப்பற்றி இங்கு விவரித்துக் கூற வேண்டியதில்லை. ஆகவே இலியட் என்ற பிரபந்தத்தில் விவரிக்கப்பட்ட கதையை சுருக்கமாக குறிப்பிடுகிறோம்.

இலியா வென்பது ஓர் நகரத்தின் பெயராகும். இது ஆங்கிலத்தில் டிராய் (Troy) என அழைக்கப்பட்டு வருகிறது. அத்தேசத்தின் அதிபதியாகிய பிரியாம் என்பவனின் மைந்தர்களாகிய ஹெக்டர் (Hector) வீரத்திலும் பாரிஸ் (Paris) ரூபத்திலும், பிரக்யாதி பெற்றவர்களாக அக்காலத்தில் விளங்கினர். கிரேக் மன்னன் மெனிலாவின் ஈடில்லா எழில் வாய்ந்த மனைவியாகிய ஹெலனை பாரீஸ் ராஜன் கவர்ந்துகொண்டு போகவே இரு வேந்தர்களும் கடும்போர் நிகழ்த்துவதற்குக் காரணமாயிற்று. மெனிலாவின் ஆற்றொணாத் துயரமறிந்த அரசர்களெல்லாம் ஒன்றுபட்டு மாற்றாருடன் சமர் செய்ய சித்தம் கொண்டனர். மெனிலாவின் ஆருயிர் தம்பி ஆகமெம்னனின் தலைமையின் கீழ் பெரும் சேனையொன்று திரட்டி அனுப்பப்பட்டன. கடல்கடந்து டிராய் நகரத்தை நண்ணினர். அகிலஸ் என்ற கிரேக் வீரனும் அதிபுத்திசாலியாகிய உலிஸ்ஸஸ் என்பவனும் ஆகமெம்னனின் அருந்துணையாகச் சென்றனர். சுமார் 10 வருட காலம் போர் நடைபெற்றது. பலத்த சேதங்களும் அட்டூழியங்களும் இருபக்கத்திலும் நேர்ந்தன. அகிலஸ்வின் அடிமையை ஆகமெம்னன் தனக்காக உபயோகப்படுத்திய எதுவினால், வீரன் அகிலஸ் தமது சகாக்களுடன் படையை விட்டு விலகி விட்டான். ஆனால் தாய்நாட்டின் கௌரவத்தை நிலை நாட்டுவதே சால்புடைத்து என்ற எண்ணம் எழவே

G. W. M. REYNOLDS.

BOLD TYPE EDITIONS.

Title	Vols.	Rs.	As.	Title	Vols.	Rs.	As.
Mysteries of the court of London	17 vols.	17	0	Pope Joan ...	3 vols.	1	12
Joseph Wilmot	8 ,,	5	0	Necromancer	3 ,,	2	4
Ellen Percy	8 ,,	5	0	Wagner, the Wehr Welf	3	1	12
Mary Price	8 ,,	5	0	Soldier's Wife	2 ,,	1	8
Rye House Plot	4 ,,	3	0	May Middleton	2 ,,	1	8
Young Duchess	4 ,,	3	0	Faust ...	2 ,,	1	8
Omar	4 ,,	3	0	Leila ...	2 ,,	1	8
Rosa Lambert	4 ,,	3	0	Robert Macaire	2 ,,	1	4
Margaret ...	4 ,,	3	0	Mary Stuart	2 ,,	1	4
Loves of the Harem	4 ,,	3	0	Seamstress		1	0
Massacre of Glencoe	4 ,,	3	0	Alfred ...		1	0
Virgin's Kiss	4 ,,	3	0	Grace Darling		0	12
Cannonbury House	3 ,,	2	4	Young Fisherman		0	10
Mysteries of Old London	3 ,,	2	4	Stories Told by a Gendarme		0	12
				Mysteries of Paris by Eugene Sue		1	0

SUPERIOR WATCH CO., P. B. No. 167, MADRAS.

மயிர் போக்கும் சூரணம்

இந்த சூரணத்தை ஜலத்தில் கலந்து. மயிர் போக்கவேண்டிய யிடத்தில் தடவி உலர்ந்தபின் உடனே 5-நிமிஷம் பொறுத்து கழுவினால் மயிர் போய் விடும்.

புட்டி 1-க்கு அணா 8.

அற்புத எலக்டிரிக் மோதிரம்.

அமெரிக்கா தேசத்தில் ஓர் மின்சார நிபுணரால் இப்பொழுது நூதனமாய்க் கண்டுபிடிக்கப்பட்டது! இம்மோதிரத்தை பாலர் முதல் விருத்தர் வரை ஆண் பெண் இருதிறத்தார்களும் உபயோகப் படுத்தலாம் இம்மோதிரத்திற் குள்ளிருக்கும் எலெக்டிரிக் பவர் குறையாமல் எக்காலமும் நீடித்திருக்கும். தாங்கள்

நோய்வராமல் தடுத்துக் கொள்வதற்கும், இருக்கும்நோயைகுணப்படுத்திக்கொள்வதற்கும் இம்மோதிரத்தை உபயோகியுங்கள்! இம்மோதிரமானது 3-விதலோகங்களைக்கொண்டு வெகு அழகாகவும், பார்வையாகவும் செய்யப்பட்டிருக்கின்றது. இதை விரலில் அணிந்தவுடன் அதிலிருந்து மின்சாரசக்தி தேகமெங்கும் பரவி பலத்தைக் கொடுப்பதோடு காய்ச்சல், வாந்திபேதி, தொத்து வியாதிகள், வைசூரி, இன்புளுயன்சா, க்ஷயம், குஷ்டம், பிளேக், தலைவலி, அஜீர்ணம், மூலம், அன்னத்துவேஷம், மலச்சிக்கல், வாதம், சூலை முதலிய கொடூரமான வியாதிகள் அணுகாது. நற்சாக்ஷிப் பத்திரங்கள் பிரதி தினம் வந்து குவிந்துகொண்டிருக்கின்றன.

மோதிரம் 1-க்கு ரூ. 1—8—0
மோதிரம் 3-க்கு ரூ. 3-12—0

கருணாநிதி டிபோ, நெ. 1/6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

மானிடர்க்கு மகிழ்ச்சியைத்தரும்

மகா சந்தனாதித் தைலம்.

அன்பர்களே! வெயிற்காலத்திற்கு இன்பந்தரும் இந்த மகா சந்தனாதித் தைலம், சிறந்த பல மூலிகைகளாலும், உயர்ந்த சந்தனக் கட்டைச் சத்தினாலும், பசும்பால் முதலிய சிரேஷ்டமான கற்ப வகைகளினாலும் சித்த ஆயுர்வேத முறைப்படி பெரும் பிரயாசையின் மேல் செய்யப்பட்டு இப்போது வெளி வந்திருக்கிறது.

நூற்றுக்கணக்கான பணச் செலவின் மேல் தீர்க்கவேண்டிய வியாதிகளையெல்லாம், இந்த சந்தனாதித் தைலத்தினால் தீர்த்துக்கொள்ளலாம்; இதற்குப் பல கனவான்கள் அநேகம் நற்சாக்ஷிப் பத்திரங்கள் அனுப்பி யிருக்கின்றனர்.

இத்தைலத்தை வாரத்திற்கு இரண்டு முறையாக, சிரசில் தேய்த்துச் சிகைக்காயிட்டு வெந்நீரில் ஸ்நானஞ்செய்து வருவதால் கண்ணெரிச்சல், கண்களில் நீர் வடிதல், காதுநோய், தலைப்பாரம், மூளைக் கொதிப்பு, ஒற்றைத் தலைவலி, மண்டையிடி, சாலேஸ்வரம், பித்தபாண்டு, காமாலை, அஸ்தி சுரம், நாவறட்சி கைகால் எரிவு, தேகவெளுப்பு, மேக ரோகங்கள், அதிக வெட்டையினாலுண்டான துர்நாற்றங்கள், சொறி, சிரங்குகள், நமைச்சல், பீனிசம், கபாலசூலை முதலிய வியாதிகள் நீங்கித் தேகத்திற்குச் சுகமுண்டாகும்; ஞாபக சக்தி அதிகப்படும்; கண்ணிற்கு நல்ல ஒளியுண்டாகும்.

இதைத் தேய்த்து நீடித்து ஸ்நானஞ் செய்துவருவதால் மூளையில் கொதிப்பு நீக்கிக் குளிர்ச்சி யுண்டாகும்; மூளை அதிர்ச்சி, துடிதுடிப்பு, தலைமயக்கம் முதலியவைகளும் நீங்கும்; மறதி ரோகம் அறவே ஒழிந்துவிடும்; பித்தத்தினால் நரைத்த உரோமங்கள் கருமை யடையும்.

இத்தைலம் தேய்த்து ஸ்நானஞ்செய்த தினத்தன்று சீதள பதார்த்தங்களையும், தயிர் மோர் முதலியவற்றையும், பகல் நித்திரை, ஸ்திரீ சம்போகம் முதலியவைகளையும் நீக்கவேண்டும்.

இதன் விலை 1 சேர் தைலம் அடங்கிய டின் ரூபா 1-12—0
இதன் விலை ½ சேர் தைலம் அடங்கிய டின் ,, 1—0—0

வாத ஜீர்ணாபி லேகியம்.

இந்த லேகியத்தை கெச்சைக்காய் பிரமாணம் காலை, மாலை சாப்பிட்டால் அக்னி மந்தம், வயிற்றுவலி, குன்மம், வாதம் முதலிய அநேக ரோகங்கள் தீரும். பத்திய விவரம் மருந்துடன் சேர்த்து அனுப்பப்படும்.

டப்பி 1-க்கு விலை ரூபா 1. தபால் செலவு வேறு.

விலாசம்:—தனலட்சுமி கம்பெனி,
நெ. 6, வெங்கடேசமேஸ்திரி தெரு, சௌகார்பேட்டை, மதராஸ்.

போரில் கலந்து மாற்றாரை முறியடித்தான். ஹெக்டர் கொலையுண்டான் என்ற செய்தி கேட்ட பிரியாம் மட்டிலா மனோ வியாகூலமடைந்தான். இளவரசனின் சவ சரீரத்தைப் பெருந்தன்மையுடன் புதைக்கப்பட்டது. வெற்றி முரசம் எண்திசையும் முழங்க கிரேக்கர் ஹெலனோடு நாடு திரும்பினர்.

இக்கதையை கவனித்தால் ராமாயண கதை ஞாபகத்தில் வருமென்பதை மறைக்கவோ மறுக்கவோ எவராலும் முடியாது.

இவ்விரு பிரபந்தங்களிலும் விவரிக்கப்படும் கடும்போர்களின் மூல காரணம் அழகு வாய்ந்த அரச குமாரிகளை ஆண்மகனிலாதபோது கவர்ந்து கொண்டு போனதேயாமென்பது வெள்ளிடை மலை. கணவனில்லாக் காலம் நோக்கி அழகிய மனைவியை அநீதியாக கவர்ந்து கொண்டேகிய அயல் நாட்டரசனிடம் தம்பியைச் சமர் செய்ய அனுப்பியதாக ஹோமர் தம் காப்பியத்தில் அருளியுள்ளார். இராம காதையில் இராவணனிடம் தம்பியும் தமையனும் போர் புரிந்ததாகக் காண்கின்றோம். இரு நூல்களிலும் இயம்பிய போரின் நிகழ்ச்சிக்குக் காரணமொன்றே யாயினும் சில மாற்றங்கள் ஆங்காங்கு காணப்படுகின்றன. கடலைக் கடந்தே கடும்போர் நிகழ்த்தப்பட்டதாக இரு நூல்களிலும் காணப்படுகின்றதென்பது கவனிக்கத் தக்கதாகும். கடலைக் கடந்து கடும் சமர் நேர வேண்டுமென்ற எண்ணம் கொண்ட வால்மீகர் தாவும் திறம் பெற்ற வானர கூட்டத்தைத் தமது காப்பியத்தில் புகுத்தியிருக்கின்றார். படகு மூலம் சமுத்திரத்தைக் கடந்ததாக யவன காவியத்தில் காணக்கிடக்கின்றது. நாட்டின் உயர்வை நிலை நாட்ட நாட்டம் கொண்ட புலவர் அரசனுக்கு நேர்ந்த அவமானமானது, தத்தமக்குரியதென கருதி எல்லோரும் ஒன்று பட்டு மன்னவனுக்கு துணையாகப் போர்புரிய சித்தமானதாக குறிப்பிடுவது அவரது ஆழ்ந்த தேசாபிமானத்தை அறிவுறுத்துகின்றது. விபீஷணனுக்கும் இராவணனுக்கும் நேர்ந்த குழப்பத்திற்கொப்பாகவே அகிலிஸிற்கும் ஆகமன்னனுக்கும் ஆதியில் தோன்றிய மனக் கசப்பை கருத வேண்டியதாகயிருக்கின்றது. ராமகாதையில் தசமுகனின் உடன்பிறந்தவனாகிய விபீஷணன், மாற்றாருடன் நிரந்தரமாகவே கலந்துகொண்டு தமையனை கொல்வதற்காக உபாயத்தை உரைக்கின்றான். ஆனால் ஹோமர் வெகு நயமாக அகிலிஸ் வீரனுக்கும், ஆகமென்னனுக்கும் நேர்ந்த விபரீதத்தை நாட்டின் நலம் நாடியே ஒருவரை யொருவர் சிநேகித்துக்கொண்டு, வந்த காரியத்தை நிறைவேற்றியதாக குறிப்பிடுவது சாலவும் புகழ்தற்குரியது என்பதை அழுத்தம் திருத்தமாக ஈண்டு குறிப்பிடுகிறோம்.

இவ்வாறு இருகாப்பியங்களிலும் ஒற்றுமைகள் பல நிறைந்திருக்கின்றனவென்றாலும் வேற்றுமையில்லவேயில்லை யென்று கூறுவது பொருத்தமற்றதாகும். இரு நாட்டினரின் சமூக நடவடிக்கைகளின் மாறுபட்ட கருத்துகளும், விசேட விதிகளும், இரு நூல்களிலும் இனிது காணக் கிடக்கின்றன. கிரேக்கரது பெண்ணொருத்தியை அயல் நாட்டான் திருடிக்கொண்டு போய்

விட்டானென்பதைஅறிந்தவுடன் தேசாபிமானம் ததும்பும் கிரேக்கர் ஒருங்கே கூடி போர் புரியும் காட்சி அவரது ஆழ்ந்த தேசபக்தியின் ஜோதியை விளக்குகின்றது. ஸீதாபஹரணம், ஸ்ரீ ராமரது குடும்பத்தாரை முழுதும் இடித்து போருக்கு எழுப்பியதாக வால்மீகர் குறிப்பிடவில்லையென்பது இங்கு நோக்கத்தக்கதாகும். சுயநலம் கருதிய கேகயர் கோமகளது கருத்தை யுணர்ந்தும், காரிய காரணங்களோடு மறுத்துரைக்க திகைக்கும் தசரத அரசனின் மனப்பான்மை இரங்கத் தக்கதாகும். நீதியை நிலைநாட்ட எதையும் தியாகம் செய்ய வேண்டுவதே செங்கோலரசனின் கடமையாகும். இதையெல்லாம், சிந்தியாது பெண்ணின் எழிலில் மயங்கினதாக தசரதனை வால்மீகர் எடுத்துக் காட்டுவதே இராமனுக்கு நேர்ந்த இடையூறுகளுக்கெல்லாம் காரணமாக இருக்கின்றது. "பொய்யோவெனும் இடையாளொடும், இளையானொடும்" நாட்டைவிட்டு காட்டை நண்ணிய இராமனின் ஆண்மையைமட்டுமே பெரிதாக வால்மீகர் தமது காப்பியத்தில் போற்றிப் புகழ்கின்றாரே யல்லாது நாட்டு மக்களது ஆர்வத்தை நயம்பட எடுத்து இயம்பாதது, திட்டமாக தேசபக்தியை குறைப்பதாகுமென்பதில் ஐயமின்று. இராமாயணத்தில் இராமனது பெருமையே முக்கியமாக கூறப்பட்டுளது. இவ்வாறு பல வேற்றுமைகளும் ஒற்றுமைகளும் நிறைந்து காணப்படும் இவ்விரு நூல்களிலும் விவரிக்கப்படும் கதை ஒன்றென அபிப்பிராயப்படும் அறிஞர் பலர் உளர்.

Read *"New Star of Fun & Frolic"*

"Funny"

Magzin of India.

Full of Jokes, Stories, Pictures, Cinema Star Photos etc.

Sold at all News Stalls & Stations.

Easy Prize Puzzles given away every time.

Try one issue of Funny.

For sample send Postage Stamps for 0-1-6.

Apply to:—

Manager, Funny Magzin Office,

Sowcarpet, MADRAS.

ஆளுடைய பிள்ளையாரும், ஆலிநாடரும்.

6-NOV 1933

(ஆசியூர்-வ. பதுமநாப பிள்ளை.)

'ஆளுடைய பிள்ளையார்' எனும் திருஞானசம்பந்த நாயனார், சைவப்பயிர் தழைக்கவந்த சமயகுரவர்கள் நால்வருள் திருநாவுக்கரசரோடு ஒத்த காலத்தவரும், ஏனைய இருவருக்கும் முற்பட்டவருமாவர். 'ஆலி நாடர்' எனும் திருமங்கையாழ்வாரோ, வைணவப் பயிரை வளர்க்கவந்த ஆழ்வார்கள் பதின்மருள் இறுதியாகத் தோன்றியவர் ஆவர். அவ்விரு பெரியார்களுடைய அருட்பாக்களிலும் சரித்திர சம்பவங்களிலும் இலைமறை காயெனக் கரந்து கிடக்கும் சிற்சில ஒற்றுமை நயங்களை எடுத்துக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஆண்டவனுக்கு ஆட்பட்டது

மூன்றாம் வயதிலே தந்தையோடு திருக்கோயில் போந்து, தீர்த்தக்கரையில் தனித்து நின்று பசி காரணமாக அழுதலும், அம்மையும் அப்பரும் விரைந்து வந்து, அம்மையார் தமது திருமுலைப்பாலொடு மெய்ஞ்ஞானம் கலந்து குழைத்து ஊட்ட உண்டு நின்றதால், சிவபாத இருதயரது செல்வப் பிள்ளையார் 'ஆளுடைய பிள்ளையார்' ஆயினர். மெய்யறிவு பிறவாத முன், மக்கள் பிறந்தும் பிறவாதவரே ஆவர். ஆதலின், ஆலிநாடர் குறுநிலத் தலைமை பூண்டு பொய்யின்பப் பொருள்களில் மையல்கொண்டு வாழ்ந்துவந்த காலத்தில், இறைவனும் இறைவியும் தமது கைம்மாறற்ற தனிப்பெருங் கருணையினால் வலிந்து வந்து மூலமந்திரமாம் ஞான அமிர்தத்தை ஊட்ட உண்மை உணர்ந்து, ஞானப்பிறப்புப் பெற்று நின்றனராவர். அவ்வாறு, ஆண்டவனால் வலிந்து தடுத்தாட்கொள்ளப்பெற்ற அவ்விருவரும், அந்நாள் தொட்டே ஆலயங்கள்தோறும் சென்று பதிகம் பாடத் தொடங்குவாராயினர். மேலும், சம்பந்தர் எங்கும் தனியே செல்லாது அடியார்கள் பலரும் தம்மைச் சூழ்ந்துவரச் சென்றதேபோல், திருமங்கையாழ்வார் பதிகம் பாடச் செல்லுமிடங்களெல்லாம் அவரது பரிசனங்களாகிய அன்பர்களும் அவரைத் தொடர்ந்தே சென்றனர்.

இறைவன் வலிந்து வந்து பாடுவித்துக் கொண்டது

ஆண்டவன் தேனினும் இனிய இன்தமிழ்ப்பாக்களைப் பெரிதும் விரும்புபவன் ஆவன். 'செந்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைப்பது' அவன் இயல்பு. காரைக்காலம்மையார் தலையால் நடந்த தலமாகிய பழையனூர்த் திருவாலங்காட்டை மிதிக்க அஞ்சிய பிள்ளைப்பெருமான், அங்கு செல்லாது அயலூர் ஒன்றில் கண்ணயர்தலும், அத்தலத்துப் பெருமான் அவர் கனவில் தோன்றி "நம்மைப் பாட மறந்தனையோ ?—என வினவி, 'துஞ்சவருவாரும்' எனத் தொடங்கும் பதிகம் பெற்று திருவுள்ளம் உவந்தருளினன். திருநின்றஊருக்குச் சென்றபோது பெருமாள் பிராட்டியாரோடு சரச—சல்லாபம் செய்துகொண்டு பராமுகமா யிருக்கக்கண்டு சிந்தைநொந்து திரும்பிய மங்கையர் கோமான், திருக்கடன்மல்லையை அடைந்து பதிகம் பாடி நிற்கு மளவில், திருமகளாரால் தூண்டப்பட்ட நின்றவூர்ப்பெருமான் வலிந்து வந்து தரிசனம் தந்து தன்னைப் பாடுவித்துக்கொண்டு மகிழ்ந்தருளினன்.

தமிழ்த்தாய் செய்த தவத்தினால் தோன்றிய சம்பந்தப்பெருமான், ஆண்டவனது அருட்பெருஞ் சோதியில் கலந்தருளியபோது, தனியே கலவாது தமது காதலியாகிய நம்பியாண்டார் நம்பிகளின் அருந்தவப் புதல்வியாரோடு திருவுரு மறைத்தருளியதேபோல், திருமங்கை மன்னரும் தம்மைச் சீர்திருத்தி உய்வித்த தமது காதலி குமுதவல்லியாருடனே திருக்குறுங்குடியில் திருவுரு மறைத்தருளியது அன்பரால் சிந்தித்து சிந்தித்து பெருமகிழ்வடையத் தக்கதொன்றாகும். பிற விரிப்பின் பெருகுமாதலின் மேற்செல்வேன்.

இயற்கை எழில் நலன்

இறைவனது திருவருட் பேராற்றல் முழுவதும், இயற்கைப் பொருள்களிலேதான் இனிது விளங்கக் கிடக்கின்றது. இயற்கைப் பொருள்களின் பேரெழிலைக் கூர்ந்து கவனிப்போர்க்கே இறையருள் இனிது புலனாகும். இயற்கை இன்பங்களைச் சுவைக்கும் திறனிலாத எவரும், இயற்கை வடிவினனாகிய இறைவனை அறிதல் அரிதே. கேவலம், ஊனக்கண் கொண்டு நோக்குவோர்க்கு சடப்பொருள்களாகிய மரங்களும் கற்களும் புட்களும் விலங்குகளுமே தோன்றும்; மெய்யறிவுக் கண்கொண்டு பார்ப்போர்க்கே, அவற்றினூடே இரண்டறக் கலந்து நிற்கும் இறைவனின் இன்னருள் திறம் இனிது புலனாகும். இயற்கையன்னை எவர்க்கும் ஒரே தோற்றத்தை வழங்கினும், இறையருள் பெற்ற மெய்யன்பர்கட்கே தனது அற்புத சக்தியை உணர்த்துகின்றாள். இயற்கையழகு மிகுந்த இனிய காட்சிகளில், இறைவனது இன்னருள் திறத்தை இனிது கண்டறிந்து, தமது அனுபவங்களை சொற்சித்திரங்களால் விளக்கிச் சென்ற மெய்யன்பர்களுள் ஆளுடைய பிள்ளையாரும் ஆலிநாடரும் மிகச் சிறந்தோர் ஆவர். அவ்விரு அன்பர்களும் பாடிச் சென்ற அருட்பாக்கள் பெரும்பான்மையவற்றில், முன்னிரண்டடிகளில் முதல்வனைப் போற்றி—பின்னிரண்டடிகளில் இயற்கையின்பம் பிழிந்து வைக்கப் பெற்றுளது.

ஒரு பொருளுக்கு மணியை உவமை கூறிய சம்பந்தர், அப்பொருளே வெவ்வேறு நிறமுடையதாக மாறும்போது, வெவ்வேறு மணிகளை உவமித்துரைத்து, அவை ஒன்றினின்றும் ஒன்று எழுதுவது போலவே, ஒவ்வொரு

மணியும் அதனை அடுத்துள்ள மணியொடு தொடர்புகொண்டு பேரழகு செய்வதுபோல், அமைத்துப் பாடியிருக்கும் அரிய வருணனை நயம் பெரிதும் வியந்து மகிழ்வதற்கு உரியதாகும்.

"எண்ணார் முத்தம் ஈன்று மரகதம்போல் காய்த்துக்
கண்ணார் கமுகு பவளம் பழுக்கும் கலிக்காழி."

எனவரும் ஆளுடைய பிள்ளையாரின் அருள்மொழிகளைச் சற்று நோக்குங்கள். முத்து ஒத்த மலர்களைப் பூத்து, மரகதம் போன்ற காய்களைக் காய்த்து, பவளம் நிகர்த்த பழக்குலைகளைக்கொண்டு நிற்கும் கமுகமரங்கள் நிறைந்த காழி நகராம்! என்னே விசித்திரம்! என்னே வியப்பு!! இவ்வற்புத வருணனையினின்றும், உயிருக்கு உடல் உதவி உலகில் பிறப்பித்து, அவ்வுயிர் உடலில் தங்கி யிருக்குமளவும் உள்ளத்திலேயே உறைந்து, இறுதியில் உடலை முதிர்வித்து உதிர்வித்தருளும் இறைவனது திருவிளையாடலின் அற்புதம் இனிது உணரக் கிடக்கின்றதன்றோ! மக்களின் ஊனக்கண்களுக்கு மிக்க சாதாரணமாகத் தோன்றும் ஒரு காட்சியை, தமது ஞானக்கண்களாலே கண்டு அழகுபெற உவமித்து உரைத்து பெரியதொரு தத்துவத்தைக் கற்பித்தருளிய பெருமை சம்பந்தருக்கு மட்டுமல்ல, ஆலி நாடருக்கும் உரியதேயாம்:—

"கருங் கமுகு பசும்பாளை வெண் முத்து ஈன்று
காயெல்லாம் மரகதமாய்ப் பவளம் காட்ட
செருந்தி மிக மொட்டலர்த்தும் தேன்கொள் சோலைத்
திருக்கோவலூரதனுள் கண்டேன் நானே."—

எனவரும் ஆலிநாடரின் அமுத மொழிகளை ஊன்றி நோக்குக.

பச்சைப் பசேலென்று பயிர்கள் படர்ந்து விளங்கும் பசும் புலங்களிலே, கண்கவர் வனப்பு மிக்க பூக்கள் பூத்தொளிர்வது சம்பந்தர் கண்கட்கு பெண் தெய்வங்களின் எழில் வாய்ந்த அவயவங்களை நினைவூட்டா நிற்பன ஆயின.

"வாவி தோறும் வண்கமலம் முகம் காட்டச் செங்குமுதம் வாய்கள் காட்ட—காவியிருங் கருங்குவளை கருநெய்தல் கண் காட்டும் கழுமலமே!"—

செந்தாமரைகள் மகளிர் முகங்களைப் போன்றும், குமுதம் பவளவாயைப் போன்றும், கருங்குவளையும் கருநெய்தலும் கண்கள் இரண்டையொத்தும் இலங்குகின்றனவாம். ஆ! என்ன அழகிய கற்பனை! ஆலிநாடரோ, அக்காட்சியை இன்னும் சிறிது அதிகமாகவே வருணித்துரைப்பார் ஆயினர்:—

"...................................நெய்தலோடு
மையணைந்த குவளைகள் தம் கண்கள் என்றும்
மலர்க் குமுதம் வாய் என்றும் கடைசிமார்கள்,
செய் அணைந்த களைகளையாது ஏறும் காழிச்
சீராம விண்ணகரே சேர்மினீரே!"

வயல்களில் முளைத்தெழுந்த மலர்களாம் களைகளைப் பறித்து எறிய இழிந்த பணிப் பெண்கள் அம்மலர்கள் தம் முகத்தை நினைவூட்டுதல் கண்டு, அவற்றைப் பறித்தழிக்க மனம் கொள்ளாமல் களை களையும் நோக்கத்தையும்

மறந்து வெளியேறி விடுவாராம். இயற்கை வனப்பு மிகுந்து இனிய முகத்தை நினைவூட்டும் அம் மலர்களை, அழகு பேணும் அகமுடைய எவரேனும் அழிக்க ஒருப்படுவரோ? இயற்கை யழகு எங்கெங்கு காணப்படுமோ அங்கெல்லாம் ஆர்வத்தோடு அவ்வழகைப் பெரிதும் பேணுதல் வேண்டும் என்பதை இவ் வரிய வருணனை நன்கு கற்பிக்கின்றதன்றோ!

வானளாவி வளம்பெற வளர்ந்த சோலைகளிலே, எத்தகைய தடையு மின்றி தத்தம் விருப்பப்படி எங்கணும் சென்று மகிழ்கின்ற கிளிகள், கேட்டதைக் கேட்டவாறு கூறும் ஆற்றலுடையன வாதலின், இறைவன் உறையும் திருப்பதிகளில் வாழும் மாந்தர்கள் சீரிய கலைகளைச் செப்புதல் கேட்டு, தாமும் அவ்வாறு கூற ஆர்வம் கொண்டு பழகுகின்றனவாம். அதனை,

"வட்டமதி தட்டு பொழி லுட்டமது வாய்மை வழுவாத மொழியால்
சட்ட கலை எட்டுமரு வெட்டும் வளர் தத்தை பயில் சண்பை நகரே!"

—என ஞானசம்பந்தரும்;

—வேல் நெடுங்கண்

"முளைவாளெயிற்று மடவார் பயிற்று
மொழி கேட்டிருந்து முதிராத இன்சொல்
வளையாய கிள்ளை மறைபாடு நாங்கூர்
மணிமாடக் கோயில் வணங்கு என்மனனே!"—

என மங்கை மன்னரும் வருணித் திருப்பதன் சீரிய நயத்தை என்னென்று வியப்பது? தலைவனது திருப்பதிகளிலே வாழும் கிளிகள் முதலியனவே அவ்வாறு ஆண்டவன் புகழைப் பாடுவதாயின், அவ்விடங்களில் வாழும் மெய் யன்பர்கள் எவ்வளவு பக்தி மிக்கவர்களாக இருத்தல் வேண்டும்! ஐயறிவுடைய புட்களே அறிவுக் கலைகளைப் பயில அவாவி நிற்கும்போது, ஆறறிவுடைய மக்கள் அறிவுக்கலைப் பயிற்சியில் ஆர்வம் கொள்ளா தொழிவரேல், அத்தகையோர் மாக்களேயாவர் எனும் பேருண்மையும் அவ் வினிய உவமை நமக்குக் கற்பிக் கின்றதன்றோ!

காமவேளுக்கு வாகனமாகிய கிளி, காண்போர் கருத்தைக் கவரும் பேரழகு வாய்ந்து, கூறியது கூறும் திறம்பெற்று விளங்கும் இனிய பறவை யென்பது அனைவரும் அறிந்ததே. திருமால் அடியார்க்கு, அப்பெருமானது பச்சை மேனியையும் செம்பவள வாயையும் நினைப்பூட்டுவதும் அம் மோகனப் பசுங்கிளியே ஆகும். தேனினும் பாலினும் இனிய தீங்குரலால், கேட்போர் தம் கவலை மறந்து இன்பவயப் பட்டு நிற்குமாறு கொஞ்சிக் கொஞ்சிப் பேசுவதும் அக்கிளியே யன்றோ! பெண்தெய்வங்களால் வளர்க்கப்பெற்று அகங்களில் வளரும் கிளிகள், தலைவன் முதலியோர் பெயரைப் பகரப் பழக்குவிக்கப்பட் டிருத்தல் இயல்பு. தலைவனது திருப்பெயரைத் தானே கூறுறாத தலைவி, தனது செல்வக் கிளியைச் சொல்லச் சொல்லிக் கேட்பதில் பெரிதும் ஆர்வங் கொள்வதும் இயல்பே.

"சிறையாரும் மடக்கிளியே! இங்கே வா தேனொடு பால்
முறையாலே உணத் தருவேன்; மொய் பவளத்தொடு தரளம்

துறையாரும் கடல் தோணிபுரத்தீசன் துளங்கும் இளம்
பிறையாளன் திருநாமம் எனக்கு ஒருகால் பேசாயோ!"

—என ஆளுடைய பிள்ளையார், தலைவர் திருப்பெயர் கூறுமாறு கிளியை வேண்டி நிற்பது காண்க. தலைவனிடத்து சீரிய காதல் கொண்ட தலைவிக்கு, அவன் திருப்பெயரை ஒரு முறை கேட்ட வளவிலேயே பெரு மகிழ் வுண்டாகும் என்பதை விளக்க 'திருநாமம் ஒருகால் பேசாயே' என்றார். தலைவனது தனிப் பெரும் புகழைப் பகரக் கேட்டு, நெஞ்சு நெக்குருகி நீர் விழி வழி இழிய நிற்பதும், அப் புகழைப் பாடித் தன்னை இன்புறச் செய்தோரை வணங்குவதும் தலைவியின் இயல்புகளாகும். ஆலி நாடர்,

"மா நீண்ட கைத்தலத்து என் மைந்தா என்றும்
சொல்லெடுத்துத் தன் கிளியைச் சொல்லே என்று
துணை முலைமேல் துளிசோரச் சோர்கின்றாளே'"—என்றும்

வெஃகாவில் திருமாலைப் பாடக் கேட்டு,

"வளர்த்ததனால் பயன் பெற்றேன் வருக என்று
மடக்கிளியைக் கைகூப்பி வணங்கினாளே!" என்றும்

தலைவியின் நிலையை அடைந்து தலைவன் புகழைக் கேட்கப் பேரார்வம் கொண்டு நின்றமை உய்த்து உணர்ந்து பெரிதும் உவக்கத் தக்கது. அதனால், இயற்கை அழகு மிக்க எதுவும் பெரிதும் போற்றத் தக்கது என்பதும், திருப் பெயர் கேட்குந்தோறும் அளப்பரும் களிப்படைவது மெய்யன்பர் இயல்பு என்பதும் இனிது புலனாகுதல் காண்க.

ஆற்றுச் சிறப்பு

"ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்',—என்பது முதுமொழி. ஒரு நாட்டின் நல்வளத்திற்குப் பெரிதும் இன்றியமையாதது ஆர்று வளமே. சுருங்கச் சொல்லுமிடத்து, பாலூட்டிச் சீராட்டிப் பரிவோடு வேண்டுவன நல்கிப் பாதுகாக்கும் அன்னையை ஒத்தது ஆறு என்றும் கூறலாம். நல்வளமுடைய ஆற்றினால், மக்கள் பெறும் நலங்கள் பற்பல. ஆற்றின் பெருமை கண்டே, அதனைச் சிவபிரான் திருமுடியிலும் திருமால் திருவடியிலும் தரித்துக்கொண்டனர் போலும்! ஆற்றின் இரு புறங்களிலும் வானோங்கி வளர்ந்து காற்றில் அசைந்து ஆடும் பலவகை மரங்களின் அற்புதக் காட்சியும், செழித்துப் படர்ந்து வளர்ந்த செடி கொடிகளின் சீரிய காட்சியும், அவற்றின் பல நிற மலர்கள் ஆற்றில் மிதந்துகொண்டு வரும் விசித்திரக் காட்சியும் இயற்கை யழகை விரும்பும் அன்பர்கட்குப் பேரின்பம் ஊட்டுவன வன்றோ? நமது செந் தமிழ் நாட்டில் சிறந்து விளங்கும் காவிரி யாற்றின் சீரிய வளத்தை நாயனாரும் ஆழ்வாரும் வருணித்துச் சென்றிருப்பதை என்னென்று எடுத்துரைப்பது?

"கோங்கமே குரவமே கொழுமலர்ப் புன்னையே கொடி முல்லை;
வேங்கையே ஞாழலே விம்மு பாதிரிகளே விரவி எங்கும்
ஓங்கு மா காவிரி" ....நாயனார்.

"துளக்கை யானை மருப்பும் அகிலும் கொணர்ந்து உந்தி முன்
திளைக்கும் செல்வப் புனற் காவிரி"...............ஆழ்வார்.

நிலையாமை அறிவுறுத்தல்

இன்ப துன்பங்கள் என்றும் ஒரே தன்மையனவாய் நிலை பெற்றிரா. ஆண்டி அரசனாய் உயர்வதும் அரசன் ஆண்டியாய்த்தாழ்வதும் உலக இயல்பே. எத்துணை உயரிய நிலையில் செருக்கு மிக்கவராய் வாழ்வோரும், இறுதியில் பிடி சாம்பராய் முடிய வேண்டியவரே யாவர். ஆதலின், வினைகளைப் பெருக்கும் பொய்யின்பப் பொருள்களில் கொள்ளும் மையலை ஒழித்து உயிர்க்கு உறுதி பயக்கும் உண்மைப் பொருள்களை உணர்ந்து, அன்பு நெறி பின்பற்றி அறநெறி பிறழாது, வாணாளை வீணாளாக்காது வாழ்வோரே இறைவன் திருவருளை எய்தி மெய்யின்பம் நுகர்வர். இவ்வுண்மையையே ஞான சம்பந்தப் பெருமானார்,

"தந்தையார் போயினார்; தாயரும் போயினார்; தாமும் போவார்
கொந்த வேல் கொண்டொரு கூற்றத்தார் பார்க்கின்றார் கொண்டு
[போவார்
எந்த நாள் வாழ்வதற்கே மனம் வைத்தியால் ஏழை நெஞ்சே!
அந்தண் ஆரூர் தொழுதுய்யலாம்; மையல் கொண்டஞ்சல் நெஞ்சே!"

என்று தமது உள்ளத்திற்கு உபதேசிக்கும் முகத்தால் விளக்கிக் காட்டியிருப்பதுபோன்றே

"மஞ்சுதோய் வெண்குடை மன்னராய் வாரணம் சூழ வந்தார்
துஞ்சினார் என்பதோர் சொல்லை நீ துயரெனக் கருதினாயேல்,
நஞ்சு தோய் கொங்கை மேல் அங்கை வாய் வைத்து அவள் நாளை
[உண்ட
மஞ்சனார் வல்லவாழ் சொல்லுமா வல்லையாய் மருவு நெஞ்சே!"—

என்று ஆலிநாடரும் அருளி யிருப்பது உய்த்து உணர்ந்து உவத்தற்கு உரியது. "நிலையாமை அறிவுறுத்தல்"—எனும் ஒரே துறையில்—'நெஞ்சுக்கு உணர்த்தல்'—எனும் ஒரே முறையில்—சந்த விருத்தமாகிய ஒரே பாவினத்தில் அவ்விரு தொண்டர்களது அருட்பாக்களும் அமைந்திருப்பது பெரிதும் வியத்தற்கு உரியதே.

மூலமந்திரச் சிறப்பு.

மந்திரம், இறைவன் திருவருளைப் பெறுவிக்கும் ஏனைய எவற்றினும் மிகச் சிறந்த தொன்றாகும். அகத்தைத் தூய்மைப் படுத்துவதற்கு அதனினும் சிறந்த துணை வாய்ப்பது அரிது. இறைவன் திருவருளைத் தவிர்த்து, வேறு எச்சித்தியை எய்தவேனும் மந்திரத்தைச் செபிப்பது நன்றன்று. நிட்காமிய கருமமே உயிர்க்கு உறுதி பயப்பதாகும். உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று புரிவோர் திறத்து, மந்திரம் பொய்ப்படுவது வியப்பன்று. எவ்வளவுக் கெவ்வளவு மந்திரத்தை அதிகமாக உருப்போடுகின்றோமோ, அவ்வளவுக்கவ்வளவு உயர்ந்த சித்தி பெறலாமென்று எதிர் பார்த்து நிற்பது

பெரியோர்க்கு அழகன்று. மந்திரத்தை உச்சரிக்கும்போது, இறைவன்பால் மனமார்ந்த உண்மைக் காதல் கொள்வது அத்தியாவசியமாகும்; அவ்வமயம் அதன் உட்பொருள் உணர்ந்து அகம் கசிந்து உருக வேண்டும்; அவ்வேளையில் தமது தீவினைகளையும் இறைவனது கைம்மாறற்ற தனிப்பெருங் கருணையையும் நினைந்து நினைந்து இரு விழிகளிலும் இன்பக் கண்ணீர் பெருகி வழிய நிற்கும் நிலையை எய்துதல் வேண்டும். அவ்வாறு ஓதுவோரையே மூலமந்திரம் நன்னெறிக்கு உய்த்திடும். அத்தகைய உண்மை யன்பர்களுக்கு, மூலமந்திரம் எத்தகைய பேரின்பம் ஊட்டும் என்பதை எழுத்துக்களால் எழுதிக் காட்டவும் இயலுமோ? அவ்வின்பத்தை ஒருவாறு சம்பந்தரும் மங்கை மன்னரும் குறிப்பாக உணர்த்திச் சென்றிருப்பது கவனிக்கத் தக்கது. அப் பாக்கள் வருமாறு:—

"நம்புவார் நமர் நாமம் நவிற்றினால்,
வம்பு நாண் மலர் வார் மது ஒப்பது;
செம்பொனார் திலதம் உலகுக்கு எலாம்
நம்பன் நாமம் நமச்சிவாயவே" —சம்பந்தர்.

"குலந்தரும்; செல்வம் தந்திடும்; அடியார் படுதுயராயின வெல்லாம்
நிலந் தரஞ் செய்யும்; நீள் விசும்பு அருளும்; அருளொடு பெரு நிலம்
[அளிக்கும்;
வலம் தரும்; மற்றும் தந்திடும்; பெற்ற தாயினும் ஆயின செய்யும்;
நலந் தரும் சொல்லை நான் கண்டுகொண்டேன்; நாராயணா என்னும்
[நாமம்"—திருமங்கையாழ்வார்.

குற்றாலமும் குறுங்குடியும்

திருக் குற்றாலம் பாண்டி நாட்டுச் சிவஸ்தலங்கள் பதினான்கில், பதின்மூன்றாவதாக மிளிர்வது; திருக்குறுங்குடியோ பாண்டிநாட்டு விஷ்ணுஸ்தலங்கள் பதினெட்டில் பதினேழாவதாக ஒளிர்வது. திருக்குற்றாலத்தில் திருமாலாக இருந்த மூலவ மூர்த்தியை, அகத்திய முனிவர் இலிங்கமாக மாற்றிச் சிவாலயமாக்கியதாக கந்த புராணம் கூறுகின்றது; திருக்குறுங்குடியிலோ, பெருமாளுக்குப் பக்கத்திலேயே இலிங்கத் திருவுருவுடன் சிவபிரான் திருக்கோயில் கொண்டுள்ளார். குற்றாலம் ஆளுடைய பிள்ளையாராலும் குறுங்குடி ஆலி நாடராலும் பாடப்பெற்றுள. அவ்விரு பதிகங்களையும் உற்று நோக்க நோக்க எவர்க்கும் பெரு வியப்பு விளையா திராது. அவ்விரு பதிகங்களும் கலிநிலைத்துறைக் கவிகளாலேயே ஆகியன; அப்பதிகங்களின் பாக்களுள் இரண்டை ஈண்டுக் கவனிப்போம்:—

"செல்வம் மல்கு செண்பகம் வேங்கை சென்றேறிக்
கொல்லை முல்லை மெல்லரும்பீனும் குற்றாலம்;

வில்லின் ஒல்க மும்மதில் எய்து வினை போக
நல்கும் நம்பன் நன்னகர் போலும் நமரங்காள்!"

என்பது சம்பந்தர் திருப்பாட்டு.

"வல்லிச் சிறுநுண் இடையார் இடைநீர் வைக்கின்ற
அல்லற் சிந்தை தவிர அடைமின் அடியீர்காள்!
சொல்லில் திருவே அனையார் கனிவாய் எயிறு ஒப்பான்
கொல்லை முல்லை மெல்லரும்பீனும் குறுங்குடியே!"

என்பது திருமங்கை மன்னர் திருப்பாசுரம்.

ஆ! எத்துணை ஒற்றுமை! பாடலில் மட்டுமின்றி, இடத்திலும் குற்றாலத்திற்கும் குறுங்குடிக்கும் நெருங்கிய ஒற்றுமையுண்டு. தன்பால் நீராடுவோர்க்கு எத்துணை நேரமாயினும் அயர்ச்சியை விளைவியாது அளப்பருங் களிப்பையே விளைவிக்கும் அழகிய நீர்வீழ்ச்சி, குற்றால மலையிலிருப்பது போன்றே குறுங்குடி மலையிலும் உண்டு. 'காகம் அணுகா மலையில் மேக நிரை சாயும்' வனப்பும், 'கூதல் மாரி நுண்துளி தூங்கும்' எழிலும், 'மலையார் சாரல் மகவுடன் வந்த மடமந்தி—குலையார் வாழைத் தீங்கனி மாந்தும்' காட்சியும், நோக்கும் பக்கமெல்லாம் கண்ணையும் கருத்தையும் கவரும் இயற்கைப் பேரழகு வாய்ந்த அற்புதத் தோற்றங்களும், மெல்லிய பூந் தென்றற் காற்றின் இன்பமும் பிறவும் இன்றும் இரண்டிடங்களிலும் அனுபவிக்கக் கூடியனவாகும். அவ்வொற்றுமை விளங்கவே, ஆளுடைய பிள்ளையாரும் ஆலி நாடரும் வெவ்வேறு காலத்தவராக இருந்தும், அத்திருப்பதிகளைப் பாடும் போது, அவற்றின் ஒற்றுமை நயம் பெரிதும் தோன்றப்பாடினர் போலும்!

அரனும் அரியும்

அழிக்கும் தொழிலுக்கென அரனும் அளிக்கும் தொழிலுக்கென அரியும் அமைந்து, முறையே வெம்மையையும் தண்மையையும் கொண்டு உலகத்தை நடத்திவருகின்றனர். தண்மையே இல்லாத தனி வெம்மையாலேனும் வெம்மையே இல்லாத தனித் தண்மையாலேனும், வையத்து உயிர்கள் வாழ இயலாது. இரண்டும் ஒன்றினால் மட்டுமே, உலகில் உயிர்கள் தரித்திருக்க இயலும். ஆதலின், ஒன்றுக்கொன்று ஏற்றத் தாழ்வு கற்பிப்பது, ஆண்டவனையே அவமதிப்பதாகும். சிவபிரானது ஒருபாகமாக திருமால் உளரென்று சைவரும், திருமாலின் ஒருபாகமாக சிவபெருமான் உளரென்று வைணவரும் கூறுகிற்பர். எப்படி உரைப்பினும், ஒருவரிடமிருந்து ஒருவரைப் பிரித்துவிடுவதுமட்டும் இயலாது. இவ்வுண்மையையே,

"மண்ணுமோர் பாகமுடையார்; மாலும் ஓர் பாகமுடையார்
விண்ணுமோர் பாகமுடையார்; வேதமுடைய விமலர்"

என ஆளுடைய பிள்ளையாரும்,

"ஏறும் ஏறி இலங்கும் ஒண் மழு பற்றும் ஈசற்கு இசைந்து உடம்பில் ஓர்
கூறுதான் கொடுத்தான் குல மாமகட்கு இனியான்"

என ஆலிநாடரும் அறிவுறுத்திச் சென்றனர். இவ்வுண்மை உணராது திருமாலைப் பழிக்கும் சைவர் உண்மைச் சைவராகார்; சிவபிரானை இழித்துரைக்கும் வைணவர் மெய் வைணவராகார்.

திருவெழுகூற்றிருக்கை.

சைவ சமயாசாரியர்கள் நால்வருள், திருத்தேர் வடிவில் பதங்களை அமைத்தற்கு ஏற்றவாறு பாடப்படும் பிரபந்தமாகிய திருவெழு கூற்றிருக்கையைப் பாடியவர் ஆளுடைய பிள்ளையார் ஒருவரே; ஆழ்வார்கள் பதின்மருள் அப்பிரபந்தத்தைப் பாடியவர் ஆலிநாடர் ஒருவரே. அவ்விரண்டையுங் குறித்து ஈண்டுச் சில வரிகள் வரைவது அவசியமென்று கருதுகின்றேன். பரம்பொருள் உலகைச் செவ்விதில் நடத்த மூவுருக் கொண்டது என்னும் உண்மையை, "ஓருருவாயினை........படைத்து அளித்து அழிப்ப மும்மூர்த்திகளாயினை" என நாயனாரும்; "அறமுதல் நான்கவையாய் மூர்த்தி மூன்றாய்—இருவகைப் பயனாய் ஒன்றாய் விரிந்து நின்றனை"—என ஆழ்வாரும் திருவெழுகூற்றிருக்கையில் உணர்த்தியிருப்பது கவனித்தற்கு உரியது. ஆதலின், உண்மை உணர்ந்து தெய்வநிந்தனை செய்யாது 'ஒருங்கிய மனத்தோடு' இறைவனை வழிபடும் சைவரே உய்வர்; 'அவ்வாறே, அறுவகைச் சமயமும் அறிவரு நிலையின'னாய ஆண்டவனை, 'முக்குணத்து இரண்டவை அகற்றி, ஒன்றினில் ஒன்றி நின்று' உள்ளன்போடு வழிபடும் மெய் வைணவரே உய்வர்.

ஆளுடைய பிள்ளையாருக்கும் ஆலிநாடருக்கும் இடையே உள்ள ஒற்றுமை நயங்களை முற்றும் விரித்து விளக்கச் சிறியேன் சற்றும் தக்கவனல்லேன். எனினும், ஆர்வம் பற்றி வரையப்பட்ட இக்கட்டுரையில் காணப்படும் குற்றங் குறைகளைப் பொறுத்தருளுமாறு பெரியோர்களைப் பெரிதும் வேண்டிக் கேட்டுக்கொள்ளுகின்றேன். இதுகாறும் கூறிவந்ததன் பயனாக, இனியேனும் எனது செந்தமிழ் மணித்திருநாட்டுச் சகோதரர்கள் அனைவரும், இயற்கைப் பொருளழகு செறிந்து கிடக்கும் திருஞானசம்பந்த நாயனார் தேவாரத்தையும் திருமங்கையாழ்வார் பிரபந்தங்களையும் ஆர்வத்தோடு பயிலத் தொடங்கி, அவை அறிவுறுத்தும் உயிர்க்கு உறுதி பயக்கும் உண்மைப் பொருள்களைச் செவ்விதில் உணர்ந்து, உணர்ந்தவற்றைச் செய்கையில் கொணர்ந்து, நாத்திகத்தைத் துறந்து ஆத்திகராய்ச் சிறந்து, அன்பு நெறி பின்பற்றி நடந்து, ஆழ்வாருடையவும் நாயனாருடையவும் இன்னருளுக்கு இலக்காகி உய்ந்திடுமாறு கருணைக் கடலாகிய இறைவன் திருவருள் புரிவானாக.

நைடதத்தில் இயற்கைத் தோற்ற வருணனை

(கோ. ஸ்ரீ. இராமன், எம். ஏ.)

அமிழ்தினும் இனிய நந்தமிழ் மொழியில் விருத்த யாப்புக் காப்பியமாக தலைசிறந்து விளங்கும் நைடதத்தின்கண் அதனை ஆக்கியோர் அதிவீரராம பாண்டியனுருடைய உள்ள உணர்ச்சிகளைக் கற்பனைத் திறனால் நாம் எளிதில் அறிந்து இன்புறலாம். அதிவீரர் தமது உயர்ந்த கற்பனைசக்தியால் நைடதத்தில் பலவிடங்களில் இயற்கைத் தோற்றத்தை மிக்க சாமர்த்தியமாக வரைந்திருப்பது ஆங்கிலத்தில் கவிஞர் திலகமாய் விளங்கிய வேட்ஸ் வர்த் துரை மகனுருடைய வருணனைச் சிறப்புகளுக்குச் சமமாக இருக்கிறது என்று சந்தேகமற—சந்தோஷமுற நாம் கூறலாம்.

ஈண்டு நாம் தமயந்தி காதல் நோய் வாய்ப்பட்டு வருந்துகையில் மாலைப் பொழுதினைக் கவிவாணர் அதிவீரராமபாண்டியர் மிக அழகுடன் வரையும் படலத்தில் சிலசெய்யுட்களை ஆராய்வோம்.

பரிதி பரிவுடன் மேற்கடலில் குளிக்கும்பொழுது மாலைக் காலத்தோற்றம் சிவந்து காணப்பட்டது என்று கவிஞர் பெருமான் பின்வரும் செய்யுளால் கூறுகின்றார் :

புதைத்தகாரிருட் படமொழித் துணைப்போது
முதித்த கீழ்த்திசை மகட் புணர்ந்தா யெனவூடிக்
கொதித்து மேற்றிசை யணங்கலத் தகப்பதங் கொடுமே
லுதைத்தாளெனச் சிவந்தது வெய்யவனுடலம்.

காரிருள் போன்ற உடையை நீக்கிய கிழக்குத் திசை எனும் மாதுடன் கோபமற்று சரச சல்லாபத்துடன் சூரியன் இருந்தான் என்பதைக் கண்ட மேற்றிசை மாது வெகுண்டு தன் பாதங்களால் அவனை உதைத்தாள். அது காரணமாகப் பார்முழுவதும் கதிர் பரப்புங் கதிரவன் உடலம் சிவப்பாக மாறியது. என்ன கவிக்கூற்று! இங்கு இருதிசைகளையும் உருவகமாக்கிக் கூறியது அதிவீரராமருடைய கற்பனைசக்தியின் சாமர்த்தியத்தைக் காண்பியா நிற்கிறது. சாயங்காலம் சூரியன் அஸ்தமிக்கையில் மாலைநேரம் சிவந்திருந்தது என்று பொருள்படும் கருத்தமைந்த செய்யுளில் கீழ்த்திசை மேற்றிசை என்பதை இரண்டு சக்களத்திகளாக நினைத்து, கவிஞர் சூரியாஸ்தமனம் ஆனபொழுது ஏற்பட்ட வானநிறத்தில் செங்கதிரோன் இருந்த நிலைமையைக் காட்ட மேற்றிசை எனும்மாது பொறாமைகொண்டு சூரியனை உதைத்தாள்! இது கவிஞரின் கற்பனைசக்தியின் அழகை மிளிருமாறு செய்கிறது.

மற்றொரு செய்யுளில் நைடத ஆசிரியர் சூரியனுடைய செங்கிரணங்கள் மேற்கடலில் விழுகையில் அவைகள் முத்துக்களைப்பெற கடலினுள் செல்லும் மனிதர்கள் தாம் போகுமுன் ஆழத்தைக் கண்டறிய விடும் மூங்கில்களை நிகர்த்திருந்தன என்று வர்ணனை செய்கிறார். சூரியகிரணங்களைப் "பொற்கழை" யெனலாம் என்று செப்புகிறார்.

" மையுண் கண்ணியை " எனத்தொடங்கும் செய்யுளில் சூரியன் போய் மறைந்தால் தமயந்தி சந்திரனுடைய தண்கதிர்களால் வைதக்கப்பெற்று, மன

முளைந்து, மேனிபதறிப்போவாள் என்று கருதிய அல்லிமலரும் தாமரையும் முறையே வேண்டாம் என்று சொல்வதற்கொப்ப முகமலர்ந்தும் முகம் மூடியும் கொண்டன. அல்லிமலர்கள் அன்னக்கொடியாம் தமயந்தியின் பொருட்டு சூரியனைப்போக வேண்டாம் என்று சொல்வது போல மலர்ந்தன. தாமரைகள் மறையும் இரவியைப் போகவேண்டாம் என்று கேட்டுக் கொள்வதைப் போல் தமது இதழ்கள் எனும் கைகளால் கதிரவனைப் பிடித்துக் கொண்டு குவிந்தன என்று கவி மிகச் சிறந்த குறிப்பணியுடன் சொல்லுகிறார். மாலைப் போழ்தில் அவ்விரு மலர்களும் " வாய் மலர்தலையும் " " குவிதலை "யும் ஈண்டு உணரவேண்டும்.

அடுத்த செய்யுளில் மாலைக்காலம் அப்பொழுது கவிவாணருடைய உள்ளத்தில் எத்தகைய உணர்ச்சியைக் கொடுத்தது என்பதை நாம் ஆராய்வோம் :

பொருவிலாழி யொன்றுருட்டி யெப்புவனமும் விளக்கு
மிரவி மன்னவனிறத்தலு மெதிர்ந்த புன்மாலை
பரவை மாநிலமுழுவதும் பரிப்பவனிறப்ப
விரவு வெர்தொழிற் குறுநில வேந்து போன்றுளதே.

ஒற்றையாழித் தேரவன் மேற்கடலில் குளித்ததைக் கண்ணுற்ற மாலைக்காலம் பூமி முழுவதிலும் தன் ஆட்சியை ஸ்தாபித்தது. சந்திரன் தோன்றும் வரை மாலைக்காலம் ஆட்சி செய்வதை ஒரு குறுநில மன்னனுக்கு கவி ஒப்பிட்டு, அத்தகைய குறுகிய ஆட்சி சிறிது நேரத்துள் மறைந்து போவதை உணர்த்துகிறார். பேரரசர் ஒருவர் இறந்ததும் யாதாவதொரு பாதகன் ராஜ்ய பாரத்தைக் கைப்பற்றிக் கொடுங்கோல் அரசாட்சியை உரிய வாரிசுதாரன் சிங்காதனத்தை கைப்பற்றும்வரை நடத்துதலைப்போல் மாலைப் பொழுது காணப்பட்டது என்று உதாரணமாக எடுத்துக்கொண்டால், செய்யுளின் கருத்து செவ்வனே தோற்றும்.

மற்றுமொரு செய்யுளில் புலவர் பெருமான் " இரவின்கண் வானகம் முழுவதும் அவிர் ஒளி பரப்பி " எழுந்தன : " அடர் தாரகை கடலுள் பொங்கு வெங்கதிர் மணி விழுந்தெனத் திசைப் புரப்போரெங்கு நாடுதற் கெடுத்த வஞ்சுடரென இயையும் " என்றார். அதாவது கங்குல் குவிந்த ஆகாய முழுவதும் பிரகாசிக்கத் தோன்றிய நட்சத்திரச் சுடர்கள் சமுத்திரத்தில் சூரியன் எனும் ஒளி பரப்பும் மணி விழுந்து விட்டதென்று அஷ்டதிக்குப் பாலகர்கள் அதைத் தேடிப்பிடிக்க வைத்துக் கொண்டிருக்கும் விளக்குகளைப் போல் இருக்கும் என்பதாம்.

தோட்டு மென்மலர்ப் பூங்கணை துரப்ப மெல்லலிநாண்
பூட்டு பைங்கழை குழைத்தெதிர் வேனிலான் புகழைத்
தீட்டு தாரகை யெழுத்தொளி சிறந்திட வணிவான்
கூட்டுமை யெனச் செறிந்தது கூரிருட் பிழம்பே.

பல இதழ்களைக் கொண்ட புஷ்பங்களைச் செலுத்த மெல்லிய வண்டுகளாகிய நாரியைப் பூட்டிய கருப்பவில்லை வளைத்து எதிர்க்கும் அநங்கனுடைய புகழை விளக்க வரையப்பட்ட தாரகைகளாகிய எழுத்துக்களின் ஒளி சிறந்து விளங்க அழகிய ஆகாயமானது மைபோல் கங்குலில் திரண்டு காணப்பட்டது.

பிராட்டியார்

(ஸ்ரீமதி. பண்டிதை-அசலாம்பிகை அம்மையார்.)

இக்கருத்தினுக் கேற்பப் பின்னால்,

"மாண்பிறந்தமைந்த கற்பின் வாணுதல் நின்பால் வைத்த
சேண்பிறந்தமைந்த காதல் கண்களிற் றெவிட்டித் தீராக்
காண்பிறந்தமை யால் நீயே கண்ணகன் ஞாலந்தன்னுள்
ஆண்பிறந்தமைந்த செல்வம் உண்டனை யாதி யன்றே."

என்று கூறுகின்றார். இதனால் "பிராட்டியாரே தெய்விகக் காதல் கூர்ந்து நோக்கும் பேற்றினுக்கு இவ்வகண்டமான உலகில் நீர் ஒருவரே உரிமைபெற்றீர்; ஆகையினால் ஆண்பாலாய்ப் பிறந்தமைக்கு உள்ள முழுச் செல்வமும் உம்மையே வந்தடைந்தன" என்பதை விளக்கியதாயிற்று. தான் பிராட்டியாரைத் தொழும் இஷ்ட தெய்வமாகத் துணிந்தமையால் அவரது சிறப்புகளைப் போற்ற உரியவரானார். இதே அநுமான் பிராட்டியாரைத் தரிசிக்காத முன்னம் மண்டோதரியைக் கண்டு பிராட்டியோ வென ஐயுற்று அல்லளெனத்தெளிந்தபோது,

"கானுயிர்த்ததார் இராமன்மேல் நோக்கிய காதல் காரிகையார்க்கு
மீனுயர்த்தவன் மருங்குதான் மீளுமோ நினைந்ததுமிகை."

என எண்ணியிருக்கின்றார். பிராட்டியைத் தரிசித்த பிறகு இராமனை நோக்கி,

"கண்ணகன் ஞாலந் தன்னுள் நீயே
ஆண்பிறந்தமைந்த செல்வம் உண்டனையாதி யன்றே".

என்று கூறியிருப்பதை நோக்கின் அநுமானுடைய இடம் பெற்ற மனதில் பிராட்டியார் எத்தகைய இடம்பெற்றனர் என்பது புலனாகும். நிற்க. இனி, வானுயர் கற்பினாள் தன் புண்ணிய மேனி

"தீண்டவஞ்சுவான் உலகம்பூத்த
கண்ணகன் கமலத்தண்ணல் கருத்திலாட் டொடுதல் கண்ணின்,
எண்ணருங் கூறாய் மாய்தி என்றதோர் மொழியுண்டென்பான்"

எனவும்,

"தீண்டிலன் என்னும் வாய்மை திசைமுகன் செய்தமுட்டை
கீண்டில தநந்தன் உச்சி கிழிந்தில தெழுந்துவேலை
மீண்டில சுடர்கள்யாவும் விழுந்தில வேதம் செய்கை
மாண்டில தென்னுந்தன்மை வாய்மையானுணர்தி"

எனவும்

"உம்பி புல்லினாற்றொடுத்த தூய
சாலையுள் இருந்தாள் ஐயதவஞ்செய்த தவமாந் தையல்"

எனவும் தொடர்ந்து புகன்று பிராட்டியாரின் தூய்மையை விளக்கிக் காட்டுகின்றார். தவம் என்பதே அன்பு நிலை. அவ்வன்பு நிலை ஆண்பாலாரை விடப் பெண்பாலாரிடை இயல்பாகவே அதிகம் என்பது தெளிவு. இத்தகைய அன்பு நிலையை ஆதாரமாகக் கொண்டு வளரும் தவமானது அன்புக்கு நிலைக்களனாகிய பெண்மையைப் பற்றிச் சிறக்க விரும்பி நீண்டநாள் தவம் புரிந்து பிராட்டியாரைப் பெற்றதென்று கூறத்தகும் என்பது கருத்து. ஆனால் உலகில் தவவேடம் புனையத் தீவிரமாக முன்வருவோர் ஆடவர்களேயாவர். அவர்களிற் சிலர் பெண்கள் தவஞ் செய்ய அருகர் அல்லர் என்று கூறுவது மன்றித் தவத்தை யழிப்பது பெண்களே யென்றும் புகல்வதுண்டு. உண்மையை ஆராயுமிடத்துத் தவவேடம் புனைந்து அறிவில்லாத பெண்களைத் தவறிழைக்கச் செய்வது அநேகமாய் ஆடவர்களுடைய சூழ்ச்சியே என்பது நீதிமன்றங்களில் அநுபவமுடையோர்க்கு விளங்காததன்று. அவ்வாறின்றி இல்வாழ்வான் ஒருவனுக்குத் தனது அன்புக்குரிய மனைவி காலகதியடைந்தால் அச்சவத்தை அடக்கஞ் செய்து முடிந்ததும் மறு மணத்தைப் பற்றிச் சிந்தனை எழுவதியல்பு. அன்பில்லாத கணவன் இறந்தாலும் பெண்ணுள்ளம் இலேசில் துணிவதில்லை. ஆதலால் தியாக உணர்ச்சியும் தவ உணர்ச்சியும் தவவேடம் புனையாத பெண்களிடையே அதிகம் என்பது திண்ணம். இவ்வுண்மையைக் கவியரசர் தவஞ் செய்த தவமாந் தையல் என்ற மொழித் தொடரினால் விளக்கியுள்ளார்: இதனால் ஆடவரில் உண்மைத் துறவுடைய தக்கோர் இல்லையென்று கூறுவதாக வாசகர் கொள்ளலாகாது. பெற்ற பேறறிவினாலும் முற்றிய ஞானத்தாலும் ஆண்பாலார் இச்சையை யறுக்கும் ஆற்றல் பெறுவர். அவ்வகையான அரிய சாதனங்களுமின்றி மாசற்ற அன்பு ஒன்றிற்காகவே சகல சுகங்களையும் துறக்கப் பெண்கள் தயங்கமாட்டார். நமது உலக சிரேஷ்டராகிய மகாத்மா காந்தியடிகள் முன்பொரு சமயம் ஸ்ரீஜத் சித்தாஞ்சனதாஸர் காலமான பிறகு ஸ்ரீமதி. வஸந்தாதேவியின் கைமை நோன்பைக் கண்டு தாழாது மனமுடைந்து வைதவ்யத்தின் மகிமை என்னும் தலைப்புடன் தமது யௌவன இந்தியாவில் ஓர் அரிய கட்டுரை எழுதியிருந்ததை நினைவுறுவது நலமாகும். இந்நுட்பமான கருத்தினையே காட்சிப் படலத்தில்,

"வெங்கனல் மூழ்கியும் புலன்கள் வீக்கியும்
நுங்குவ அருந்தவ நீக்கி நோற்றவர்
எங்குளர் குலனில்வந் தில்லின் மாண்புடை
நங்கையர் மனத்தவ நவிலற்பாலதோ"

என அநுமான் வாயிலாகக் கவி சிறப்பிக்கின்றார். இதனால் உடலாற் காட்

டும் தவச் சின்னங்களிலும் மானதத் தவமே மதிக்க முடியாததென்பது திண்ணம். உலகை வஞ்சிக்கத் தவவேடம் பூண்பவர்களிடமும் தோற்ற மாத்திரையால் ஈடுபடும் தவம் என்னும் ஒரு பண்பு உண்மையாக மனத்தவ முயலும் பிராட்டியாராகிய இளமடந்தையின்பால் அமைய நேர்ந்தது அத் தவத்திற்கே சிறப்பாதலினால் "தவஞ் செய்த தவமாந் தையல்" என்றருளினர்போலும். பின்னரும்

"சோகத்தாளாய நங்கை கற்பினாற் றொழுதற்கொத்த
மாகத்தார் தேவிமாரும் வான்சிறப்புற்றார் மற்றைப்
பாகத்தாள் இப்போதீசன் மகுடத்தாள் பதுமத்தாளும்
ஆகத்தாள் அல்லண் மாயனுயிர மெனலிமேலாள்"

என்னும் செய்யுளால் பிராட்டியார் தவப் பெருமையினால் பெண்மை இனத் தொடர்பு பற்றித் தெய்வ மாதரும் மும்மைச் சக்திகளும் விசேஷ மேன்மையை யடைந்தனர் என்று வியந்துரைத்தனர்.

இத்தகைய உண்மைத் தவவிளக்காகிய பிராட்டியாரின் கண்களினும் நீ உளை. கருத்தினும் நீ உளை. வாயின் எண்ணினும் நீ உளை. உண்மை இதுவாகப் பிராட்டியார் நின்னைப் பிரிந்தனர் என்பது பொருத்தமுடையதாகுமோ என வினவுகின்றார். தேவியாரின் தியானமூர்த்தியாக இராமன் விளங்குவதை இது குறிக்கின்றது. மிதிலைக்காட்சிப் படலத்திலேயே "இருவரு மாறிப் புக்கிதையம் எய்தினர்" என்று கூறியிருப்பது சிந்திக்கத்தக்க தொன்றாம். இவ்வாறே பிராட்டியார்பால் இராமனது பிரிவாற்றாமையை உணர்த்திய போதும்

"ஆண்டகை நெஞ்சினின்றும் அகன்றிலை அழிவுண்டாமோ?
ஈண்டுநீ யிருந்தாய் ஆண்டங்கெவ் வுயிர்விடும் இராமன்"

என அநுமான் எடுத்துக் கூறியுள்ளார்.

காட்சிப் படலத்தில் கவியரசர் தம் கூற்றாகவே

"அரியமஞ்சி னோடஞ்சனம் முதலிவை அதிகம்
கரியகாண்டலும் கண்ணினீர் கடல் புகக் கலுழ்வாள்"

என்று இருபெருங் காதலர்களின் மாறுபாடில்லாத் தலையன்பின் இயற்கை நிலையைக்கூறியுள்ளார். மாசற்ற மெய்ப்பத்தி யுடையோர் நிலையும் இஃதே யென்பது ஆஸ்திகர் உணராததன்று.

பின்னும் பிராட்டியார் ஆண்டு அரக்கியராற்படும் துன்ப நிலையை அநுமான் நன்கு விளக்க எண்ணி

"அலகையின் குழுவும் அஞ்சச்
செருக்கினல் கண்டு செய்ய, மெய்க்கனல் தீக்கச் சீர்த்த
இரக்க மென்றொன்றுதானே யேந்திழை வடிவமெய்தித்
தருக்கிய சிறையுற்றன்ன தகையள் அத்தமியள் அம்மா"

எனப் புகன்றுள்ளார். இயல்பாகப் பெண்மையுள்ளம் பேய் என்று சொன்னாலும் நடுக்கமெய்தும். அத்தகைய வருத்தும் தன்மையையுடைய பேய்க்

கூட்டங்களும் இராவணனால் காவலாக வைக்கப்பட்ட அரக்கியரைக் கண்டால் அஞ்சிப் பதுங்கும் எனில் உத்தம உயர்குல வனிதையாகிய பிராட்டியார் இன்னல் எவ்வாறிருக்கும்? அதுபற்றி நோக்குமிடத்து யாவரும் மனமுருகி இரங்கத்தக்க இரக்கம் என்பதொன்று பெண்வடிவம் கொண்டு வலிய சிறைவாய்ப்பட்டு நிற்பதாகக் கூறலாமென உவமிக்கின்றார். இம்மட்டிலன்று இலங்கைமாநகரில் இந்திரனுக்குரிய போகமாதர்களும் தங்கள் குற்றேவலில் என்ன குறை நேருமோ? யாது தண்டனை கிடைக்குமோ? என்னும் அச்சத்தினால் தம்முயிர் ஊசலாடுவதாகப் பிரதி கணமும் அஞ்சி உழல்கின்றனர் எனவும் எடுத்துக்காட்டி அரக்கனது ஆண்மை இராமன் மனதிற் பதியக் கூறினர். பிறகு சோலைவாய் தசமுகன், நள்ளிருளிற் போந்து குறையிரந்ததும் தேவியார் அஞ்சாது இழித்துரையாடியதும் மேல்விளைந்த பிறவும் கூறி, இறுதியாகப் பிராட்டியார் அளித்த அடையாளப் பொருளாகிய சூளாமணியை நல்கி இராமனைப் பரமானந்தத்தில் மூழ்குவிக்கின்றார்.

இவ்விடத்தில் கவிவேந்தர்

"மாமணிக் கரசைவாங்கிக்
கைத்தலத்தினிதின் ஈந்தாள் தாமரைக் கண்களார
வித்தக காண்டியென்று கொடுத்தனன்."

என்று உள்ளுவகை பொங்கும்படி வருணிக்கின்றார். காதல் நாயகியாரின் தலையணியை நின் இரு விழிகளாலும் பேறுறவு நீங்கும் வண்ணம் அவரைக் காண்பதுபோலக் காண்பாயாக என்று வாயார மனமாரக் கூறிக் கொடுத்ததினால் மெய்க்காதலரின் பிரிவின் தீயை அணைத்தவராயினர். ஜனகன் அளித்த திருமகளை மீண்டும் ஜனகரை யொத்த நிர்விகாரியாகிய அநுமான் தேடி யளித்ததையே ஒத்தது இக்காட்சி. ஈண்டு கவியரசர் அநுமனைத் தமக்குள்ள ஆற்றாத மகிழ்ச்சியினால் "வேதநன்னூல் உய்த்துள காலமெல்லாம் புகழொடு மொக்க நிற்பான்" எனப் போற்றிப் புகழ்கின்றார்.

வேதம் என்பது வடமொழிச் சொல்; அது அறிவு எனப் பொருள்படும். உலகிற்றோன்றும் உருவங்களெல்லாம் மறையுமாயினும் அறிவுணர்வு அழியாததொன்று; அத்தகைய அழிவில்லாத மெய்யறிவுள்ள காலமெல்லாம் இதனால் ஏற்பட்ட அரும்புகழ் குறையாது ஒரே தன்மையில் உடனாக நிற்பவன் மாருதி என்று இடம் நோக்கி வழுத்தியுள்ளார். இதனை

"ஐயனுக்கங்கி முன்னர் அங்கையாற் பற்று நங்கை
கையெனலாயிற்றன்றே கைபுக்க மணியின் காட்சி."

எனும் அடிகளால் உணர்கின்றோம்.

இவ்வரலாறுகளைக் கூறும் சுந்தரகாண்டத்தில்தான் பிராட்டியாருடையவும், பெருமானுடையவும் சோகமாகிய காரிருள் முடிவுற்று அருணோதய விளக்கம் எழுந்தின்பம் நல்கியதாதலின் இதனைப் பாராயணம் செய்வோர்களின் துன்பங்கள் நீங்கிச் சுகம் உறுதல் இன்றும் கண்கூடு. அநுமானது தலைமை வெற்றியும் இதிலிருந்தே ஆரம்பமாகின்றது. அரக்கனது அருந்தவ வன்மையும் தேய்ந்து தேய்ந்து உருவிழக்கும் தன்மையை யுறுகின்றது. அமரர்துயரின் ஆயுட்காலமும் குறுகி நின்றது. அந்தணர் முனிவராதியர் தவமும் நிறைவுறும் உத்தமகாலம் நெருங்கியது. சுருங்கக் கூறுமிடத்து மறந்

தின் ஆட்சி மடிந்து அறத்தின் ஆற்றல் தலைநிமிர்ந்ததே பொருளாகும். இக்கருத்தை அறம் வெல்லும் பாவம் தோற்கும் என்ற ஆன்றமொழி உறுதிப்படுத்துவதாகும், பின்னர் கணமும் தாமதியாமல் தென்றிசை நோக்கி வானரத் தலைவர்களுடன் புறப்பட்ட நிகழ்ச்சியுடன் இச்சுந்தர காண்டம் முடிவெய்துகின்ற தென்பதை வாசகர் உணர்ந்ததே. இனி நம்பிராட்டியாரின் பெரும் பண்பினைக் கும்பகருணப்படலத்தில் அவன் வாயிலாக இரண்டு குறிப்புகளைக் கவி கூறியுள்ளார் அவைகளில்,

"திட்டியின் விடம் அன்ன கற்பின் செல்வியை
விட்டிலையோ; இது விதியின் வன்மையே."

என்பதொன்று, விடம் என்பது உண்டாலோ அன்றி உடலின் குருதியொடு கலந்தாலோ கொல்லும் வன்மையுடையது. கலங்காத கற்பின் செல்வியாகிய பிராட்டியார் தம்மைத் தவறான எண்ணம்கொண்டு காண்பதொன்றினாலேயே கொல்லும் விடம் போன்றவர் என்பது பொருள். கண்களாற் காண்பதாலேயே கொல்லும் ஓர் விடத்தை எவரும் காணத் துணியார். அதற்கும் நீ அஞ்சவில்லையென்பதால் இது பண்டைத் தீவினையின் பயனை நுகர்விக்கும் விதியின் வல்லமையே என்று கும்பகருணன் எண்ணியதாகக் காட்டுகின்றார். இரண்டாவது அக்கும்பகருணன் அன்பு காரணமாக நல்லறிவு புகட்டவெண்ணி,

"கல்லலாம் உலகினை வரம்புகட்டவும்
சொல்லலாம், பெருவலியிராமன் றோள்களை
வெல்லலா மென்பதும் சீதைமேனியைப்
புல்லலாமென்பது போலு மாலையா."

எனவும் முடித்துக் கூறுகின்றான்.

சீதை எவ்வகை யுபாயத்தாலும் மனதினாலும் நினைக்க முடியாத கற்பின் செல்வி என்பதுபோலவே இராமன் றோள்களை வெல்லலாம் என்று நீ எண்ணுவதும் இவ்விரண்டும் முடியாத காரியம் என்பது பொருள். ஆனால் கும்பகருணன் உணர்த்திய இம்முடிவுகளைத் தசமுகனும் முதல்நாள் போரில் தோற்றுத் திரும்பியதிலிருந்து மிகமிகத் தெளிவாக உட்கொண்டிருக்கின்றான். மாலியவானாகிய பாட்டனிடம்

"பொறையினால் உலகம் போலும்,
வேயெனத் தகையதோளி இராகவன் மேனிநோக்கி,
தீயெனக் கொடியவீரச் சேவகச் செய்கை கண்டால்
நாயெனத் தகுவமன்றோ காமனும் நானுமென்றான்."

என்று இராமன் பேரழகையும், விற்றிறத்தையும் மனமாரத் துதிக்கின்றான். ரூபத்தால் காமன் நாய்க்கிணையாவன். ஆண்மையினால் நான் நாய்க்கிணையாவேன். இவ்விரண்டு சிறப்புகளும் ஒருங்கமையப்பெற்ற இராமனைத் தனது

உயிர்க்காதலனாகப் பெற்றுக் கூடியிருந்த ஜானகிக்கு எவ்வாறு பிற ஆடவர்பால் மதிப்பு ஏற்படும் என்பதே அக்கவியின் உட்கிடக்கை. ஆகவே இராமனைக்கண்ட கண்களுக்கு மன்மதனும் தானும் நாயாகவே தோன்றும் என்னும் தீர்மானத்திற்கு வந்த இராவணன் பிராட்டியார் தனக்கு இணங்க மாட்டார் என்பதையும் இராமனை விற்போரில் வெல்லமுடியா தென்பதையும் நன்கு உணர்ந்திருந்தானென்பது திண்ணம். ஆனால், தான் மானத்தாற் கவரப்பட்டுத் தம்பியின் அறவுரையை அவமதித்துப் போர்புரிய எவினான். அக்கருத்தினைப் பின்னும் சில இடங்களிலும் தெற்றென விளக்கி யிருப்பதாகக் கவி கூறுகின்றார். இத்தகைய பேரறிவுடைய ரெல்லாம் தீச்செயலென்று தெரிந்தும் விளக்கில் வீழும் விட்டில்போல் மடியத் துணிவது மதியினால் விதியை வெல்ல முடியா தென்பதை நமக்கு அறிவுறுத்தும் இயற்கைப் பாடங்களெனவே கொள்ளல்வேண்டும். எனினும் ஆழ்ந்து சிந்திக்குங்கால் (மதியினால் விதியை வெல்ல முடியாதென்பது ஒரு வகையிற் பொருந்துமாயினும்) அதுவே முடிந்த பொருளன்று. சாதாரண மதிவன்மை யுடையார்க்கே அது பொருந்தும். இன்றேல் நீதி நூல்கள் பலபட விரிந்து மக்களுக்கு அறிவுறுத்துவது எதற்கு? இதுபற்றியே இராவணனே மற்றோரிடத்தில் தன்னைச் சிறு துரும்பாகவு மதியாத பிராட்டியிடம் தனக்கு மட்டில் அன்பு குன்றாது வளர்த்தலையெண்ணிக்,

"கற்றனர் ஞானம் இன்றேல் காமத்தைக் கடக்கலாமோ."

என்று ஞானம் ஒன்றிற்கே இச்சையை அடக்கியாள முடியும் என்று தெளிந்து கூறுகின்றான்.

பெரும் பெரும் பட்டதாரிகளாகத் திகழும் கல்விச் செல்வம் பெற்றவர்கள் எல்லாம் இயற்கை விருப்பத்தை யடக்கியாள ஆற்றல் பெற்றவர்களல்லர். சில சமயம் தங்கள் அரும்புகழினுக்கு இழுக்கு வராமல் உலகினர் முன் காட்டிக்கொள்ள தாம்பெற்ற கல்வி யறிவைத் துணைக்கொண்டும் தந்திரமாகத் தவறிழைப்பர். இத்தகைய உதாரணங்களில் நல்வழியில் செலவுய்க்கும் கல்வியின் பயன் புல்லிய செய்கைக்கும் துணைபுரிவதாகின்றது. இது குறித்தே.

ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையிற் பேதையாரில்.

என்றார் பெரியர். ஞானியரிலும் சிலர், தவறியதாகக் கேட்கின்றோமாதலின், ஞானமும் முழுப்பயனை யளிப்பதாகத் தெரியவில்லையே என வினவலாம். அஃது சிந்திக்கத்தக்க தொன்றே. ஆனால், உண்மை ஞானம் ஆசையழிந்த இடத்தில்தான் கால்கொள்ளும். அவ்வாறின்றி முயற்சியின் இடைப்பட்ட நிலையில் உள்ளவர் அரிதிற்றவற நேருவ தியற்கையே. ஆனால் அன்னார் தம் தவறினுக்கிரங்கி அவ்வாறு பின்னும் பிழைபட முடி

யாத தீவிர நிலையையடைய விழைவர். முயல்வர். அடையவும் பெறுவர். கலைக்கூடத்தில் பரீட்சையில் ஒப்பேருத (ஊக்கமுள்ள) மாணவனொருவன் தனக்கு நேர்ந்த தோல்விக்கு நாணிப் பின்னும் பன்மடங்கு ஊக்கத்துடன் கல்வியைப் பயின்று வெற்றிபெறுவது கண்கூடு. இன்னர் விஷயத்தில் முதலில் பெற்ற தோல்வியே பின்புபெற்ற வெற்றிக்குத் துணைக் காரணமாயிற்றென்பது சிந்திக்கத்தக்க தொன்ரும்.

இவ்வாறு ஆரம்பஞானியரிற் சிலருக்குத் தவறுகள் குறுக்கிட்டாலும் அதுவே அவரைத் திருத்தி மேனிலைப்படுத்தும் கருவியாகப் பயன்படுதலுமுண்டு. இதனுல் எவ்வகையிலும் இச்சையை அடக்கும் ஆற்றல் ஞானம் ஒன்றிற்கே உரித்தென்பது மறுக்க முடியாத தொன்று. வேதாமகங்களை ஓதியுணர்ந்த இராவணனே தான் கற்ற கல்வி தனது மனதை அடக்கப் போதியதில்லை யென்றும், உண்மை ஞானம் ஒன்றே காதலைக் கடக்கும் தெப்பமென்றும், நன்குணர்ந்து "கற்றனர் ஞானமின்றேற் காமத்தைக் கடக்கலாமோ" என்று கூறியிருக்கின்றுன். எனில், தற்காலத்திய லௌகிகக் கல்வியில் தலைசிறந்தவர்களென மதிக்கப்படும் எவரும் மனதை யடக்கும் மாண்பினைப் பெறுதல் எளிதன்று. எனவே பெருங் கல்வியாளனுகிய இராவணனும் தன்னுல் அடையமுடியாத பொருள் என்பதை நன் குணர்ந்தும் தன்மனத்தைத் தன்வயமாக்கமாட்டாதவனுயினுன் என்று கொள்ளல் வேண்டும். இதுபற்றியே தனது இளவலாகிய கும்பகருணன் அறவுரைக்குச் செவிகொடாது சினந்து வெறுத்து நிந்தித்தான். தம்பியாகிய கும்பகருணன் தமையனது பேதமைக்கிரங்கித் தனது கடமையாகத் தான் கருதிய போர் மேற்கொள்ள விரைந்தான்.

ஏஜண்டுகள் தேவை.

எல்லா ஊர்களிலும் நமது 'ஆனந்தபோதினி' மாத, வாரப் பத்திரிகைகளை விற்பதற்கும், சந்தா சேர்த்துக் கொடுப்பதற்கும், விளம்பரம் சேர்த்துக் கொடுப்பதற்கும் தக்க சாமர்த்தியமுள்ள ஏஜண்டுகள் தேவை. விவரம் அறிய விரும்புவோர் எமக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும். நமது புஸ்தகங்களும் பத்திரிகைகளும் எல்லா ஸ்டேஷன்களிலுமுள்ள ஹிக்கின்பாத்தம் புஸ்தகசாலைகளில் கிடைக்கும்.

மானேஜர்.

காதலருக்கு இன்பந்தரும் நூதன நூல்
அன்பர்கள் ஆவலுடன் எதிர்பார்த்த ஆனந்த சாஸ்திரம்
வெளியாயிற்று!

இன்பவாழ்க்கையின் இரகசியங்கள்

(நான்காம் பதிப்பு)

அழகிய நீலை கலிகோ பைண்டு செய்யப்பட்டு கண்
ணைக் கவரத்தக்க அநேக ஆப்டோன் படங்களுடன்

400-பக்கங்களுக்குமேல் அழகிய பெதர்வெயிட்
பேபரில் சுத்தமான எழுத்தில் அச்சிடப்பட்டுள்ள

இதன் விலை ரூபா 2.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூபா 1—8—0

இது காதலர்க்கு இன்பந்தரும் நூதன நூல்; போகானந்தத்தை விரும்பும் பூமானகள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஆனந்த இரகசிய சாஸ்திரம்.

இது காதல் இன்பத்தை உள்ளவாறுணர்ந்து அனுபவித்து, இல்வாழ்க்கையை நல்வாழ்க்கையாக நடத்திப் பேரானந்தக் கடலில் மூழ்கி நற்சந்ததியைப் பெற்று, மறுமைப் பயனையும் அடைதற் கேதுவாயிருக்கும்படி பற்பல இன்பமார்க்கங்கள் நிறைந்த இந்நூல் இப்போது இனிய தமிழ்நடையில் வெளியிடப்பெற்றிருக்கிறது. இதில் நமது பூர்வீக கொக்கோக சாஸ்திரத்தின்சாரம்

6-NOV193

சங்களும், அகப்பொருள் நூல்களின் கருத்துகளும், தேக தத்துவ சாஸ்திரங்கள், வைத்திய சாஸ்திரங்கள் முதலியவற்றிற் கூறப்பட்டிருக்கும் பல அரிய விஷயங்களும், நாகரம், தெலுங்கு, கன்னடம், மாரட்டி, அரபி, இந்துஸ்தானி, பார்ஸி, இங்கிலீஷ், பிரெஞ்ச் முதலிய பாஷைகளிலுள்ள இன்பரச நூல்களின் கொள்கைகளும், இன்ப வாழ்க்கையின் இரகசிய முறைகளும், ஏற்றிற்றுப் பொருத்தமான மனத்தையும் கண்ணையும் கவரும் ஆப்டோன் படங்களும், லயன் பிளாக்குகளும், இன்னும் இல்வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகிய அநேகம் விஷயங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதனை வாங்கிப் படிப்போர் உண்மைக் காதல் என்பது இன்னதென்பதையும், இன்னவிதமான வர்களை மணம்புரிந்தால்தான் இன்பம் ஏற்படுமென்பதையும், இல்வாழ்க்கையில் இன்னவித மணக்கிரமங்களை அனுசரித்தால்தான் அளவற்ற ஆனந்தமுற்று அழகிய சந்ததிகளைப் பெற்று ஜீவித்திருக்கலாமென்பதையும் உணர்ந்து இவ்வுலகத்தில் அடைய வேண்டிய இன்பத்தையும், மறுமை இன்பத்தையும் அடைவார்கள். இதனை ஒவ்வொரு குடும்பத்தினரும் வாங்கி வாசிக்கலாம்.

ஷை தெலுங்கு பதிப்பு விலை ருபா 2.

இல்லற இன்ப விஜயம்

"இது எங்கே யிருக்கிறது? என்ன ரூபமுடையது? இதை எப்படி உபயோகித்து ஆண் மக்களும் பெண் மக்களும் உலக இன்பத்தை அனுபவிக்க வேண்டும்?" என்று பலர் இக் கேள்விகளைக் கேட்கலாம்.

உண்மைக் காதல் ரசத்தை விரும்பும் உத்தமர்களே! சுகானந்தத்தை விரும்பும் சகோதர சகோதரிகளே! "இல்லற இன்ப விஜயம்" என்னும் சிற்றின்பரச பொக்கிஷம், ஆனந்தக் களஞ்சியம் சென்னை 'ஆனந்தபோதினி' ஆபீஸில் தமிழ்நாட்டுச் சுகவாசிகளின் அதிர்ஷ்டவசத்தால் விற்பனைக்குத் தயாரித்து வைக்கப்பட்டிருக்கிறது; இஃதோர் அருமையான தமிழ்ப் புத்தகம்; இதைப் படித்து ஆண் பெண்கள் அனுபவிக்கத் தக்க இன்ப வகைகள் அத்தனையும் பிரத்தியக்ஷமாகக் கண்டு பேரானந்தத்தை அடையலாம்.

இதன் விலை ரூபா 1—8—0

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூபா 1.

கனகபூஷணம் 2-பாகம்

இதிலுள்ள கதாநாயகிக்கு நேரிடும் ஆபத்துகளை நினைக்கப் படிப்போர் கண்களில் நீர் வடியும். இக்கதையில் சோகரஸ மொன்றேயன்றி ஏனைய ரசங்களும் பொருந்தியிருக்கின்றன. இதிலுள்ள கதாநாயகி பயங்கரமும் பிராணாபத்துமாகிய இக்கட்டுகளில் சிக்கியபோதும், தன் கற்புக்கு அழிவு நேரிடாது அதனைக் காப்பாற்றிக் கொள்வது மிக்க அதிசயமாயிருக்கும். இதில் இலௌகீகத்தில் சம்பவிக்கும் சகல நடவடிக்கைகளும் ஆசாரவொழுக்கங்களும் நமது நாட்டு மாதருக்கு அமைந்திருக்க வேண்டியவண்ணமாகச் செவ்வனே விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன. விலை ரூபா 3-8-0.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 31-10-33 வரை விலை ரூ. 2—0—0

ஆனந்தபோதினி ஆபீஸ், மதராஸ்.

புதியன புனைதல்

(முத்து ராஜாரத்தினம்)

கல்வி அபிவிருத்திக்குப் பல சாதனங்கள் உள்ளன. அவற்றுள் நாவல்கள் என வழங்கும் புதிய கதைகளைப் படிப்பதும் ஒன்றாகும். இவ்விருபதாம் நூற்றாண்டில் 'புதியன புனைதல்', மிகுந்து வருகின்றது என்பது அனைவரும் அறிந்ததே. அருமைப் பத்திரிகையான ஆனந்தபோதினி போன்ற சில பத்திரிகைகளில் வெளி வருகின்ற—சிறந்த முறையில் திகழ்கின்ற விஷயங்கள் ஆண்பாலாரும் பெண்பாலாரும் அகமகிழும் வண்ணம் எழுதப்பட்டு பயன் தந்து வருகின்றன என்பது வெளிப்படை.

'புதியன புனைத'லில் சிலர் தம்மனம் போன வண்ணம் கதைகளை அமைக்கின்றனர்; அவற்றுள் காமச்சுவை அதிக மிருப்பின் படித்தற்குப் பலரும் விரும்புகின்றனர் என்பதே மேற்கூறியபடி அமைத்தற்குக் காரணமாகின்றது.

இப்பொழுது உலவிவரும் நாவல்களிற் பல பெண்பாலார் அருவருப்பின்றிப் படித்தற்கு இயலாத வகையில் எழுதப்பட்டிருக்கின்றன. அதனால் அறிஞர்களிற் பலர் 'நாவல்' என்றவுடனே நடுக்கங்கொள்கின்றனர்; ஒழுக்கம் கெடுமென உள்ளம் கூசுகின்றனர்; அத்தகைய நாவல்களைப் படித்தல் தீமை பயக்குமென்று திடமாய்க் கூறுகின்றனர்; தேர்ந்தெடுக்கப்பெற்ற சில நாவல்களையே பெண் மக்கள் படிக்க வேண்டுமென விதிக்கின்றனர். இவை முற்றும் உண்மை என்பதை எவரும் மறுக்க முன்வரமாட்டார்கள்.

நாவல்கள், பத்திரிகைகளில் சில ஆண்டுகளாக மிகுதியும் வெளி வருகின்றனவாதலின் அது குறித்துச் சில கூற விரும்புகின்றேன்.

தனிப்புத்தகங்களாக வெளிவரும் நாவல்களுக்கும் பத்திரிகைகளில் வெளிவரும் நாவல்களுக்கும் வேறுபாடு காணவேண்டியுள்ளது. தனியாக வெளியிடும் நாவல்களில் ஆபாசங்கள் பல சேர்ந்திருப்பினும் பாதகம் அதிகமில்லை; ஏனெனின், அவற்றை விரும்புபவர்கள் மட்டும் விலைக்கு வாங்கிப் படிப்பதனால் என்க. மற்றுப் பத்திரிகைகளில் வரும் நாவல்களோ அனைவரும் வாங்கிப் படித்தற்குரியனவாக விளங்குகின்றன. பத்திரிகை படிப்போர் காமச்சுவையில் விருப்புடையவராகவும் இருக்கலாம், விருப்பில்லாதவர்களாயுமிருக்கலாம், ஆண்பாலாராகவும் இருக்கலாம், பெண்பாலாராகவும் இருக்கலாம். ஆதலின் கூடியவரை பத்திரிகையில் வெளிவரும் நாவல்கள் வெளியிடக்கூடாததாகிய சிருங்கார ரசத்தை மேற்கொள்ளாதனவாய்ப் பிற கலைகள் அனைத்தும் கலந்து திகழும் முறையில் எழுதப்படல் வேண்டும். ஒரு

கதைப் போக்கில் பிறர் அருவருப்புக்கொள்ளும்படி 'ஆடை அவிழ்ந்தது' 'கரங்கள் இரண்டையும் எடுத்துத் தன் ஆகத்தில் அணைத்துக்கொண்டாள்'' என்பன போன்ற சொற்களையும் தன் கணவனையன்றி வேறு ஆடவர்களை அச்சம், நாணம், பயிர்ப்பு முதலிய அருங்குணங்களை விட்டுப் பலவாறு வேடிக்கையாக—'காம வெள்ளத்தில் மூழ்கிக் கண் தெரியாத நிலைமையில் சரசமாக விரும்பினள் ஒருத்தி' என்பது போன்ற செயல்களையும் நீக்கி எழுதுதலே நலம் பயக்கும். மனம் எப்பொழுதும் பயின்ற—தீமையான விஷயங்களையே அடிக்கடி நினைந்து ஈடுபடும் தன்மையுடையது. அதனால் அன்றோ பெரியோர் 'தீயார் குணங்கள் உரைப்பதுவும் தீதே' என்பது போன்ற நீதிகளை அறிவுறுத்திச் சென்றனர்.

ஆதலின் கற்பு நிலைக்குப் பங்கம் வாராத விதம்-மனம் தீய நெறியில் செல்லாத விதம் அன்பு நெறியில் செல்லும் வகை, பக்திக் கடலில் மூழ்கும் வகை சிறந்த ஒழுக்க முறையில் நாவல்களை எழுத வேண்டுமெனப் புதியன புனைகின்றவர்களை வேண்டிக்கொள்வதுடன் அத்தகைய சிறந்த முறையில் எழுதப்படும் கதைகளுக்கே பத்திரிகையில் இடந்தரும்படி பத்திரிகாசிரியர்களையும் பன்முறை வேண்டுகின்றனன்.

வீரத்தாய்.

——:o:——

(வீடூர்-அ. சின்னராஜன்.)

இராகம்-செஞ்சுருட்டி. தாளம்-ஆதி.

1. பால்மணம் வீசிவரும் பசுங்கிளிக்கே-நான்
"பய"மெனும் பாலமுதை யூட்டுவதில்லை
வேல் விழி தெறிக்கவொரு வேடுவன்வந்தே-யுனை
வெரட்டி யடிப்பானென்றும் சொல்லுவதில்லை.
கால்களிரண்டு மில்லாக் கருப்பனடீ-அம்மா!
காக்கைக்கழுகு மூக்கனிதோபாரடீ
சால்வயிற்றுனைக் "குட்டிச்சாத்தானை"ப்பாரு-இங்கே
சத்தம் போடாதே யென்றும் சாற்றுவதில்லை.

2. சல்லடைக் கண்ணனடீ சட்டித்தலையன்-இவன்
சங்கிலிக் "குச்சிநாயை"க் கொண்டுவருவான்
கல்லுளிப் பேய்கள் பல வந்திருக்குதாம்-எனக்
கண்ணையுருட்டிப் பயம் காட்டுவதில்லை.
அல்லலுமில்லையடீ அச்சமுமில்லை—இங்கே
"ஆனை"வந்தாலு முனைக்கண்டு நடுங்கும்,
செல்லக் களஞ்சியமே சிங்கக்குட்டியே-என்று
சித்தமிறுகதினம் செப்பிவருவேன்.

கம்பியில்லாத் தந்தி

(டி. பரமேஸ்வரன்.)

எப்படி சூரியனிடமிருந்து ஒளியும் உஷ்ணமும் பூமிக்கு வருகிறதோ, இருவர் பேசும்பொழுது ஒருவர் வாயிலிருந்து கிளம்பும் சப்தம் மற்றவர் செவிக்கு எட்டுகிறதோ, அப்படியே கண்ணால் காணக் கூடிய ஹேது ஒன்றும் இல்லாமல் இரண்டு இடங்கள் பேசுவதே கம்பியில்லாத் தந்தியாம்.

உதாரணமாக ஒரு ஏரியின் ஜலம் சஞ்சலமற்று இருப்பதாக வைத்துக் கொள்வோம். அதன் இரு கரையிலும் இருவர் ஒருவரோடொருவர் வார்த்தையாட விரும்புகிறார்கள். ஆனால் ஏரி மிகவும் அகலமானதால் ஒருவன் பேச்சு மற்றொருவனுக்குக் கேட்காது. ஒருவன் ஒரு சிறு வளையக் கூடிய கம்பைத் தண்ணீரில் ஊன்றி இழுத்து விடுகிறான். இழுத்து விடுவதால் ஏற்படும் அதிர்ச்சியினால் நிச்சலமாயிருந்த ஏரியில் அலைகள் உண்டாகி மற்றொரு கரையை நோக்கிச் செல்லுகின்றன. அதிர்ச்சி நின்றவுடன் ஏரி திரும்பவும் சலன மற்றுவிடுகிறது. மற்றொரு கரையிலிருப்பவன் ஏரியில் ஏற்படும் அலைகளைக் காண்கிறான். இவர்கள் முன்பே ஒருமுறை கம்பை அசைப்பதால் ஏற்படும் அலைகளுக்கு இன்ன வார்த்தை என்றும் இருமுறை அசைப்பதால் ஏற்படும் அலைகளுக்கு இன்னவார்த்தை என்றும் இப்படியாக ஏற்பாடு செய்து கொண்டிருப்பதால், மிகவும் மெதுவாக இருந்தபோதிலும் ஒருவரோடொருவர் பேசுவதற்கு சாத்தியமாகிறது.

பேசுவதால் ஏற்படுத்தப்பட்ட சப்த அலைகள் மற்றவனது காதுக்கு எட்டுவதைப் போலவும் ஏரியின் ஒருகரையில் தண்ணீரில் ஏற்படுத்தப்பட்ட அலைகள் மற்றொரு கரையில் இருப்பவனுக்கு சமாசாரம் அறிவிப்பது போலவும் காற்று கூட இல்லாத சுத்த மண்டலத்தில் (Eather) சில கருவிகளைக் கொண்டு அலைகளைக் கிளப்பக் கூடுமேயாகில், அவ்வலைகளால் அனுப்பப்படும் செய்தியை வேறொரு கருவியைக் கொண்டு கிரகிக்க கூடுமேயாகில் எந்த இடத்திலிருந்து எந்த இடத்திற்கும் செய்தியை வெகு எளிதில் அனுப்பலாம் என்பது தெரியும். கம்பி யில்லாத் தந்தியில் இந்த விதியை அனுசரித்து மின்ஸார சக்தியால் சில கருவிகளின் உதவியைக்கொண்டு வெட்டவெளியான சுத்த மண்டலத்தில் அலைகள் எழுப்பப்படுகின்றன. இவ்விதம் எழுப்பப்படும் அலைகள் (ஒரு குளத்தில் சிறு கல்லைப்போடுதலால் ஏற்படும் அலைகள் கல்லைப் போட்ட இடத்தை மத்தியப் புள்ளியாகக்கொண்டு எப்பொழுதும் அதிகமாகிற அரைவிட்டத்தையுடைய வட்ட ரூபமாகப் பரவுவதைப்போல்) கிளப்பப்படும் இடத்தை மத்தியப் புள்ளியாகக் கொண்டு எப்பொழுதும் அதிகமாகிற அரைவிட்டத்தையுடைய கோள ரூபமாகப் பரவுகின்றன. ஏரிக்குக் கரைகள் இருப்பதுபோல் சுத்த மண்டலத்திற்குக் கரைகளின்றி எங்கும் நிறைந்திருப்பதால் இவ்வலைகள் (Eather waves) எந்த இடத்திலிருந்து

எந்த இடத்திற்கும் செல்லுகின்றன. இதன் வேகம் விநாடிக்கு சுமார் 1,80,000 மைல்களாதலால் ஒரு இடத்திலிருந்து அனுப்பும் செய்தி மற்றொரு இடத்தை உடனே அடைந்துவிடுகிறது. கம்பியில்லாத் தந்தியைப்பற்றி மேலும் தெரிந்துகொள்ள மின்ஸார சக்தியைப்பற்றி தெரிந்து கொள்வது மிகவுமவசியமாதலால் அதைப்பற்றிச் சிறிது கூறுகிறேன்.

எந்தப் பதார்த்தமும் அப்பதார்த்தத்தின் அணுக்கள் (Molicules) ஒன்றோடொன்று ஒட்டிக் கொண்டிருப்பதால் ஏற்பட்டவை. இப்பதார்த்த அணுக்களை மேலும் பிரித்தால் அப்பதார்த்தத்தின் நிலைமை மாறிவிடுகிறது. உதாரணமாக ஒரு ஜல அணுவை மேலும் பிரித்தால் அது ஒரு அணு (Atom) பிராணவாயுவாகவும் இரண்டு அணு ஜலவாயுவாகவும் மாறிவிடுகிறது. இப்பிராணவாயு அணுவையோ அல்லது ஜலவாயுவின் அணுவையோ மேலும் பிரித்தல் அசாத்தியம்; ஆனால் இவ்வணுக்கள் பூமண்டலத்தைப்போல் எலக்டிரான் என்னும் சிறு அணுக்களாலும் நியூகிளியஸ் என்னும் அணுவாலும் செய்யப்பட்டவை. கிரகங்கள் சூரியனைச் சுற்றுவதுபோல் இவ்வெலக்டிரான்கள் நியூகிளியஸைச் சுற்றிச்சுற்றி வருகின்றன. இவ்வெலக்டிரான்களை அணுவினின்றும் எளிதில் நீக்கிவிடலாம். ஒரு இடத்தில் எலக்டிரான்கள் கம்மியாகவும் மற்றொரு இடத்தில் அதிகமாகவும் இருந்தால் ஒன்றிலிருந்து மற்றொன்றிற்குப் போவதற்கு வழியிருக்குமேயாகில் இவை திரவிக்கொள்ளுகின்றன. ஒரு இடத்தில் எலக்டிரான்கள் எப்பொழுதும் கம்மியாகவும் மற்றொரு இடத்தில் எப்பொழுதும் அதிகமாகவும் இருந்தால் அதிகமாக இருக்குமிடத்திலிருந்து கம்மியாக இருக்குமிடத்திற்கு எலக்டிரான்கள் எப்பொழுதும் ஓடிக்கொண்டிருக்கும். இவ்விதம் எலக்டிரான்கள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு ஓடுவதுதான் மின்ஸாரசக்தி எனப்படும். இவ்வெலக்டிரான்கள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் போகும் வழி எலக்டிரான்கள் சுலபமாய் ஓடக்கூடிய உலோகத்தால் செய்யப்பட்டிருக்க வேண்டும். எல்லா உலோகங்களும் பூமி சரீரம் முதலியனவும் மின்ஸாரத்தை கிரகிக்கக்கூடியவை (conductors). ரப்பர், கண்ணாடி, காற்று, சுத்தஜலம், அரக்கு முதலியன மின்ஸார சக்தியை கிரகிக்கக்கூடாதன (Insulators). மின்ஸார சக்தியின் குணம் அது இருக்கும் இடத்தைச் சுற்றிலும் கிரண ரூபமாக (lines of force) எப்பொழுதும் ஒருவிதமான சக்தியை உண்டு பண்ணுவதாகும். மின்ஸார சக்தியை கிரகிக்கக்கூடிய ஒரு வஸ்து இக்கிரணங்கள் மாறும்பொழுது வெட்டிக் கொண்டிருந்தால் அவ்வஸ்துவிலும் மின்ஸார சக்தி ஊட்டப்படுகிறது. இவ்விதம் ஊட்டப்படும் மின்ஸார சக்தி முதலில் ஓடும் மின்ஸார சக்திக்கு எதிர் திக்கில் ஓடுகிறது.

கம்பியில்லாத் தந்தியில் இவ்விதமான மாறுதல்கள் மிகவும் அதிகமான வேகத்தோடு விநாடிக்கு 12,000 முறைக்குக் குறையாமல் ஏற்படுத்தப்படுகிறது. இதனால் ஏற்படும் கிரணங்கள் அலைரூபமாகப் பரவுகின்றன. ஸமாசாரத்தை கிரகிக்குமிடத்திலிருக்கும் கம்பியை இவ்வலைகள் வெட்டுவதால் அதில் கொஞ்சம் மின்ஸார சக்தி ஊட்டப்படுகிறது. அம்மின்ஸார சக்தியை ஸப்தமாக மாற்றி செய்தியை அறிந்து கொள்ளுகின்றனர் சப்த அலைகளை மின்ஸார கிரணங்களாக மாற்றி பேசுவதைப் போலவே, ஒளியின் அலைகளையும் மின்ஸார அலைகளாக மாற்றி எட்டி உள்ள இருவர் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளுகின்றனர்.



மூவாமொழியின் முறையீடு

(ரா. பி. சேதுப் பிள்ளை, பி.ஏ., பி. எல்.)

நம் தாய்மொழி வழங்கும் இத் தமிழ் நாடு தெய்வத் திருநாடென்று போற்றத் தக்கதாகும். ஆன்றோர் வாழ்ந்த நாடென்று அறிந்து மகிழத்தக்கதாகும். இவ்வுண்மையை இளமையிலேயே இந்நாட்டுச் சிறுவரும் சிறுமியரும் உணரவேண்டும். இளமையிலேயே தாய்மொழிப் பற்று மக்கள் குருதியிற் கலந்து பரவவேண்டும். இதனாலேயே பாலப் பருவத்திலமைந்த "பாப்பா"வை நோக்கி.

"தமிழ்த் திருநாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
அமிழ்தின் இனியதடி பாப்பா—எங்கள்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா"

என்று பாரதியார் கூறிப் போந்தார். ஓடி விளையாடும் பொழுதும், கூடி விளையாடும் பொழுதும், பச்சைப்பசும் பாலர் மனத்தில் தமிழ் மொழியன்பு தழைக்க வேண்டும்.

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே—அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே—அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே—அதை
வந்தனை கூறி மனதில் இருத்தி என்
வாயுற வாழ்த்தேனோ.

இன்னுயிர் தந்தெமை ஈன்று வளர்த்தருள்
ஈந்ததும் இந்நாடே—எங்கள்
அன்னையர் தோன்றி மழலைகள் கூறி
அறிந்ததும் இந்நாடே—அவர்

கன்னியராகி நிலாவினி லாடிக்
களித்ததும் இந்நாடே—தங்கள்
பொன்னுடல் இன்புற நீர் விளையாடி இல்
போந்ததும் இந்நாடே.

மங்கையராயவர் இல்லறம் நன்கு
வளர்த்ததும் இந்நாடே—அவர்
தங்க மதலைகள் ஈன்றமு தூட்டித்
தழுவிய திந்நாடே—மக்கள்
துங்க முயர்ந்து வளர்கெனக் கோயில்கள்
சூழ்ந்ததும் இந்நாடே—பின்னர்
அங்கவர் மாய அவருடற் பூந்துகள்
ஆர்ந்ததும் இந்நாடே.

இத்தகைய தெய்வத் திருநாட்டில் வழங்கும் தென் மொழியின் பழம் பெருமை பேசி மகிழும் பழக்கத்தை ஒழிக்குமாறு பாரதியார் சாற்றும் பறை, வீரப் பறையாகும். 'என்றுமுள தென்றமிழ்' என்று இறுமாந்து பேசுவதால் தமிழ் மொழி தழைத்துவிட மாட்டாது. பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த பைந்தமிழ் என்று பாராட்டுவதனால் தமிழ்மொழி பரவிவிட மாட்டாது. மதுரம் ஒழுகும் தமிழின் அருமையை மதுரை மூதூர் நீர் அறியும், நெருப் பறியும் என்று நயமுறக் கூறுவதால் நமது மொழி நானிலத்தில் ஓங்கிவிட மாட்டாது. 'பொருப்பிலே பிறந்து, தென்னன் புகழிலே வளர்ந்து, சங்கத் திருப்பிலே இருந்து, வையை ஏட்டிலே தவழ்ந்த பேதை' என்று வாய்ப் பறை சாற்றுவதால் வளமார்ந்த மொழி வளர்ந்துவிட மாட்டாது. தமிழ் மொழி வளர்க்க விரும்பும் [illegible] சான்ற புலவர், அம்மொழியின் குறைகளை அறிந்து நி[illegible] செய்ய முன்வரவேண்டும். ஆன்றோர் போற்றிய அருந் தமிழின் குறைகளைப் பாரதியார் அறிந்து முறையிடுகின்றார்.

ஆதி சிவன் பெற்று விட்டான்-என்னை
ஆரிய மைந்தன் அகத்திய னென்றோர்
வேதியன் கண்டு மகிழ்ந்தே-நிறை
மேவும் இலக்கணம் செய்து கொடுத்தான்

மூன்று குலத் தமிழ் மன்னர்-என்னை
மூண்ட நல்லன்பொடு நித்தம் வளர்த்தார்
ஆன்ற மொழிகளினுள்ளே-உயர்
ஆரியத்திற்கு நிகரென வாழ்ந்தேன்

கள்ளையும் தீயையும் சேர்த்து-நல்ல
காற்றையும் வான வெளியையும் சேர்த்து
தெள்ளு தமிழ்ப் புலவோர்கள்-பல
தீஞ்சுவைக் காவியம் செய்து கொடுத்தார்

என்று தமிழ் அன்னை தன் பிறப்பின் உயர்வையும் வளர்ப்பின் சிறப்பையும், தமிழ் மக்களிடம் எடுத்துரைக்கின்றாள். "அருமை சான்ற மக்காள்" யான்

[illegible] நூலகம்

இறைவனருளால் இந்நாட்டில் தோன்றினேன். மூத்தமிழ் அறிந்த முனிவர் அருளால் திருந்தினேன்; நற்றமிழ் மன்னர்தம் செல்வச் சிறுமியாய்ச் செழித்து வளர்ந்தேன். காவியக் கலனணிந்து விளங்கினேன். [illegible] தொன்மையால் பல அணிகளை இழந்தேன். இப்பொழுது பேதையர் [illegible] வருந்துகின்றேன். என் செய்வேன்! என்று அன்னை முறையிடுகின்றாள்.

இன்றொரு சொல்லினைக் கேட்டேன்-இனி
ஏது செய்வேன் எனதாருயிர் மக்காள்
கொன்றிடல் போல் ஒரு வார்த்தை-இங்கு
கூறத் தகாதவன் கூறினன் கண்டீர்

புத்தம் புதிய கலைகள்-பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே-அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை

சொல்லவும் கூடுவதில்லை-அவை
சொல்லும் திறமை தமிழ் மொழிக்கில்லை
மெல்லத் தமிழினிச் சாகும்-அந்த
மேற்கு மொழிகள் நிலமிசை யோங்கும்

என்றந்தப் பேதை உரைத்தான்-ஆ!
இந்த வசை யெனக் கெய்திடலாமோ
சென்றிடுவீர் எட்டுத் திக்கும்-கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!

என்னும் தமிழ் அன்னையின் சோகம் தமிழ் மக்களது நெஞ்சைப் பிளப்பதாகும். "மேலை நாடுகளில் மேலோங்கி வளரும் கலைகள் தமிழ் மொழியில் இல்லை என்றும், அக்கலைகளில் அமைந்த நுண் பொருளைத் தெ[illegible]க்கும் திறமையும் தமிழ் மொழிக்கில்லை என்றும், தமிழறியாத் தகவிலர் [illegible] குறை கேட்டுத் தமிழன்னை தயங்குகின்றாள். மேல்நாட்டு மொழிகளில் ஓங்கி வளரும் நவீனக் கலைகள் தமிழ் மொழியில் இல்லை யென்பது உண்மையேயாயினும் அக்கலைகளைச் சொல்லும் திறமை தமிழ் மொழிகளில் இல்லை யென்பது விரிவிலா அறிவினர் கூறும் வெற்றுரையாகும். எக்கலைகளையும் தமிழ் மொழியில் இயற்றுதல் கூடும். புதிய சொற்கள் வேண்டுமாயின் ஆக்குவோம். பண்டைப் பனுவல்களிற் பதிந்து கிடக்கும் பழைய சொற்களை அகழ்ந் தெடுப் போம். நல்ல நூல்களை மொழி பெயர்ப்போம். [illegible] வீன நூல்களை இயற்று வோம்" என்று பாரதியார் அறைகின்றார்.

"பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற்
பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ்மொழியில்
இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங் கதைகள் சொல்வதிலோர்
மகிமை இல்லை
திறமான புலமை யெனில் வெளி நாட்டோர் அதை வணக்கம்
செய்தல் வேண்டும்"

என்று பாரதியார் முழக்கும் முரசொலி கேட்கின்றதோ? தன்னைப் பழித்த

தகவிலனைப் "பேதை" யென்று தமிழன்னை குறிக்கும் முறை யென்னே! தமிழ் மொழியின் நயம் தெரிந்தவன், தமிழின் சொல்லாக்க முணர்ந்தவன், அருந் தமிழாற்ற லறிந்தவன் எவனும் "மெல்லத் தமிழ் இனிச் சாகும்" என்று மறந்தும் கூறுனுதலின் அவ்வாறு துணிந்துரைத்த கயவனைப் பேதை யென்று அன்னை இகழ்ந் துரைக்கின்றாள். ஆயினும் அத்தீய சொல் அன்னையின் உள்ளத்தில் வேல்போல் ஊடுருவிப் பாய்கின்றது. கூரிய அம்பு போல் தைக்கின்றது. வாள்போல் நின்று அறுக்கின்றது. அந்நிலையின் அன்னை தன் ஆருயிர் மக்களை அன்பார்ந்த மொழிகளால் ஆதரித்து அழைக்கின்றாள். வசை தீர்க்குமாறு வேண்டுகின்றாள். எட்டுத் திசையும் செல்லுமாறு ஏவுகின்றாள்! நல்ல கலைகள் யாவும் நல்குமாறு மன்றாடிக் கேட்கின்றாள். தலையிலணிந்த சூளாமணி சரியவும் கழுத்தில் அணிந்த சிந்தாமணி இலங்கவும், இடையில் அணிந்த மணிமேகலை மின்னவும், பாதச் சிலம்புகள் ஒலிக்கவும், கண்ணெதிரே கலங்கி நிற்கும் அன்னையைக் காண்மின் காண்மின்! தேனினும் பாலினும் இனிய தெய்வத் தமிழூட்டி வளர்த்த அன்னையின் வற்றிய வாயும், வணங்கிய நிலையுங் கண்டு வாளா இருத்தலாகுமோ!

நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்
அதுவுமற்றவர் வாய்ச்சொல் அருளீர்
ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்
மதுரத்தே மொழி மாதர்களெல்லாம்
வாணி பூசைக் குரியன பேசீர்
எதுவும் நல்கி இங்கெவ்வகையானும்
இப்பெருந் தொழில் நாட்டுவம் வாரீர்!

இப்பெரும் பணி இயற்றுதற்குத் தமிழ் மக்களனைவரும் ஒல்லும் வகையால் உதவ வேண்டும் என்று பாரதியார் இரந்து வேண்டுகிறார்! நிதி நிறைந்தவர் அள்ளிக் கொடுக்க வேண்டும். நிதி குறைந்தவர் எண்ணிக் கொடுக்க வேண்டும். வறியவர் வாயினால் வாழ்த்த வேண்டும். ஆண்மை நிறைந்தவர் அறிவினால் உழைக்க வேண்டும். இவ்வாறு பல்லோரும் பணி செய்து அன்னையின் அருந்துயர் தீர்க்கவேண்டும். தமிழ்க் கலைகள் வளர்வதற்குத் தனிக் கலாசாலைகள் வேண்டும். அக்கலாசாலைகளில் புத்தம் புதிய வேலைகள் தொடங்க வேண்டும். அறிவு நூல்களை ஆக்க வேண்டும். அந்நாளில் அருந் தமிழை அரசர் பெருமக்கள் ஆதரித்தார்! இந்நாளில் ஆதரிப்பவர் யாருளரோ! அறிகிலோம். இங்ஙனம் நாம் தளர்வுறினும் நமதன்னை தளரவில்லை. நன்னாள் வருமென்று நயமுறக் கூறுகின்றாள். எத்திசையும் புகழ் மணக்க ஏற்றமுறும் காலம் உண்டோவென்று மயங்கும் மக்கள் மனத்தைத் தேற்றுகின்றாள்.

தந்தை அருள் வலியாலும்-இன்று
சார்ந்த புலவர் தவ வலியாலும்
இந்தப் பெரும்பழி தீரும்-புகழ்
ஏறிப் புவிமிசை என்று மிருப்பேன்.

என்று தேற்றும் அன்னையின் வாய்மொழி கார்மேகத்தின் இடையே இலங்கும் கதிர் ஒளி போல்வதாகும்.

சாதாரண தர்மம்

(வி. சங்கர ஐயர்)

தர்மம் என்றால் இன்னது என்பதைக் குறித்து ஆனந்தபோதினி 17வது தொகுதியின் 755வது பக்கத்தில் வெகு விசதமாகக் கூறி யிருக்கின்றேன். அதாவது தர்ம மென்றால் கடமை என்று பொருள்.

கடவுள் என்று ஒருவர் இருக்கிறார். அவர் படைத்தல் (சிருஷ்டி). காத்தல் (ஸ்திதி), அழித்தல் (ஸம்ஹாரம்) ஆகிய மூன்று தொழில்களையும் செய்கின்றார். ஆகையால் கடவுளை வழிபடுதல், தாய் தகப்பன் உபாத்தியாயர் (குரு) முதலிய பெரியோர்களை வணங்குதல், உயிர்களுக்கு இரங்குதல், உண்மை யுரைப்பது, செய்நன்றி மறவாமை, முதலிய புண்ணிய கர்மங்களை நாம் செய்ய வேண்டும்.

1. நாம் சூரியன் உதிப்பதற்கு முன் எழுந்திருக்க வேண்டும்.
2. பிறகு கடவுளைத் தியானிக்க வேண்டும்.
3. ஜன சஞ்சார மில்லாத காலியான இடத்திற்குப் போய் மல விசர்ஜனம் செய்ய வேண்டும்.
4. விடியற்காலத்தில் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்யவேண்டும்.
5. சுத்தமான வஸ்திரங்களையே தரிக்க வேண்டும்.
6. பெற்றோர்கள் மனம் கோணாமல் அவர்கள் ஹிதமறிந்து நடக்க வேண்டும்.
7. சுத்தமாக இருந்து ஜபம் செய்ய வேண்டும்; சாப்பிட வேண்டும்.
8. பழம், கிழங்குகளைத் தவிர மற்றப் பழகிய அசுத்தமான ஆகாரங்களை புசிக்கக் கூடாது.
9. பகலில் தூங்காமலும் இரவில் அதிக நேரம் விழித்திராமலும் தூங்குமுன் பரிசுத்த சித்தத்தோடு கடவுளைத் தியானித்தும் இருக்கவேண்டும்.
10. ஒருபோதும் சூது முதலிய ஆட்டங்கள் ஆடுவது, கள் முதலியவைகளை அருந்துவது, அபின் முதலியவைகளை உண்பது முதலியவைகளைச் செய்யக் கூடாது.
11. தினமும் கல்வியில் கவனத்தைச் செலுத்த வேண்டும்; கற்றபடி நடக்க வேண்டும்.
12. எக்காரணத்தைக் கொண்டும் குருவை அவமதிக்கக் கூடாது.
13. உன்னுடன் கல்வி கற்பவர்களோடு ஒருபொழுதும் விரோதித்துக் கொள்ளக்கூடாது.
14. சத்கர்மங்கள் செய்வதில் சோம்பலை விட்டு விட வேண்டும்.
15. நல்லொழுக்கத்தினின்றும் ஒருபொழுதும் தவறக் கூடாது.
16. அமங்களமான சொற்களும் அனுவசியமாகப் பிறரைக் குற்றம் கூறும் சொற்களும் உபயோகிக்கக் கூடாது.

17. விதண்டாவாதம் ஒருபொழுதும் செய்யக் கூடாது.

18. ஒருபொழுதும் தற்புகழ்ச்சிசெய்துகொள்ளக் கூடாது.

19. கல்வி கற்க வேண்டிய காலத்தை ஒருபொழுதும் வீணாகக் கழிக்கக்கூடாது.

20. எப்பொழுதும் உண்மையே உரைக்கப் பழக வேண்டும்.

21. 'நன்மைக் கடைப்பிடி'க்க வேண்டும்.

22. 'தந்தை தாய்ப் பேண' வேண்டும்.

23. எவர்களையும் அலக்ஷியமாக எண்ணக் கூடாது.

24. பிறர் மேன்மையைப் பார்த்துப் பொறாமையுறக் கூடாது.

25. துஷ்டர்களுடைய சிநேகம் கெடுதலென் றறிய வேண்டும்.

26. நல்லவர் உறவைக் கொள்ள வேண்டும்.

27. ஒரு காரியம் செய்யுமுன் யோசிக்க வேண்டுமே தவிர, செய்தபின் வருத்தப்படுவதில் பயனில்லை.

28. ஒருவன் செய்த அற்ப உபகாரத்தையும் ஒருபொழுதும் மறக்கக் கூடாது.

29. வீணாக ஆசை மொழி கூறக் கூடாது.

30. அடைய முடியாத பொருளை ஆசைப்படக் கூடாது.

31. ஆபத்துக் காலத்தில் உதவி செய்ய வருமானத்தின் ஒரு பங்கை மீத்து வைத்துக்கொள்ள வேண்டும்

32. பிறர் பொருளை ஒரு பொழுதும் இச்சிக்கக் கூடாது.

33. இயன்ற மட்டும் பிறருக்கு உதவி புரிய வேண்டும்

34. ஒருவனுக்குப் பிரியமாயும் சத்தியமாயும் பேச வேண்டும்.

35. ஸத்தியமாக இருந்தாலும் அப்ரியம் பேசக்கூடாது.

36. ஒருவனுக்குப் பிரியமாயிருந்தாலும் பொய்யைச் சொல்லி அவனை ஏமாற்றக் கூடாது.

37. ஒருவனைக் கண்ட இடத்தில் புகழ்ந்து காணாத இடத்தில் இகழக் கூடாது.

38. கோபத்தை அடக்க வேண்டும்.

39. வாக்கும் காயமும் சுத்தமாயிருப்பதுடன் சுத்த மனதுண்டாகத் தினமும் பழக வேண்டும்.

40. பொறுமையைப் போற்றி வளர்க்க வேண்டும்.

41. செய்தொழிலைத் திருந்த நன்றாகச் செய்ய வேண்டும்.

42. அன்பில்லாதவன் இருப்பதை விட இறப்பது மேலென நினைக்க வேண்டும்.

43. பாபம் செய்பவர்களைத் திருத்தப் பாடுபட வேண்டும்.

44. புண்யவான்கள் சிநேகத்தை நாட வேண்டும்.

45. காலத்தைக் கொஞ்சமும் வீணாக்கக் கூடாது. கடந்து போன காலத்தை திரும்ப வருத்திக்கொடுக்க ஒருவராலும் முடியாது.

46. தினமும் கடவுளை நினைக்க வேண்டும்.

தர்மபாலர்

ஸ்ரீ மு. கிருஷ்ண பாரதி.

இருளடர்ந்த கானகத்தின் கண் மகிழ்வுடன் மலர்ந்து, இனிய தோற்றத்துடன் நறுமணங் கமழும் புஷ்பம், கவனிப்பாரற்று நாளடைவில் வாடி வதங்குதல் போல், அறியாமையும் வறுமைப் பிணியும் நிறைந்து விளங்கும் இந் நிலவுலகின் கண் ஒரு சில புருஷோத்தமர்கள் அவதரித்து, தமது நற்குண நற்செய்கைகள் பிறரால் பாராட்டப்படு முன்பே பரமனடி சேர்ந்து விடுகின்றனர். அத்தகைய மிகச் சிலரில் தர்மபாலரும் ஒருவர்.

தர்மபாலர் 1865 ஆம் வருடம் செப்டம்பர் மாதத்தில் இலங்கையில் அவதரித்தார். அவரது பெற்றோர்கள் புத்தமதத்தைச் சேர்ந்தவர்கள். குபேரச் செல்வமும், மிகுந்த செல்வாக்கும், செப்பரிய பெருமையும் வாய்ந்த குடும்பம் அது. அவர்தம் பக்தியின் மிகுதியோ சொல்லி மாளாது.

இத்தகைய பெற்றோர்களின் புத்திரராக அவதரித்த அப்பெரியாரின் பெருமையைச் சொல்லவும் வேண்டுமோ? நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, தர்மபாலர் பாலப் பருவத்தைக் கடந்தார். மிகுந்த கருத்துடன் கொழும்பு ஸெண்ட் தாமஸ் கல்லூரியில் கல்விகற்றுப் பட்டமும் பெற்றார். விரைவில் ஓர் உயர்தர அரசாங்க உத்தியோகமும் அவரை யெதிர் கொண்டழைத்தது.

ஆனால் அவ்வுத்தமரின் மனம் நிம்மதி யடையவில்லை. சிறந்த ஞானியர் யாவருக்கும் இது இயல்பே யல்லவா? தம்மைச் சுற்றிலும் நோயும், வறுமையும் அறியாமையுமே நிறைந்திருக்கக் கண்ட அவர் மனம், அனலில் இட்ட மெழுகென உருகியது. முடிவில் இவ்வுலக வாழ்க்கையில் வெறுப்புற்று, தமது உற்றார், உறவினர், செல்வம், உத்தியோக முதலிய யாவற்றையும் துறந்து, தமது 21-ஆவது வயதிலேயே உலகிற் குழைக்கக் கங்கணங் கட்டிக் கொண்டார். அது முதல் முடிவு வரை புத்த மதத்தைப் பரப்புவதிலேயே தமது வாழ்க்கை முழுவதையும் கழித்தார்.

அவர் 1887 ஆம் ஆண்டில் பாரத நாட்டிற்கு வந்தார். இந் நாட்டிலே அவர் செய்த ஊழியங்கள் மிகப்பல. அருள் வடிவாகிய புத்த பகவானின் திவ்விய சரித்திரத்திலே மிகப் புகழ் பெற்ற சாரநாத், கயா முதலிய புண்ணிய ஸ்தலங்களை மீண்டும் பௌத்தர் நிர்வாகத்திற்குக் கொண்டுவர அரும்பாடு பட்டார். 1892ல் கயாவில் சர்வதேச பௌத்தர் மகாநாட்டைக் கூட்டித் தேன்மாரி போற் பிரசங்க மாரி பொழிந்து யாவரையும் மகிழ்வித்தனர்.

இந்து மதத்தின் மாசுதனை யகற்றி, அதற்குப் புத்துயிரளித்த வீரசிங்கம் விவேகானந்தரை அறியாதார் ஒருவரு மிலர். தர்மபாலர் அத்தகைய பெரியாரின் உயிர்த் தோழராவார். சுவாமி விவேகானந்தருடன் தர்மபாலர் 1893-ல்

சிக்காகோ நகரில் கூடிய சர்வமதப் பார்லிமெண்ட் மகாசபைக்குச் சென்றார். ஆங்கு அவர் நிகழ்த்திய சொற்பொழிவுகள் யாவரையும் மகிழ்வித்தன. அழியாப் புகழையும் அவருக்கு அளித்தன.

இந்தியாவிற்குத் திரும்பியதும், தமது புத்தமதப் பணியை மீண்டும் மேற்கொண்டார் அப் பெரியார். கயாக் கோயிலைப் பெறவேண்டி ஆறு வருடகாலம் வெகு தீவிரமாகப் போராடினார். முடிவில் வெற்றிபெறவில்லையெனினும், அவரது தீரமும், தளரா ஊக்கமும் யாவரையும் திகைப்படையச் செய்தன.

1920—ல் கல்கத்தாவில் ஸ்ரீதர்மராஜீக விகாரம் என்னும் ஆலயம் கட்டினார். 1924-ல் இலண்டன், கிளஸ்டர் வீதியில் பௌத்தமதச் சங்கம் ஒன்றை ஸ்தாபித்தார். அச் சங்கத்தார் ஐரோப்பா முழுவதிலும் பௌத்த சந்நியாசிகளை யனுப்பித் தீவிர மதப் பிரசாரம் செய்தனர்.

உலகம் போற்றும் உத்தமராம் புத்தபகவான் தனது உபதேசங்களை முதன் முதலில் உலகிற்கு வெளிப்படுத்திய சாரநாத் என்னும் புண்ணிய ஸ்தலத்தின் பழம் பெருமைகளை மீண்டும் புதுப்பிக்க வேண்டுமென்பது அவரது பேரவா. ஆங்கு அசோகராற் கட்டப்பட்டுத் தற்போது பாழடைந்துள்ள ஸ்தூபிகள், கட்டிடங்களுக்கருகில், 1930—ல் பெரியதொரு பௌத்த ஆலயத்தைக் கட்டி முடித்தார். இதன் மூலம் அவரது எண்ணம் ஒருவாறு பூர்த்தியாயிற்று.

ஆசியாக் கண்டத்தில் வசிக்கும் பௌத்தர்கள் தங்களுக்குள்ளேயே பிளவுபட்டிருப்பதைக் கண்ட தர்மபாலர் மனம் கலங்கினார். அவர்களுக்குள் ஒற்றுமையை நிலைநாட்டும் பொருட்டு அரும்பாடு பட்டார். ஐரோப்பா, ஆசியாக் கண்டங்களில் உள்ள புத்தமதப் பிரபலர்கள் யாவரும் இவருடன் ஒத்துழைத்தனர். முடிவில் வெற்றியும் கிட்டியது.

தர்மபாலர் கருணையே வடிவானவர். "இலங்கும் உயிரனைத்தும் ஈசன் கோயில்; தீனர் பணியே தெய்வப் பணியாம்" என்பனவே அவரது மூல மந்திரங்களாம். துறவிகள் உள்ளிட்ட பௌத்தர்களில் பலர் "அஹிம்ஸா பரமோ தர்ம:" என்னும் வேத வாக்கியத்திற்கு மாறாக நடப்பதைக் கண்ட அவர் கண்ணீர் வடித்தார். அவர்களது வாழ்க்கையைத் தூய்மைப் படுத்த அவர் பட்ட பாடு கொஞ்சமல்ல. அவரது வாழ்க்கையே பிறருக்கு ஓர் வழி காட்டியாக அமைந்தது.

செல்வத்திலே பிறந்து, செல்வத்திலே வளர்ந்து, செல்வத்திலே திளைத்து மூழ்கிய ஓர் செல்வன், தனது இருபத்து ஒன்றாவது வயதிலே யாவற்றையும் துறந்து தனது ஆயுட் கால முழுதும் பிரம்மசாரியாக—சந்நியாசியாகக் காலங் கழித்துத் தொண்டாற்றுதல் மிக மிகப் போற்றற் குரியதாகும். புத்தபிரான் கண்ட புனித மதம், சீரழிந்த இடைக் காலத்திற்குப் பின், தற் காலத்தில் ஒரு சிறிதாகிலும் சீர்திருத்தம் அடைந்துள்ளதென்றால், அப்பெருமை மகான் தர்மபாலரையே சாரும். புத்தர் பிறந்த புண்ணிய பூமியிலே, அவரது புராதன மதம் மீண்டும் புத்துயிர் பெறவேண்டி, அனைத்தையும் துறந்து, தர்மபாலர் 40 ஆண்டுகள் அரும்பணி செய்தார். சென்ற ஏப்ரல் மாத முடிவில் அப்பெரியார் சாரநாத் என்னும் க்ஷேத்திரத்தில் தம் பூதவுடல் நீத்து, அழியாப் புகழுடம் பெய்தினார். அவரது நற்பெயர் நீடூழி வாழ்க. சுபம்.

சிறுகதை

"கைம்பெண் கமலா"

(கி. ரா.)

"பொம்மை விவாகம், ஆண்பெண்களை விற்குதல்,
புத்தியில் டம்பம், புகலரிய
கைம்மையர் கஷ்டங்கள், ஆகிய நம்முளே
காணுங் குறைகளை நாணுவமே."

—அ. மாதவையா.

1

எனக்கு ஏழாவது வயதில் விவாகமாயிற்று. நான் ஒருநாள் தெருவில் விளையாடிக்கொண்டிருந்தபோது என்னை அழைத்து "உனக்குக் கலியாணம் நாளைக்கு" என்றார்கள். "அப்படியென்றால் என்ன?" என்று நான் வினவினேன். "உனக்கு ஆம்படையான் வரப்போகிறான்! புதுப் புடவை, பூ, நகைகள் எல்லாம் போட்டுக்கொள்ளலாம்" என்றாள் என் அத்தை. எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஆம்படையான் என்னத்துக்கு? என்று நான் நினைத்தேன். பிறகு என்னை உள்ளே அழைத்துச் சென்றனர். நான்குநாளைக்கு மேளக்கச்சேரியும், புதுப் பட்டுச்சேலைகளும், பலவிதப் பாட்டுக்களும், விருந்துச் சாப்பாடுகளும் எங்கும் குதூகலமே நிறைந்திருந்தன. இவைதான் என் விவாகத்தைப்பற்றி எனக்கு நினைவிருப்பவை.

என்னுடைய தாயார் என் இரண்டாவது பிராயத்திலேயே காலஞ் சென்றாள். அதற்குப் பிறகு என் தகப்பனார் மறுமணம் செய்துகொள்ளவில்லை. என்னுடைய அத்தை அம்மணியம்மாளே வீட்டுவேலைகளை நிர்வகித்து வந்தாள். இங்கு என் அத்தையைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் கூறவேண்டியது அவசியமாயிருக்கிறது. அம்மணியம்மாள் மிக்க பணக்காரரான என் பாட்டனாருக்கு ஒரே மகளாய்ப் பிறந்து ஒரு பணக்காரக் குடும்பத்தில் புகுந்தாள். பாவம்! மிக இளவயதிலேயே வைதவ்யமடைந்தாள். அது முதல் தகப்பன் வீட்டுடனேயேதான் இருக்கிறாள். புருஷன் வீட்டிலிருந்து அவளுக்கு மிகுந்த சொத்து கிடைத்தது. அன்றியும் என் பாட்டனார் சாகும் தருவாயில் தன் சொத்தில் ஒரு பகுதியை எழுதிவைத்துச் சென்றார். ஆதலால் அதிகச் சொத்துக்கு அதிகாரியான அம்மணியம்மாளுக்கு ஒருவித சுயேச்சை ஏற்பட்டது. அதனால் அவள் தன் சகோதரன் வீட்டில் யதேச்சாதிகாரம் செலுத்தி வந்தாள். என் தாயார் இருக்கும் வரையில் அவளை வெகுவாக இம்சித்து வந்தாள். நான் அவளிடம் பட்டிருக்கும் குட்டுக்கள் கணக்கி லடங்கா.

அன்று நான் தெருக்கோடியில் விளையாடிக் கொண்டிருந்தேன். என் தோழி பங்கஜம் ஓடிவந்து, "கமலா, ஓடிவா! அவசரம்! உங்காத்தில் என்னமோ சத்தம் கேக்கரது!" என்று அழைத்தாள். நானும் வேகமாக ஓடி வந்தேன். வீட்டுக்குள் நுழையும் போதே ஏகமாக அழுகைச் சத்தம் கேட்டது. நான் உள்ளே நுழைந்ததுதான் தாமதம். நாலைந்து பேராக என்மேல் விழுந்து என்னைக் கட்டிக்கொண்டு "ஐயோ, கண்ணே!" என்று அலறத் தொடங்கினர். எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. சற்று சத்தம் ஓய்ந்ததும் என் அத்தையை நோக்கி "ஏன் இப்படி அழுகிறீர்கள்" என்றேன். "கண்ணே! பாவி வாயில் மண்ணைப் போட்டுட்டாண்டி. உன் ஆம்படையான் செத்துப்போய் விட்டாண்டி!" என்று கூறிக்கொண்டே மற்றொரு ஒப்பாரி வைக்கத் தொடங்கினாள். என்னுடைய குழந்தைப் புத்திக்கு எல்லாம் அதிசயமாய்த் தோன்றியது. என்னுடைய 'ஆம்படையான்' இறந்து விட்டாலென்ன? வேறொருவன் கிடைக்க மாட்டானா? அதற்காக ஏன் இப்படி ரகளை செய்யவேண்டும்?

பிறகு ஒருவாரம் வரையில் என்னை ஒருவர்மாற்றி ஒருவராகக் கட்டிக்கொண்டு ஓய்வு ஒழிவில்லாமல் புலம்ப ஆரம்பித்தனர். எனக்கு ஒன்றும் பிடிக்கவில்லை. எல்லாம் வெறுப்பாகத் தோன்றியது. ஒருநாள் பங்கஜத்துடன் பேசிக்கொண்டிருந்தேன். அவள், "ஐயோ கமலா, உனக்கு இந்தக் கஷ்டம் வந்ததே" என்று கூறிப் பரிதாபப்பட்டாள். நான், "இதில் எனக்கென்ன கஷ்டம்?' என்றேன். 'நீ சிறு குழந்தையாய்ப் பேசுகிறாய். உனக்குத்தான் கஷ்டம். பத்தாவதுநாள் உன் அழகிய கூந்தலை எடுத்து விடுவார்கள். பிறகு நீ வெளியில் வரவே கூடாது. ஆபரணங்களையும், அழகிய சேலைகளையும், சுகவாழ்வையும் நீ விட்டுவிடவேண்டும். சுபகாரியங்களில் உன் தலையையே காட்டக்கூடாது" என்று மிக்க அனுதாபத்துடன் பங்கஜம் கூறினாள். "பங்கஜம், நான் முன்பின் னறியாத ஒருவன் இறந்து விட்டால் அதற்காக என் வாழ்நாள் முழுவதும் நான் ஏன் இக்கொடூரத் துன்பங்களை அனுபவிக்கவேண்டும்? இது நியாயமா? இதற்கு வேறு வழியில்லையா?" என்று நான் வினவிக் கொண்டிருக்கும்போதே என் அத்தை அங்கு வந்ததால் சம்பாஷணை முடிவுற்றது.

அன்றிரவு முழுவதும் எனக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. பங்கஜம் கூறியவற்றிலேயே என்மனது சென்றது. நான் எதற்காகக் கஷ்டப்படவேண்டும்? நான்குநாள் பார்த்ததைத் தவிர எனக்கும் என் புருஷனுக்கும் என்ன சம்பந்தம்? அவருடைய விதி முடிந்ததால் அவரிறந்தார். அதற்காக நான் இக்கொடிய துன்பங்களை ஏன் அனுபவிக்க வேண்டும்? இதிலிருந்து தப்ப வழியொன்றும் கிடையாதா? என்று வெகுநேரம் சிந்தித்தேன். கடைசியில் எப்படியாவது வீட்டைவிட்டு வெளிப்பட்டு எங்காவது ஓடிவிடுவதென்று தீர்மானித்து எழுந்து உட்கார்ந்தேன். மணி பதினொன்றடித்தது. என்னுடைய தற்காலத்திய நிலைமைக்கு அன்று நான் அந்நிசி வேளையில் எடுத்துக்கொண்ட முயற்சியே காரணமாகும். அன்று அச்சமயத்தில் எனக்களித்த ஊக்கத்திற்கும் தைரியத்திற்கும் என் குலதெய்வத்தை இன்றும் நான் போற்றுகிறேன்.

படுக்கையை விட்டெழுந்த நான் சற்று நேரத்தில் இன்னது செய்வதென்று தீர்மானித்து விட்டேன். சத்தம் செய்யாமல் பின்புறக் கதவைத்

திறந்துகொண்டு, வீட்டைவிட்டு வெளியேறி, சற்று நேரத்தில் எங்கள் கிராமத்தை யொட்டிப் போகும் பொது ரஸ்தாவை யடைந்தேன். அந்த ரஸ்தாவிலேயே ஒருமணிநேரம் விடாமுயற்சியுடன் நடந்து எங்களூரிலிருந்து 3-மைல் தூரத்திலுள்ள நகரத்தை யடைந்து, ஒரு கடையின் வாயிலில் அயர்ந்து உட்கார்ந்தேன். அப்பொழுதுதான் என் உண்மையை நிலையை நான் உணர்ந்தேன். என்னுடைய எண்ணிலாக் கஷ்டங்களுக்கு உறைவிடமாயிருந்த வீட்டைவிட்டு எப்படியாவது வெளியேற வேண்டுமென்ற ஒரே எண்ணமே என் மனத்தின்மேல் நின்றதால் நான் புறப்படும்பொழுது என் உண்மை ஸ்திதியை நன்றாக உணரவில்லை. நான் தரித்திருந்தவைகளைத் தவிர என்னிடம் ஆடைகளொன்றுமில்லை. கையில் அணிந்திருந்த இரு பொன்வளையல்கள், என் காதுகளை அலங்கரித்திருந்த மிகவும் மட்டமான இரு தோடுகள், இவைகளே என்னிட மிருந்த ஆஸ்தி. பணமோ பைசா கிடையாது. இவைகளுடன் நான் என்ன செய்வது? எங்கே போவது? எங்கும் வஞ்சகமே நிறைந்த இவ்வுலகில் எட்டு வயது முற்றும் நிரம்பப் பெறாத ஒரு இளம் பெண் எவ்விதம் தனியே செய்வது? மேற்கண்டவாறு சிந்தித்துக்கொண்டே நான் அங்கு வீதியிலேயே கால்வலி தாங்காமல் காலை நீட்டிப் படுத்தேன்; சற்று நேரத்தில் நித்திரையிலாழ்ந்தேன்.

2

நான் நித்திரை நீங்கி எழுந்தபோது பகலாயிருந்தது. சூரியன் பிரகாசித்துக்கொண்டிருந்தான். என்ன ஆச்சரியம்! நான் ஒரு மோட்டார் வண்டியில் பிரயாணம் செய்துகொண்டிருந்தேன்! எனக்குப் பக்கத்தில் சுமார் 50 அல்லன 55 மதிக்கத் தகுந்த ஒருவர் அமர்ந்து என்னை உற்று நோக்கிக் கொண்டிருந்தார். அவருடைய பார்வை எனக்கு ஒருவித ஊக்கத்தையும் ஒரு நன்னம்பிக்கையையும் அளித்தது. நான் விழித்துக்கொண்டதை யுணர்ந்த அவர் புன்னகை தவழ்ந்த முகத்துடன் அன்பு ததும்பும் குரலில் பேசினர்:—

"குழந்தாய், உனக்கு சிரமமாயிருந்தால் நீ தூங்கு. பயப்படாதே. நான் உனக்குத் தீங்கொன்றும் செய்ய மாட்டேன்".

தூக்கம் தெளிந்துவிட்டதால் நான் எழுந்து உட்கார்ந்தேன். அவ்வயோதிகர் மற்றும் சாலையில் வரும்பொழுது காரை நிறுத்தி தனியே கிடந்த என்னைப் பொறுக்கி "வண்டியில் போட்டுக்கொண்டு வந்ததாகவும் கூறினர். நான் ஒரு தாய்

தந்தையற்ற அநாதை யென்பதைத் தவிர என்னைப்பற்றி அவரிடம் ஒன்றும் தெரிவிக்கவில்லை. அவரும் அதற்கு மேல் என்னை ஒன்றும் வற்புறுத்திக் கேட்கவில்லை.

பகல் சுமார் பத்து மணிக்கு மோட்டார் வண்டி ஒரு அழகிய மாளிகையின் வாயிலில் நின்றது. என்னுடன் கூட வந்த வயோதிகர் என்னை உள்ளே அழைத்துச் சென்றார். அவருடைய உத்திரவால் இரண்டு பணிப்பெண்கள் எனக்கு மிகுந்த உபசாரங்கள் செய்தனர். நான் ஸ்நானம் செய்து அவர்களால் கொடுக்கப்பட்ட புது வஸ்திரங்களை யுடுத்திக்கொண்டு பசியார சாப்பிட்டேன். அன்று மாலையே வேலைக்காரப் பெண்களிடமிருந்து கீழ்க்கண்ட விவரங்களை யறிந்தேன். என்னுடன் கூடவந்த வயோதிகரே அவ்வீட்டின் சொந்தக்காரர். அவர் பெயர் ராவ்பகதூர் ரத்தினமையர். அவர் ஒரு பென்ஷன் உத்தியோகஸ்தர். மிக்க செல்வவந்தர். அவருக்கு ஒரே மகன்; அவன் சென்னையில் கலாசாலையில் படித்துக்கொண்டிருந்தான். அவனுக்குத் தாயாரில்லை. எனக்குப் போசனமளித்த பார்வதியம்மாளே வீட்டு வேலைகளைச் செய்து வருகிறாள். அன்று மாலையில் எனக்கென்று விடப்பட்டிருந்த அறையில் நான் உட்கார்ந்துகொண்டு, என்னுடைய வருங்கால வாழ்க்கையைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருந்தபோது ரத்தினமையர் அவ்விடம் வந்தார். அவர் மிகவும் பிரியமாய் என்னைக் கேட்டதால் நான் என்னைப் பற்றிய உண்மையை அவரிடம் தெரிவித்தேன். அதைக் கேட்டதும் நான் எதிர் பார்த்ததிற்கு விரோதமாக அவர் மிக்க அநுதாபம் காட்டினார். மேலும் கூறினார்:—"குழந்தாய் நீ ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம். என்னுடைய வீட்டிலேயே இரு. உனக்குக் கல்வி கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்கிறேன். நீ உன் விருப்பம்போல் செய்யலாம். இதை உன் வீடாகவே நினை. இங்கு உனக்கு எல்லாவித சௌகரியமும் செய்து தரப்படும்".

மறு நாள் காலை முதல் ஒரு உபாத்தியாயர் தினமும் வந்து எனக்குப் பாடம் கற்பித்துக் கொடுத்தார். அன்று முதல் நானும் அவ்வீட்டிலேயே என்னால் இயன்ற வேலைகளைச் செய்துகொண்டு ரத்தினமையரின் மகளே போல் இருந்து வந்தேன். அவ்வீட்டில் எல்லோரும் என்னிடத்தில் பிரியமாகவே நடந்தனர்.

3

நான்கு வருடங்கள் கடந்தன. நானும் ரத்தினமையரின் வீட்டிலேயே இருந்து வந்தேன். என்னுடைய கல்வியும் முடிந்தது. நான் ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தேன்.

இது வரையில் மிகவும் அமைதியாயிருந்த என் வாழ்க்கையில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அச்சம்பவமே என் வாழ்க்கையின் போக்கை அடியோடு மாற்றிற்று. ரத்தினமையரின் குமாரனான ராஜா கலாசாலைப் படிப்பு முடிந்து ஊருக்கு வந்திருந்தான். அவனை நான் இதற்கு முன் பார்த்ததில்லை. அவன் நவீன நாகரிகத்திலீடுபட்ட வாலிபன் என்பதை அவன் கிராப் தலையும் மற்ற நடை யுடை பாவனைகளும் நன்றாய் அறிவுறுத்தின. ஆரம்பத்திலிருந்தே எனக்கு அவனுடைய பார்வை பிடிக்க வில்லை. என்னை அநேக தடவை உற்று உற்று நோக்கினான். நான் அப்பொழுது அதைப் பொருட்படுத்த வில்லை.

இரண்டொரு நாள் கழித்து ஒரு மாலை நான் தனியே தோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்தேன். அப்பொழுது என் பின்புறம் காலடிச் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். ராஜா என்னை நோக்கி வந்துகொண்டிருந்தான். நான் அவனுக்கு வழி விட்டுச் சற்று விலகி நின்றேன். அவனும் என்னைத் தொடர்ந்து வந்து கிட்டியதும், "கமலா, ஏன் இப்படி என்னைக் கண்டதும் ஓடுகிறாய்? என்னைப் பார்த்து நீ பயப்படக் காரணமே யில்லை. உன்னிடம் தனியாகப் பேச வேண்டுமென்றே நான் இங்கு வந்தேன்" என்றான்.

நானும் நாணத்தால் தலையைக் குனிந்துகொண்டே மொழிந்தேன்: "நானோ ஒரு அநாதை. முன் பின்னறியாத என்னைத் தாங்கள் தனியே காண்பதற்குக் காரணமே யில்லையே. யாரேனும் பார்த்தால் விபரீதமாக நினைப்பார்கள். ஆகையால் தாங்கள் இவ்விடத்தை விட்டு விலகுவதே நல்லது"

"கமலா, அப்படி உதறிப் பேசாதே. நானும் சென்னையில் அநேகம் பெண்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால் உன்னைப் பார்த்ததுமே என் இருதயம் உனக் கடிமையாய் விட்டது" என்று வெகு வினயமாகக் கூறினான்.

நான் இவ் வார்த்தைகளால் ஏமாந்து போகிறவளில்லை. உலக அநுபவம் அதிகமில்லாவிட்டாலும் என்னுடைய புஸ்தகப் படிப்பினாலேயே எனக்கொரு அநுபவ[illegible]பட்டிருந்தது.

"ஐயா, நீங்கள் ஒரு லக்ஷப் பிரபு. என்ன வேண்டுமாயினும் செய்யலாம். ஆனால் நானோ ஒரு எளிய, அநாதைப் பெண். என்னுடைய நடத்தையும், என்னுடைய கற்புமே எனக்குள்ள ஆஸ்தி. ஆதலால் இவ்விதம் தகாத வார்த்தை யொன்றும் என்னிடம் கூறுவது நியாயமல்ல..........." என்று நான் மிக உறுதியாகவும் தீர்மானமாகவும் கூறினேன். அப்பொழுதே தூரத்தில் தோட்டக்காரன் வருவதைக் கண்ட ராஜா ஒரு ரோஜாச் செடியினிடையே மறைந்தான். நானும் வேகமாகச் சென்று வீட்டை யடைந்தேன்.

அன்றிரவு எனக்குத் தலைநோவு அதிக[illegible]மிருந்ததால், சீக்கிரமே படுக்கப் போய் விட்டேன். அன்றியும் ராஜா கூறியவை என் மனதைச் சஞ்சலத்திலாழ்த்திக்கொண் டிருந்தன.

மறுநாள் நான் துயில் நீங்கி எழுந்தபோது மணி எட்டாய் விட்டது. வழக்கமாகக் காலை 5 மணிக்கு எழுந்திருக்கும் நான் அன்று எட்டு மணி வரையில் தூங்கி யிருக்கிறேன். திடீரென்று எழுந்து படுக்கையின்மேல் உட்கார்

தேன். என்ன ஆச்சரியம்! என் ஆடைகள் கலைந்து அலங்கோலமாய்க் கிடந்தன! ஆஹா! என்ன அக்கிரமம்! நான் தூக்கத்திலேயே மானபங்கப் படுத்தப்பட்டிருக்கிறேன். சுற்றிலும் நன்றாகப் பார்த்தேன்' அங்கு ஒரு சீசா கீழே கிடந்தது. அதை எடுத்துப் பார்த்ததும் அது ஒரு மயக்க மருந்தென்பதை அறிந்தேன்! உடனே எல்லாம் வெட்ட வெளியாயிற்று. ராஜாவெனும் பாவியே இவ் வக்கிரமம் புரிந்திருக்கிறான். மயக்கத்திலாழ்ந்திருந்த எனக்குப் பிரக்ஞையில்லை. என்ன அநியாயம்! என் தேகம் துடித்தது! என்னுள்ளம் பதைத்தது! அடக்க முடியா ஆத்திரம் பொங்கிற்று. உடனே போய் ரத்தினமையரிடம் எல்லாவற்றையும் கூறி அவனைத் தகுந்தபடி சிக்ஷிக்க வேண்டுமென்று நினைத்தேன். ஆனால் மறு நிமிடமே என்னெண்ணம் மாறிற்று. என் மனதிற்கு அவன்தான் குற்றவாளியென்று ஐயமறத் தெரிந்தாலும் அதற்கத்தாட்சி யென்ன? நேரில் கேட்டால் அவன் கண்டிப்பாய் மறுத்து விடுவான். என்ன செய்வது? திடீரென்று என் மனதிற்கு எதிர்பாராதவொரு அதிர்ச்சி யேற்பட்டதால் மூர்ச்சை யடைந்தேன். பிறகு அன்று முழுதும் நான் எழுந்திருக்கவே யில்லை. மாலை 5-மணிக்குத்தான் பிரக்ஞை வந்து எழுந்தேன். என் அதிர்ஷ்ட வசமாக அன்று ரத்தினமையரும் ஊரிலில்லை.

என்னுடைய நிலைமை இப்பொழுது ஆபத்தாய் விட்டது. இம்மானக்கேடான விஷயத்தை ரத்தினமையரிடம் தெரிவிப்பதா? இல்லையா? எனக்கு அன்னமளித்து ஆதரித்த அவருடைய மகன் மேல் வீண் பழி சுமத்துகிறேனென்று அவர் நினைத்தால் என்ன செய்வது? அல்லது இவ் வெட்கக்கேடு நடந்த விடமான அவரில்லத்தை விட்டு வெளியேறி விடுவது நலமா? ஆனால் இவ்வளவு காலம் என்னை அன்னையினும் அன்பாய் வளர்த்து வந்த அவர் என்ன நினைக்க மாட்டார் என்ற எண்ணம் தோன்றி என் முந்திய எண்ணங்களை விரட்டியது. ஆதலால் தற்காலிகமாக அவ்விடமே மௌனமாயிருப்பதென்றே தீர்மானித்தேன். அன்றைய காலையிலேயே ராஜா ஊருக்குச் சென்று விட்டானென்று கேள்விப்பட்டு அவனை என்னெதிரிலிருந்து விலக்கிய என் தெய்வத்தைப் போற்றினேன்.

4

அப்பொழுது முற் கூறிய சம்பவங்கள் நிகழ்ந்து சில மாதங்களாயிருந்தன. நான் கூடிய சீக்கிரத்தில் தாயாகப் போகிறேனென்பதை உணர்ந்தேன். இவ் வுணர்ச்சி என்னுடைய வெட்கத்தையும் துக்கத்தையும் அதிகப்படுத்தியது. எனக்கு நேர்ந்த அவமானம் போதாதா? ஜகதீசா! என்னுயுட் காலம் முழுவதும் என்னைத் துயரக் கடலிலாழ்த்தி, ஒவ்வொரு நிமிடமும் என் மானக் கேட்டை நினைவூட்ட இம் மகவொன்றும் வேண்டுமோ? "மான மழிந்தபின் வாழாமை முன்னினிதே" என்றார் ஆன்றோர். ஆயின் உயிரை மாய்ப்பதெப்படி? என்றிவ்விதமாக எண்ணி யெண்ணி ன் மனது தணலில் விழுந்த புழுப்போல்தவித்தது. கடைசியில் நான் ஒரு தீர்மானமான முடிவிற்கு வந்தேன். அதாவது ரத்தினமையர் வீட்டை விட்டு மறுநாளே வெளிக் கிளம்பி விடுவதென்று நிச்சயித்தேன். அவர் என்ன சொல்லப் போகிறார்? "இவ்வளவு நாள் பிரியமாக வளர்த்தேன். நன்றியற்ற பெண். என்னிடம் ஒரு வார்த்தையும் கூறவில்லை........" என்றுதான் கூறுவார். அல்லது நான் அங்கேயே இருந்து என் வெட்கக்கேடு வெளியானால் எப்படி யிருக்கும் என்று நான் என் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டேன்; சுருங்கக் கூறின்

நான் மறுநாளிரவு பத்து மணிக்கு, எல்லாரும் கண்ணயர்ந்ததும் ரத்தினமையரின் வீட்டை விட்டுப் புறப்பட்டேன். கால் நடையாகவே அங்கிருந்து 10-மைல் தூரத்திலுள்ள சென்னையை நோக்கிப் புறப்பட்டேன்.

இவ்விதமாக சென்னையை அடைந்து (எனக்குக் கொஞ்சம் படிப்பிருந்ததால்) ஏதாவது கௌரவமான ஒரு தொழிலில் அமர்ந்து, அமைதியாக வாழலாமென்றிருந்தேன். ஆனால் என் கஷ்டம் என்னை விட்டதோ? எங்கே சென்றாலும் என் நிழல் என்னைப் பின் தொடர்ந்தது. அன்றிரவு முழுதும் நடந்து சென்று மறுநாள் காலை 7 மணிக்கு சென்னையை யடுத்து கடற்கரையோரமாயுள்ள ஒரு குடிசையை யடைந்தேன். ஏழ்மைத் தனமே மிகுந்திருந்த அக்குடியில், சாந்தமும் சந்தோஷமும், நிரம்பியிருந்தன. அன்று அக்குடிசையில் வசித்த தம்பதிகள் எனக்கு அன்புடனிட்ட கூழ், அமுதே போல் இனித்தது; என் கவலை யெல்லாம் மறந்தேன். திருப்தியுற்ற அவ் வெளியோரின் இனிய வாழ்க்கையை ஆச்சரியத்துடன் கவனித்தேன். அன்புடன் என்னை ஆதரித்த அவர்களின் தூய வாழ்க்கையை, துன்பமும் துக்கமுமே நிறைந்த என்னுடைய வாழ்க்கையால் மாசு படுத்த நான் விரும்பவில்லை. ஆகவே என்னுடைய சரிதத்தை ஒன்று விடாமல் அவர்களிடம் கூறி அவ்விடத்தை விட்டுப்போக விடை கேட்டேன். அவர்கள் என்னிடம் மிக்க அநுதாபம் காட்டினர்; நெஞ்சுருகிக் கண்ணீர் உதிர்த்தனர். என்னைக் கொஞ்ச நாள் வரையாவது அவ்விடத்தை விட்டுப் போகவே கூடாது என்று மிகவும் பரிவாய் வேண்டினர். நானும் சம்மதித்தேன்.

கடைசியில் நான் பயத்துடனும் திகிலுடனும் எதிர்பார்த்த நாள் வந்தது. நான் ஒரு ஆண்மகவை ஈன்றேன். என் மானக்கேட்டிற்கொரு மறக்க முடியா அறிகுறியான அம்மகவு சில மணிகளுக்குள் இவ்வுலகைவிட் டெய்தியது. என் மனதைவிட்டொரு பெரும் பாரம் இறங்கியது. இது ஒரு தாயின் சுய வுணர்வுக்கு மாறுபட்டதேயாயினும், அது உயிர் நீத்ததில் நான் ஒரு அளவு சந்தோஷமடைந்தேன் என்றே சொல்லவேண்டும்!

இரண்டு வாரங்களுக்குப் பிறகு என் உடம்பு கொஞ்சம் தேறி என் மனதும் ஒருவாறு சாந்தமடைந்தது. அவ்வீட்டிலுள்ளோரும் அக்கம் பக்கத்திலுள்ளோரும் சென்னையிலுள்ள தொழிற்சாலைக்குத் தினமும் கூலிவேலை செய்யப் போய்க்கொண்டிருந்தனர். நானும் அவர்களுடன் சேர்ந்து போகவாரம்பித்தேன். தினப்படி 12 அணா கூலி கிடைத்தது. அதை அப்படியே கொண்டுவந்து என்னை ஆதரித்துவந்த தம்பதிகளிடம் கொடுத்துவிட்டு நானும் அவர்களுடனேயே வசித்துவந்தேன். ஓய்வு நேரங்களில் வீட்டு வேலைகளையும் செய்துவந்தேன். இவ்விதம் என்னால் கூடியவரையில் அவர்களுக்குதவி புரிந்துவந்தேன்.

நான் வேலை செய்துவந்த தொழிற்சாலையில் ஒரு சம்பவம் நடந்தது. நாங்கள் வேலை செய்யும் 'டிவிஷனுக்கு' ஒரு தலைவர் இருந்தார். அவர் மிகவும் பாலிய வயதினர். ஆடம்பரமற்ற எளிய ஆடைகளையே அவர் தரித்திருந்தாலும், அவருடைய முகத்தில், ஒரு வசீகரமும், பெருந்தன்மையும் பொலிந்தன. அதுவே என் மனதைக் கவர்ந்தது. வரவர என்னாசை அதிகரித்தது. வேலையில் புத்திநாட்டமில்லை. ஆனால் ஒவ்வொரு சமயத்தில் அவருடைய உருவம் துன்பகரமான சம்பவங்களை நினைப்பூட்டியது. ஆயி

னும், அவ்வெண்ணங்கள் உடனே மறைந்து இறுதியில் என் அன்பே ஐயித்தது. என்னெண்ணம் ஈடேறி என்னன்பு பயனளிக்குமோ? மாசு நிறைந்த நான் குற்றமற்ற தூய வாழ்விற்கு ஆசையுறலாமோ? முடவனுக்குக் கிட்டுமோ கொம்புத் தேன்?

* * *

"கண்ணே கமலா, இவ்வளவு காலமாக இந்நாளை எவ்வளவு ஆவலுடன் எதிர்பார்த்திருந்தேன்! அன்று முதல் என் வாழ்க்கையே அடியோடு மாறி

யது. என் ஆடம்பர வாழ்வைவிட்டேன். பழைய நாகரிக நண்பர்களை விட்டுவிலகினேன். உன்னை எவ்விதமும் கண்டுபிடித்து, என் பாவச் செயலுக்கொரு பிராயச் சித்தம் செய்யவேண்டுமென்று சங்கல்பம் செய்துகொண்டேன். இவ்வளவு காலமாய் இத்தொழிற்சாலையிலேயே இவ்வேழை ஜனங்களுடன் வேலை செய்து ஜீவித்துவருகிறேன். 2 வாரத்துக்கு முன் என் தந்தையும் காலமாய்விட்டார். அதனால் அவருடைய ஏராளமான சொத்திற்கு நானே அதிகாரி. ஆதலால் உன்னை நான் இப்பொழுது சந்தோஷிக்கச் செய்வேன். நம்முடைய சந்தோஷத்தினிடையே நிற்பது உன்னுடைய ஒரு வார்த்தைதான்."

கடற்கரையின் குளிர்ந்த காற்று மனதிற்கொரு சாந்தியையும் ஆனந்தத்தையும் அளிக்கிறது. காற்றில் மோதுண்டு, ஆடியோடி விளையாடும் அலைகளின் சப்தம் காதிற்கு இன்பமூட்டியது. ராஜாவின் அன்பொழுகும் வார்த்தைகள் என் செவியில் புதிதான ஒரு சக்தியுடன் ஒலித்தன. தலையை நிமிர்த்து நோக்கினேன். மிகவும் பரிதாபகரமானதும்—ஆனால் கபடமற்றதுமான அவன் கண்களை என் பார்வை சந்தித்தது. மறு நிமிடமே அளவிடமுடியா ஆர்வத்துடன் அவனாலிங்கனத்தி லீடுபட்டேன். அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்?

தமிழர் வேள்வி

(பண்டித-இராம சுப்பிரமணிய நாவலர்.)

வேள்வி என்பது 'வேள்' என்னும் பகுதி அடியாகப் பிறந்த சொல். 'வி' தொழிற் பெயர் விகுதி. 'வேட்டல்' என்பது இதன் பொருள். 'வேட்டல்' விரும்புதல் என்னும் பொருட்டு. இதனை வடமொழியாளர் 'யாகம்' என்ப. கொண்ட குறிக்கோளை எய்தும் விருப்பத்தோடு செய்யப்படுதலின் 'வேள்வி' ஆயிற்று.

'யாகம்' அந்தணர் முதலியோர்க்கு உரித்து என்றும், தமிழர்க்கு அது உடன்பாடு அன்று என்றும் பலரும் கருதுகின்றார் உளர். நோக்குழி, தமிழர் நூல்களின்கண் யாகம் செய்தற்குரிய வினைகளும் அவற்றின் இயல்புகளும் பயன்களும் பெயர்களும் பலபடப் புனைந்து உரைக்கப் பட்டிலவேனும், தமிழர்க்கு 'வேள்வி' உடன்பாடன்று என்றற்குச் சான்றுகள் சில. ஆயின், தமிழர் உடன் பட்டதும் அவர்க்கு ஆன்றோரால் நிறுவப்பட்டதுமான வேள்வி அந்தணர் வேள்வியினும் பெரிது வேறுபாடு உடைத்து.

அந்தணர்க்கு உரியது வேத வேள்வி. அவை வடமொழி வேதத்திற் சொல்லப்படும் அக்கினிஷ்டோமம், அதியக்கினிஷ்டோமம் உக்தியம், ஷோடசிவாஜபேயம் முதலாகக் கூறப்படுவன. இதனை,

" மூவேழ் துறையு முட்டின்று போகிய
உரைசால் சிறப்பினுரவோர் மருக "

எனப் புறநானூற்றில் வரும் ஆவூர் மூலங்கிழாரது பாட்டானும் உணரலாகும். வேதியர் என்னும் பெயரானும், 'மறை நவிலந்தணர்' 'மறைமுது முதல்வன்' (புறநா) முதலிய அடிகளானும், வேதத்திற்குரிய பார்ப்பார் முதலியோரால் கடைப்பிடிக்கத்தக்கன இவ்வகை வேள்விகள்; அந்தணர்க்கு உரிய வேள்விகள் பலவற்றினும் கொலைத் தொழில் நிகழுமென்பது யாவருமுணர்ந்ததொன்று. பச்சிள உயிர்களை உயிர் நீப்பித்துச் செய்யப்படும் யாகத்தால் பெறப்பெறும் நன்மைகள் பலவாயினும், தீங்கு பல செய்து நன்மை பெறுவதினும் வாளா இருத்தல் இனிது நன்று என்னும் உண்மையை உணர்வார், அந்நன்மைகளை எதிர் நோக்குவர் கொல்லோ? அவ்வேள்விகளை உஞற்றவும் உடன்படுவர்கொல்? யாகத்தின்கண் மாய்த்த உயிர்கள் மீண்டும் உடம்பின்கண் புகுத்தப்படுமென்பது உண்மையாயிருப்பினும், உயிர் செகுப்பால் உண்டாம் உயிர்த் துன்பமும் அங்ஙனம் செகுப்பாரது உள்ளப் பான்மையும்

ஆராய்வுழி, அன்பு அரும்பப்பெற்ற யாரும் அக்கொலை வேள்விகளை நினையார் என்பது ஒருதலை. பெறலரும் ஊதியத்தைப் பயக்கும் பிறபல வேள்விகளும் இராநிற்க, கொலை வேள்விகளைச் செய்தற்கண் உள்ளத்தை ஊக்கும் ஊற்றத்தாரைக் குறித்து யாம் ஈண்டு என் வரைய வல்லேம்?

"ஓதல் வேட்டல் அவை பிறர்ச் செய்தல்
ஈதல் ஏற்ற லென்றாறு புரிந்தொழுகும்
அறம்புரி அந்தணர்"

என்னும் அடிகளான் ஓதல் முதலிய ஆறும் அந்தணர்க்கு உரிய என்பது புலனும். ஓதலும் ஓதுவித்தலும் பேரறனும் பெரும் புகழ் பயக்கவல்லன வாயுமன. அவ்வறச் செயல்களோடொப்பக் கொலை வேள்வியும் இயைக்கப்பட்டிருப்பது நோக்க, அதுதான் எத்தகைய வேள்வி என்று உணர்தற்கண் ஐயப்பாடு நிகழா நிற்கும். அறவேள்வியே டாம் அதுவெனின், அந்தணர்க்கு வேள்வி குலவினை அன்றாம். பலவிடத்தும் கொலை வேள்வி பார்ப்பார்க்குக் குலவினையாகக் கூறப் பட்டிருத்தலின், அறு தொழிலிற் சேர்த்துக் கூறப்பெற்றதும் கொலை வேள்வியையே குறித்து நிற்கின்றது என்பதன்கண் ஐயம் யாதும் இன்றாமன்றே? அங்ஙனமாயினும், பார்ப்பார் அதனை அற வேள்வியாக மாற்றி அவ்வறத்தின் கண்ணே தம்மனத்தை ஊக்கிக் கொலைக்கணின்றும் ஒருவுவாராயின், அவருடைய பெறலரும் பெருமைக்கணுளவாகக் கருதப் பெறும் இழுக்குக்களுள் சிறந்ததொன்று சிதைந்ததெனத் தேறுதற்கு இடனாகும்.

நமது முந்தை நூல்களின்கண் வேள்விகள் தாம் பலவகையாகச் சொல்லப்பட்டுள்ளன. மணமும் ஒரு வேள்வி என இயம்பத்தகும். இதனை மணவேள்வி என்று கூறுவது பொருந்தும். 'மணமாகாத பெண்' என்னும் பொருளில் 'வேளா மெல்லியல்' எனப் புறநானூற்றில் வருவதும் காண்க. எனவே, 'வேள்வி' மணத்திற்கு ஒரு பெயரென்பது புலனாகின்றது. இன்னும், 'அவன் அவளை மணந்தான்' என்பதனை 'அவன் அவளே வேட்டு' என மலையாள மொழியில் வழங்குவதும் இதனை வற்புறுத்தும் என்க. 'வேட்டான்' என்பது 'வேட்டு' எனத் திரிந்து நின்றது, இது போல்வன பல சொற்களும் தமிழில் நின்றும் மலை மொழியில் சென்றுள்ளன.

மண வேள்விச் சடங்குகளைத் தமிழர் தற்காலத்தும் அந்தணரையே கொண்டு செய்விக்கின்றனர். இரண்டாயிரம் வருடங்கட்கு முன்னரும் பார்ப்பார் தமிழர்க்கு மணவேள்விச் சடங்குகள் செய்து வந்தனர் என்பது,

'சாலியொரு மீன்றகையாளைக்
கோவலன்—மாமுது பார்ப்பான்
மறைவழி காட்டிடத் தீவலஞ் செய்து'

என்பதனான் உணரப்படும். பார்ப்பார் தமிழ் நாட்டிற் குடியேறிய பின்

னர்த் தம் மந்திர தந்திர நெறிகளைத் தமிழர் மாட்டும் புகுத்த முயன்றதன் பயனாகும் இதுவென்பது தெற்றென இலங்கும். என்னை? தமிழ் நெறி நூல்களின்கண் வடசொன் மந்திரங்களும் அவைபற்றிய வினைகளு மின்மையான் என்க. எனவே, தமிழர்க்கு மணவேள்வி, முன்னர், பார்ப்பார் செய்யும் நெறியிற்றன்று என்பது புலனாம். அவர் மணமக்களை அழைப்பித்து அவ்விருவர்க்கும் உடம்பாடு செய்வித்தலையே தலைசான்ற வேள்விச் செயலாகக் கருதியிருந்தனர். 'நீ இவளைக் கொள்ள இயைதியோ?' எனவும் 'நீ இவளோடு ஒத்து ஒருங்கு பூவின் மணம் போலவும் மணியினொளி போலவும் வாழ்தி' எனவும் மணமகனை நோக்கிக் கூறியும், 'நீ இவனைக் கொள்ள இயைதியே?' எனவும் 'நீ இவனோடு பூவின் மணம்போலவும் மணியின் ஒளிபோலவும் ஒத்தொருங்கு வாழ்தி' எனவும் மணமகளை நோக்கிக் கூறியும் சிற்சில தமிழ் நெறிச் சடங்குகளை இயற்றி மணவேள்வி செய்து வந்தனர். அவ்வேள்விக்கெனத் தரையை ஆத்தான் மெழுகுதலும், தனி மணவறை அமைத்துக் கோடலும், மலரலங்கல் நாற்றுதலும், பலநிறப் புடவைகளால் மேற்கட்டி புனைதலும், குலையுடை வாழையும் பழுக் குலைக்கமுகும் பிறவும் நிறுவிப் புனைவுசெய்தலும் பிறவும் தமிழரிடை நிகழ்ந்து வந்தன. 'அம்மி மிதித்தல்' 'அருந்ததி காண்டல்' என்னும் இவ்விரண்டும் பார்ப்பாரால் தமிழரிடைப் புகுத்தப் பட்டன. கற்பின் வழுவிய அகலிகையைக் காட்டி இவள் போல் ஒழுக்கம் பிறழற்க எனக் கூறுவது கற்புடைத் தமிழ் மணிகளிடத்துச் சாலாமையானும், அருந்ததியின் அருங்கற்பினைத் தமிழ்ப் பெண்களிடத்துக் காட்டிக் கற்பித்தல் வேண்டாமையானும், அவ்விரண்டும் தமிழர்க்கு வேண்டா ஒழுக்கங்களேயாம். கற்பிற் பிறழ்ந்தாரன்றே அவை காட்டற்பால? பார்ப்பார் தம் குலப் பெண்களிடத்துச் சார்த்திய ஒழுக்கங்களைத் தமிழ்ப் பெண்களின் மாட்டும புகுத்தியதொன்றே பார்ப்பனப் பெண்களுக்கும் தமிழ் மாதர்களுக்கும் இயற்கையின் உளதாய மனப்பான்மையினைத் தெள்ளத் தெளிய எடுத்து உரைக்கின்றது. ஆயின், கற்பினியல்பையும் கற்பொழுக்கத்தின் பயனையுமன்றோ "அம்மி மிதித்தலும் அருந்ததி காண்டலும்" வற்புறுத்துகின்றன; அது பொருந்தாமை என்னை? எனின், கற்பாவது 'கொண்டானிற் சிறந்த தெய்வம் இன்றெனவும் அவனை இன்னவாறே வழிபடுக எனவும் இருமுது குரவர் கற்பித்தலாம்' என்பது பெரியோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட தாகலின், தமிழ்த் தையலார்க்குக் கற்பினியல்பும் கற்பொழுக்கமும் இருமுது குரவரானே கற்பிக்கப்படும். அஃதன்றிச் சிறிதும் ஒட்டல் இல்லாத பார்ப்பான் தமிழ்ப் பெண்கட்கு அம்மி மிதிப்பக் கூறலும் அருந்ததி காணக் கூறலும் பொருந்தாவாம். அன்றியும், அப்பார்ப்பனப் பெண்களைத் தமிழ் மாதரார்க்கு வழிகாட்டிகளாக நிறுவுதலும் வேண்டாவாம். எனவே, இன்றைய தமிழர் மணவேள்வி அவரது தொன்மையுரிமை நெறி அன்றெனவும் அவை பார்ப்பாராலேயே புகுத்தப் பட்டனவெனவும் அவை புறக்கணிக்கத் தக்கனவெனவும் துணியப்படும் என்பது.

இனி, அக்கினியை வழிபடுதலும் பார்ப்பா ரியல்பே யன்றித் தமிழரதன்று. தமிழர் மண், விண், நீர், அங்கி, வளி இவற்றை வழிபடும் பெற்றியர் அல்லர். ஐம்பூத வழிபாடு வேதத்தின் கண்ணே கூறப்பட்ட தொன்றாகும். அவை இயற்கைப் பொருளெனவும் அவையிற்றைத் தாம் வழிப்படுத்தி ஆள வேண்டு மெனவுமே தமிழர் கொண்டுள்ளனர். ஆகவே, அங்கி கரியாக மண வேள்வி செய்தலும் தமிழர்க் குரித்தென்பது சாலாது.

இனி, மணமகளைச் சந்திரன் முதலியோர்க்கு அளித்துப் பின்னர் மணமகன் கைக் கொள்வதாகக் கருதப்படுவதூஉம் பார்ப்பார் கொள்கையே யாகும். கற்பிற் சிறந்த தமிழ் மணமகளைச் சந்திரன் முதலியோர் தீண்டுவர் என்பதும் கருதத்தக்கதோ? காதலன் சென்ற பாலைக் கடுவழியின்கண் தெறுதலை விலக்கப் பகலையும் தன் கற்பிற்கு இழுக்கு நேரு மென்றெண்ணி வழிபட அஞ்சி நின்ற செந்தமிழ்க் காரிகையாரையும் மதிமுதற் கடவுளர் தீண்டற் பாலரோ? எனவே, அவர் தீண்டுவாராகக் கூறிய தெல்லாம் பார்ப்பார் வினைகளே யன்றிப் பிறி தென்னைகொலோ? இத்தகைத் தீயொழுக்கங்களைத் தமிழர் பார்ப்பாரிடத்து நின்றும் கற்றொழுகும் பெற்றிமை சால வெறுக்கத் தக்கது. இனியேனும் தமிழர் நல்லுணர்ச்சி பெறுவாராக.

நிற்க, நல்லுலகின்கண் மிக்கின்பத்தைத் தருவதாகக் கருதி வேட்கப்படும் வேத வேள்விகள் தமிழர்க்கில வென்றும், அக்கொலை வேள்விகளை உடைய பார்ப்பாரே சிறந்தாரென்றும் சிலர் கருதா நிற்கின்றனர். தமிழர்க்கும் வேத வேள்வி உண்டென்பதும், அது அந்தணர் வேள்வியினும் மிக்க பயனைத் தருமென்பதும் உணராதார் அவ்வாறு கூறுவதில் என்னை வியப்பாம்? தமிழரது வேள்வியோ கொலை தழுவாதது மட்டுமன்று, ஏனை உயிர்கட்கு இன்பத்தை யளிப்பது. நற்பொருள்களை எல்லாம் நெருப்பிற் சொரிந்து தேவர் உண்பதாகக் கருதப்படும் பெற்றித்தன்று; ஆயின், ஏனை மக்கட்கு அவர் வேண்டும் உணவுகளை அளித்து அவருண்பக் கண்டு களிக்கப்பெறும் அருமையினையும் பெருமையினையுமுடைத்து. அது தான் என்னை? அதுவே விருந் தோம்பல்.

பூர்வ வேதங்களின் பயனுடைக் கருத்துக்களைத் தெற்றெனக் கொண்டிலங்கும் உத்தர வேதம் என்னும் கழிபெருஞ் சிறப்புடைய திருக்குறளே தமிழர் வேதமாகும். விருந் தோம்பலாகிய வேள்வி அவ்வேதத்தின்கட் கூறப்பட்டதாகலின், தமிழர்க்கு அதுவே வேத வேள்வியாம் என்க. அதற்கு ஒப்பது மிக்கதுமாகிய வேள்வி பிறிதெதுவு மின்றென்பது ஆராய்ச்சியான் விளங்கும்.

‘இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்—
துணைத் துணை வேள்விப் பயன்’

இத்திருக்குறளின்கண் ‘விருந்தின் வேள்வி’ என்றது விருந்தோம்பலாகிய வேள்வியாம். இதனைப் பரிமேலழகர் கூறுமாற்றானும் உணர்க.

அந்தணர் வேள்விப் பயனைவிட இதன் பயன் மிகுதித்தாமென்பது ‘விருந்தின் றுணைத்துணை வேள்விப்பயன்’ என்றதனால் நன்கு போதரும். அந்தணர் வேள்விக்கு அதற்கு விதிக்கப்பட்ட பயன் மட்டுமே உளதாம். விருந்தோம்பலாகிய வேள்விக்கு அவ்விருந்தின் தகுதிக் கேற்பப் பயனும் பல்கும் என்க. இன்னும் விருந்தோம்பலே தமிழர்க்கு வேள்வியாம் என்பது,

“பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பர் விருந்தோம்பி-
வேள்வி தலைப்படாதார்”

என்பதனானும் புலப்படும். இதனான், விருந்தோம்பலாகிய வேள்வி இன்றியமையாத தென்பதூஉம் அந்தணர் வேள்வி போல ஒவ்வொரு காலத்து ஏதேனும் பயன் கருதிச் செய்யப் படுவதன்றென்பதூஉம் பெற்றாமென்க. இவ்வேள்விக்கு அந்தணர் வேள்விக்கு வேண்டும் பொருட் செலவும் அகத்தியமன்று. வறியார்க்கும் தமக்கேற்ப இவ்வேள்வி செயல் கைகூடுவதாகும். வறியாராயினும் தம் நிலைமைக்கேற்ப வேள்வி செயக் கடமைப் பட்டவரேயாவர். இதனை,

“உடைமையுள் இன்மை விருந்தோம்பலோம்பா-
மடமை மடவார்கணுண்டு”

என்னும் தமிழ் மறையே நன்கு புலனுறுத்தும். இனி, அவ்வேள்வி தானும், வருவிருந்தினரை எதிர் நோக்கிச் செய்யப்படுவதாம். அஃதாவது, விருந்தினர் வரல் வேண்டும் என்னும் வேட்கை மீக்கொடு இருந்து, வந்தக்கால் அவரை முறைப்படி உபசரித்தலாம்.

‘வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை-
பருவந்து பாழ்படுத லின்று’

என்னும் குறள் இதனை வலியுறுத்துமாறு உணர்க. எப்பொருளேயாயினும், விருந்தினர்க்கு அளித்தன்றி உண்ணலாகாது என்பதும் தமிழர்க்கு விதிக்கப் பட்டதொன்றாம்.

“விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா-
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று”

என்பதனை நோக்குக. இனி இது இல்லறத்தார்க் கெல்லாம் ஒருங்கொப்ப இன்றியமையாதது என்பதும் அவர் அதனைக் கடைப்பிடித்து ஒழுகற் பாலர் என்பதும்,

“இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி—
வேளாண்மை செய்தற் பொருட்டு”

என்பதனான் விளங்கும். ‘வேளாண்மை’ என்றமையான் இதுவே இல்வாழ்வார் செயத்தக்க இன்றியமையாத உபகாரமென்பதூஉம் ஏனையவற்றுளெல்லாம் இது சிறந்த தென்பதூஉம் அறியாற்பால.

நிற்க, அந்தணர் வேள்வி மறுமைக்கும் பெரும்பயனை அளிப்பதொடு இம்மைக்கும் தம் விருப்பத்தை எய்துவிக்கும் என்பாருளரேல், தமிழர் வேள்வியும் இம்மை மறுமைப் பயனை அடைவிக்கும் என்பது உணர்க. இம்மை

பிறர்க்குத் தீங்கு இழைக்க வேண்டுமென்னும் நோக்கத்தோடு செய்யப்படும் அந்தணர் வேள்விகளோடு தமிழர் வேள்வி ஒப்புரைக்கற் பாலதன்று. அத்தகைத் துன்பங்களை இயற்றுதற்கு இவ்வேள்வி சிறிதும் கருவியாகாது.

"அருளில்லார்க் கவ்வுலகமில்லை பொருளில்லார்க்-
கிவ்வுலக மில்லாகியாங்கு"

என்பதற் கேற்ப, இம்மைக்குப் பொருளே வலியுடைத் தாகலின், அப்பொருளையும் இம்மைக் கின்றியமையாத புகழையும் இவ்வேள்வி பிறழ்வின்றிப் பயக்குமென்க.

"அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்து-
நல்விருந்தோம்பு வானில்"

என்பதனான், இவ்வேள்வி செய்வானது மனைக்கண், திருமகள் மனமகிழ்ந்து வாழா நிற்கும் என்பது பெறப்படுதல் காண்க. திருமகள் மனமகிழ்ந்து குடியிருப்பதினும் இன்பம் இம்மைக்கண் பிறிதுண்டோ? 'மூவுலகும் கேட்குமே சான்றோர் கொடுத்தா ரெனப்படும் சொல்' என்றலால், விருந்தினரை உபசரித்தலால் வரும்புகழினும் மிக்க புகழ்தான் யாது? இன்னும்,

"வித்துமிடல் வேண்டும் கொல்லோ விருந்தோம்பி-
மிச்சின்மிசைவான் புலம்"

என்றலால், இவ்வேள்வி செய்வார்க்கு மேன்மேலும் அது செயற்கு உரிய கருவாயும் குறைவின்று மென்பதூஉம் போதரும்.

இனி, மறுமைக்கண் இதனால் வரும் பயன்றான் யாது? எனின், அந்தணர் வேள்விகளெல்லாம் இந்திரன் முதலிய பதங்களையன்றே பயக்கும்; இது, அத்தகை உயர்வுடையாரும் தாழ்ந்து உபசரிக்கும் கழிபேருயர் நிலையினை எய்துவிக்கும் என்க. என்னை?

"செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்-
நல்விருந்து வானத் தவர்க்கு"

என்றாராகலின். எனவே, இம்மைக்கு மறுமைக்கும் கழிபெருஞ் சிறப்பினை தருதலோடு யாதொரு தீவினையையும் எத்துணை மதம்பயலாத இவ்விருந்தோம்பும் வேள்வியன்றோ சாலச் சிறந்தது?

"மோப்பக் குழையு மனிச்சம் முகந்திரிந்து-
நோக்கக் குழையும் விருந்து"

என்பதைக் கடைப் பிடித்துணர்ந்து, பிறழா நெறியில் இவ்வேள்வி செய்வார்க்கு இதனினும் மிக்க ஊதியம் பிறிதின்றாம்.

இனி, அந்தணர் வேள்வி தமிழர்க்குச் சிறிதும் உடன்பாடன்று என்பதூஉம் அது வெறுக்கத்தக்க தென்பதூஉம் உணரற்பால. உயிர்களைக் கொன்று செய்யப்பெறும் வேள்விகள் பலவாயினும், ஒருயிரையும் கொன்று [illegible] திருத்தலே மேலாம் பயனை உடைத்தாம்.

"அவிசொரிந் தாயிரம் வேட்டலினொன்ற-
னுயிர்செகுத் துண்ணாமை நன்று"

இதனான், தமிழர்க்கு அந்தணர் வேள்வி கடைப் பிடிக்கத் தக்கதல்ல என்பதும் ஊனுண்ணாமை அவர்க்கும் அதனினும் பெரும் பயனளிக்க வல்லதா மென்பதும் பெறப்படுமாறு உணர்க. இதனான், அந்தணர் வேள்வி பழிக்கப்பட்டவாறும் காணத்தக்கது. அன்றியும்,

"நன்றாகு மாக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்-
கொன்றாகு மாக்கங் கடை"

என்பதனான், வேள்விக்கண் உயிர்களைக் கொல்லுதலான் வருஞ் செல்வம் பேணத் தக்கதன்று என்பதும் அது பேணுவார் சான்றோராகார் என்பதும் பெறப்படுதல் கருதத்தக்கது. அல்லதூஉம் அந்தணர் வேள்வியின்கண் கொலை நிகழ்தலான், அவ்வேள்வி செய்வாரைக் 'கொலை வினையர்' எனத் திருவள்ளுவர் இழித்துக் கூறுவது கூர்ந்து உணரற்பாலது.

"கொலைத் தொழிலை உடையராகிய மாக்கள் அதன் புன்மை அறிவார் நெஞ்சத்துப் புலைத் தொழிலனராவர்" என்னும் கருத்தை உள்ளிட்ட,

"கொலை வினையராகிய மாக்கள் புலை வினையர்-
புன்மை தெரிவாரகத்து"

என்னும் திருக்குறளை நோக்குக. எனவே, உயிர்களைக் கொன்று வேள்வி செய்வார் கொலை வினையரும் புலை வினையருமாம் என்பன போந்தன. இத்திருக் குறளுரைக்கண், 'கொலை வினையர்' என்றமையான் வேள்விக்கட் கொலையன்மை அறிக' எனப் பரிமேலழகர் உரைத்தாராயினும் அதன் முற்றிருபாட்டு, 'நன்றாகு மாக்கம்' என்றது வேத வேள்வியான் வருமாக்கத்தையே சுட்டி நிற்றலின், அவ்வாறு பொருளுரைத்தல் சாலாதென்க. எனவே, பரிமேலழகர் அக்குறளான் வேத வேள்விக்கு உண்டாகும் இழுக்கினைப் போக்குதற்கே அவ்வாறு உரைத்தார் என்பதே வலியுறும். 'கொலை வினையர்' எனப் பொதுப்பட நிற்றலானும், வேள்விக்கட்கொலையன்மையை ஆண்டுச் சுட்ட வேண்டுமகத்தியமு மின்று. இனி, 'வினையர்' என்றது என்னை யெனின், 'நன்றாகு மாக்கம்' என முன் வந்த பாட்டை வற்புறுப்பான் உரைத்ததென்க. 'சான்றோர்க்குக் கொன்றாகு மாக்கம் கடை' என முற்கூறினரேனும், அதனாற் கொலை வினையராதல் மட்டுமன்றிப் புலை வினையருமாம். ஆகவே, சான்றோரால் இழிக்கத் தக்கார் என்னும் பொருளைக் கொலை வினையர் என்னும் குறள் வற்புறுத்து நிற்பது கண்டுகொள்க.

இதுகாறும் ஆராய்ந்தவாற்றான் தமிழரது வேதவேள்வி விருந்தோம்பலேயாம் என்பதும் அதுவே இம்மை மறுமைப் பயன்களை இனிது தரவல்ல தென்பதும் ஆகவே அதனைத் தமிழரெல்லாம் கடைப் பிடிக்கற் பாலரார் என்பதும் போந்தன.

ரோஜாப்பூக்களின் யுத்தம்

(T. S. ராஜகோபாலன், B. A., L. T.)

———:(o):———

பார்லிமெண்டுக்கடங்கிய அரசர்கள்.

சென்ற இரு கட்டுரைகளில் ஒருவாறு விவரிக்கப்பட்ட நூற்றாண்டுப் போரின் பயன்களில் ஒன்றாக ஏற்பட்டது ரோஜாப் பூக்களின் யுத்தம். ரிச்சர்டு IIஐ சிம்மாதனத்தினின்றும் இறக்கி ஹென்ரி IV லங்காஸ்டர் அரச வம்சத்தை ஏற்படுத்தியதும், அடுத்துவந்த ஹென்ரி V நூற்றாண்டுப் போரை முன்னிலும் அதிக கௌரவத்துடன் முடித்து, நல்ல வெற்றித் தருணத்தில் வயதுவராத ஹென்ரி VI பட்டத்திற்கு வந்ததும், அவருக்குப் பதிலாக ரீஜண்டு ஸ்தானம் வகித்த பெட்போர்டு (Bedford) பிரபுவின் அட்டூழியங்களால் பிரஞ்சு ஜனங்கள் ஒன்றுபட்டுக் கிளம்பி ஆங்கிலேயர் பிரான்ஸைவிட்டு விரட்டப்பட்டதும் பழைய விபரங்கள்.

இந்த ஹென்ரி VIன் காலத்தில் பிரான்ஸ் பூராவும் நஷ்டமாகி, அங்கு அதிகாரம் செலுத்திவந்த பிரபுக்களில் பலர் நாடு திரும்பி சோம்பிக் கிடந்தனர். முன்பு எட்வர்ட் III எதிர்பார்த்தபடியே உள் நாட்டில் பிரபுக்களின் கலகமும் அதனாலேற்பட்ட கலகங்களையும், சண்டைகளையும், குழப்பங்களையும், பொருள் நஷ்டங்களையும், வம்சங்களின் அழிவுகளையும் விவரிப்பது ரோஜாப்பூக்களின் யுத்தங்கள். ஆகவே இது பூராவும் உள்நாட்டுக்குள்ளேயே செல்வாக்குள்ள பிரபுக்களுக்குள் நடந்த சண்டை. இதில் கலந்துகொண்ட பிரதான கட்சியினர் தங்கள் தங்கள் தங்கள் கக்ஷிக்கு அறிகுறியாக வெவ்வேறு வர்ணங்களுள்ள ரோஜாப்பூக்களை கொண்டதால் இதற்கு இப்பெயர் வந்தது குறிப்பிடத்தக்கது. மற்றப்படி ரோஜாக்கள் சண்டையிடவில்லை. ராஜாக்கள் தான் தங்கள் மதிகளையிழந்து நாட்டின் நாசத்திற்குக் காரண புருஷர்களானார்கள்.

ஹென்ரி VIக்கு பாலியத்தில் ரீஜன்ஸி சபையினுதவி தேவையாக இருந்ததுபோலவே பிற்காலத்திலும் இருந்தது. அவருக்கு யாது காரணத்தினாலோ பைத்தியம் பிடித்துவிட்டது. ஆகவே ஆள் யோக்யதையில்லாமல் போய் ரீஜன்ஸி சபை ஏற்பட்டது. அந்த சபையில் அரசனுடைய மனைவி Margaret of Anjou (அஞ்சோ நாட்டு மார்கரெட்) என்பவளும், யார்க் பிரபுவான ரிச்சர்டும் முக்கியஸ்தர்களாக இருந்தனர் (Richard Duke of York). இந்த யார்க் பிரபு ரிச்சர்டு என்பவர் ஹென்ரி VIக்குத் தாயாதியும், சிம்மாஸனத்திற்குப் பாத்தியமும் உடையவர் என்பது அரசன் மனைவிக்கு அச்சத்தை யுண்டாக்கியது. அச்சத்தை அதிகப்படுத்துவதற்கு ஒரு காரணமும் இருந்தது. வெகுநாள்வரையில் அரச தம்பதிகளுக்கு ஆண் குழந்தையே கிடையாது. இந்த விபரங்களினால் மார்கரெட்டுக்கு ரிச்சர்டிடம் ஒரு பயமும் சந்தேகமும் ஏற்பட்டு ரீஜன்ஸி சபையில் அவர் ஸ்தானம் பெறக்கூடாத வழியைத் தேடி வந்தாள். ஆனால் ரிச்சர்டுக்கு நல்ல செல்வாக்கும் வெகு ஜனக் கட்டுப்பாடும் இருந்ததனால் அவர் ரீஜன்ஸி சபையில் இருக்க முடிந்தது. ஆதியில் நாட்டின் நலத்திற்காகமட்டும் ஸ்தானம்பெற விரும்பியிருந்தவர், நாளடைவில் தன் உரிமைகளைப்பற்றியும் பேசவாரம்பித்தார். ஆகவே அரசனுக்குப் பித்தம் சற்றுத் தெளிந்தகாலத்தில் அவரை வெளியேற்றுவது சகஜமாகிவிட்டது. ஆனால் அரசனுக்கு க்ஷணப் பித்தம்—க்ஷணச் சித்தம்.

தன்னை வேண்டுமென்றே விலக்குகிறார்கள் என்ற எண்ணம் ரிச்சர்டுக்கு விழுந்ததும் அவரும் தீவிரமாகப் போராடலானார். தவிரவும் பிரபுக்களுடைய ஆட்சி சற்று கடுமையாக இருந்ததால் அவர்களை தான் இருந்து அடக்கினால்தான் அவர்கள் ஒரு நிலையில் இருப்பார்கள் என்பதை யுணர்ந்து அதற்காகவும் தன் செல்வாக்கை உபயோகப்படுத்த விரும்பினார். அவர் உள்ள வரையில் மார்கரெட்டுக்கோ அவர்களைச் சேர்ந்த பிரபுக்களுக்கோ தன்னரசு நடத்த முடியவில்லை.

கடைசியாக ஹென்ரி VIன் மனைவிக்கு எட்வர்டு என்ற ஒரு குழந்தை அந்தியகாலத்தில் பிறந்தது. தன் மகனுக்கு எங்கே செல்வாக்கு இல்லாமல் போய்விடுமோ என்றஞ்சிய மார்கரெட் படை திரட்டலானாள். ஏனெனில் "தன்வினை தன்னைச்சுடும்" என்றபடியும் "குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்" என்றபடிக்கும் ஆதியில் லங்காஸ்டர் பிரபுக்கள் ரிச்சர்டு IIஐ தங்கள் செல்வாக்கினால் சிறைப்படுத்தி சிம்மாஸனத்தைக் கைக்கொண்ட குற்றம் அவள் மனதில் உறுத்திக்கொண்டிருந்தது போலும்! அதுசமயம் ரிச்சர்டுக்கும் மார்க்ரெட்டுக்கும் சச்சரவு ஒரு தோட்டத்தில் நடந்துகொண்டிருந்தது. தன்னைச் சேர்ந்தவர்களெல்லாம் சிவப்பு ரோஜாவை அணிந்தவர்கள், என்ற விதமாய் தனக்கு ஒரு சிவப்பு ரோஜாவை மார்க்ரெட் அத்தோட்டத்திலிருந்து பறித்துக்கொண்டாளாம்! அதைப்பார்த்த ரிச்சர்டு தன் கக்ஷிக்கு அறிகுறியாக ஒரு வெள்ளை ரோஜாப் புஷ்பத்தை வரித்துக்கொண்டாராம்! ஆகவே "ரோஜாப் புஷ்பங்களின் யுத்தம்" (The Wars of the Roses) என்று சரித்திரத்தில் பெயர் வந்ததாம். (பிரான்ஸில் ராஜ்யங்கள் தொலைந்து அங்கு அட்டகாசம் செய்துவந்த பிரபுக்கள் இங்கிலந்துக்குவந்து சோவும் யுத்தங்கள் நடந்தன! எட்வர்ட் IIIன் மதியேமதி! தவிரவும் பிரான்ஸில் கக்ஷிப்பிளவு. அரசனுக்குப் பைத்தியம். வார்சு போராட்டம். அதனால் ஆங்கிலேயர் பிரான்ஸின் மேல் போர் தொடுத்தனரல்லவா? அதேபோன்று இங்கிலந்திலும் கக்ஷிப்பிளவு; அரசனுக்குப் பைத்தியம். வார்சு போராட்டம். வேலையற்ற பிரபுக்களுக்கு சண்டை ஏற்பட்டது என்பது நின்று தண்டிக்கும் கடவுளின் தன்மை" என்பதும் ஏழைகள் அழுதகண்ணீர் தேவர் மூவர் காக்கினும் வழிவழி ஈர்வதோர் வாளாகும்" என்பதும் "நன்மையோ கெடுதலோ செய்தவர்களையே திருப்பிச்சாரும் என்பதும் சரித்திரம் விளக்கும் உண்மைகள் என்பதை யாவரும் எளிதில் அறியலாம்.)

இப்படி ஏற்பட்ட யுத்தம் பல சண்டைகளுள்ளதாக நடந்தது. அவற்றுள் மிக முக்கியமானவை பின்வருவனவாகும்:—1455ல் நடந்த (St. Albans) செயின்ட்-ஆல்பன்ஸ் சண்டையில் யார்க்பிரபு கக்ஷியினர் வெற்றியடைந்து அரசன் ஹென்றி VI சிறை பிடிக்கப்பட்டார். ஆனால் விடாமுயற்சியும் லாகவமும் நிறைந்த ராணியான மார்கரெட்டோ என்றால் தன் பச்சைக் குழந்தையைக் கையிலேந்தி, வடதிசையை நோக்கிச்சென்று கல்லும் உருக, ஜனங்களிடம் உதவிக்காகக் கெஞ்சி படைசேர்த்துக்கொண்டாள். ஆகவே 1460ல் Wakefield என்ற விடத்தில் நடந்த சண்டையில் ராணி வெற்றிபெற்று, யார்க்பிரபு தோற்றார். தன் கோபத்தையும் அருவையையும் காட்டவேண்டி யார்க்பிரபுவின் தலையை வெட்டி, காகிதத்தாலான ஒரு கிரீடத்தைத் தலையில் வைத்து, யார்க்கோட்டை வாசலில் ஒரு ஈட்டிமுனையில் செருகி வைத்து, அதைப்பார்த்து சந்தோஷப்பட்டுக்கொண்டிருந்தாளாம் (என்னே ஆத்திரத்தின் கோலம்! பிணத்தினிடம் கூட வெறுப்புத்தோன்றியது, அன்பு மயமாகச் சொல்லப்படும் ஒரு பெண்பிள்ளைக்கு!)

இந்தவிபரம் அறிந்த ரிச்சர்டின் மகன் எட்வர்ட் என்பவர் தன்னுடைய ஆட்களைச் சேர்த்துக்கொண்டு ராணி கக்ஷியினரை Mortimers Cross என்ற விடத்தில் சந்தித்து நன்றாய் முறியடித்து, சேனைகளைச் சின்னாபின்னமாக்கிக் கொலைசெய்தார்! ஆகவே லண்டனுக்குள் நுழைந்து எட்வர்ட் IV என்னும் பட்டப்பெயருடன் யார்க் வம்சத்தை ஸ்தாபனம் செய்தார். இதற்கு உதவியாக இருந்தது வார்விக்பிரபு ரிச்சர்டு நெவிலி (Richard Neville Earl of Warwick) என்பவர். இங்கிலாந்து பிரபுக்களுக்குள்ளேயே அதிகமான ஆள்கட்டுப்பாடும் செல்வாக்கும் உள்ளவர். ஆதியில் யார்க்கக்ஷியில் இருந்தவர். பிறகு மார்க்ரெட்டுக் கக்ஷியில் சேர்ந்தார். அவன் ஏதோ மரியாதைக் குறைவாய் நடந்தியதால், எட்வர்டுடன் சேர்ந்துகொண்டார். இவர் எந்தக்கக்ஷியில் இருந்தாரோ அந்தக்கக்ஷிக்கு ஜெயம் நிச்சயம் என்பதை ஒட்டி இவருக்குச் சரித்திரத்தில் (King Maker) அரசராக்குவோர்" என்ற கௌரவப்பெயரும் உண்டு. அவருடைய உதவியைக்கொண்டு Twekesbury என்றவிடத்தில் ராணியைத் தோற்கடித்து, குழந்தை எட்வர்டையும் கொன்றார். அடுத்தாற்போல் வார்விக்பிரபு தன் இஷ்டத்தை வற்புறுத்துவார்போல நடந்துகொண்டதால் அவரையும் (Barnet) என்ற விடத்திற் தோற்கடித்துக்கொன்று, நிம்மதியாக சிம்மாசனம் ஏறினார். சிறைப்பட்ட ஹென்றி VIம் சிறையிலேயே காலமானார்!

பட்டம்பெற்ற எட்வர்ட் IV பார்லிமெண்ட் என்ற சபையையே மதியாமல் தன்னிஷ்டம்போல் வரி விதித்தும், பணம் பெற்றும் அரசு நடத்தினார். பிரபுக்கள் ஒன்றும் செய்ய முடியவில்லை. சுமார் 1483வரையில் ஆண்டு இறக்கும்போது அவருக்கு வயது வராத இரண்டு ஆண்பிள்ளைகளும், பெரியதான ஒரு பெண்ணும் இருந்தனர். அந்த ஆண்பிள்ளைகளில் மூத்தவனை எட்வர்டை பேருக்குமட்டும் வைத்து எட்வர்ட் IVன் சகோதரன் ரிச்சர்டு என்பவன் ரீஜண்டானான். ஒரேவருஷத்தில் அவர்கள் இருவரையும் இரகசியமாய்க் கொன்றுவிட்டு ரீஜண்டே ரிச்சர்டு IIIவதாக ஆனான். ஜனங்களையும் பல வழிகளில் ஹிம்சித்தான். ஆகவே ஜனங்கள் கலகம் செய்ய அவர்களுக்குத் தலைவனாயிருந்த ரிச்மாண்ட் பிரபு ஹென்றி என்பவன் (Henry Earl Richmond) (பாஸ்வொர்த்) Bosworth என்ற விடத்தில் 1485ல் தோற்கடித்துக் கொன்றான். இந்த ஹென்றி யார் என்பதும், ரோஜாப்பூ யுத்தங்களில் இதர சில விபரங்களும் பின் ஒரு சமயம் எழுதப்படும்.

செவிடன் அனுதாபம்

இப்போது உன் மாமனார் என்ன செய்துகொண்டிருக்கிறார்?

"வைத்தியம்"

"பைத்தியமா? ஆஹா! எவ்வளவு தங்கமான ஆள்"

***

"கவலையில்லை"

வீடுபார்க்க வந்தவர்:—"இந்த மெத்தை நன்றாய்த்தானிருக்கிறது. ஆனால் கீழ் அறையில் வெடி மருந்து தொழிற்சாலையிருப்பதுதான் எனக்குப் பிடிக்கவில்லை."

வீட்டுக்காரர்:—"நீங்கள் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். அவர்களெல்லாம் அதிக நாளைக்கு இங்கிருக்க மாட்டார்கள். ஒரு நெருப்பு பற்றிக்கொண்டால் ஓடி விடுவார்கள்."

***

தலைமை ஆசிரியர் (பையனைப் பார்த்து):—என்னடா, பெரிய வாலாய் இருக்கிறாயே, உன் பெயர் என்ன?

பையன்:—ஆஞ்சனேயுலு, சார்.

"நல்ல கேள்வி"

பிரசங்கியார்:— "ஒன்றுவது என்னுலானது என்று நான் சொல்லிக்கொள்ள இடமில்லை."

கூட்டத்தில் ஒருவர்:-"தங்களுடைய பிள்ளைகள் நானும்?"

***

"உபசாரம்"

வந்தவர்:-"இட்டிலிகொண்டு வருமுன் சட்னியை மட்டிலும் வைத்து விட்டுப் போய்விட்டீரே!"

வேலைக்காரன்:— "இட்டிலி வெந்துகொண்டிருக்கிறது அது வரையிலும் தாங்கள் சும்மா தானே உட்கார்ந்திருப்பீர்கள் என்றுதான்"

***

ஒரு தோட்டக்காரன் ஒரு மரமேறியை அழைத்து மரத்தின் மேலேறி தேங்காய்களை அறுக்க என்ன கூலி என்றான். அவன் ஐயா! ஏற ஒரு காய், இறங்க ஒரு காய் கொடுக்க வேண்டுமென்றான்."

தோட்டக்காரன்:—சரி! ஆனால் இந்த மரத்தின்மேல் ஏறு.

மரமேறி மரத்தின்மேலேறி ஐந்து காய்களைத் தள்ளி எடுத்துக்கொண்டு புறப்பட்டான்.

தோட்டக்காரன்:—என்னடா! காய்களை எல்லாம் நீயே எடுத்துக் கொண்டு போகிறாயே.

மரமேறி:—ஏறினதற்கு ஒரு காய், இறங்கினதற்கு ஒரு காய், நீயாக கொடுத்தது ஒன்று, நானாக எடுத்துக் கொண்டது ஒன்று. மீதி ஒன்றை நீ கொடுத்தாலும் சரி கொடுக்காவிட்டாலும் சரி—என்று தூக்கிக்கொண்டு போய்விட்டான்.

"வைரத்தோடு"

ஒருத்தி:—"இந்த வைரத் தோடுதான் நேற்று என் கணவன் எனக்குப் புதிதாக வாங்கி வந்தது. ஆனால் இதற்குமுன் இதை அணிந்தவர்கள் ஆறு மாதத்திற்குள் இறந்துபோய் விட்டார்களாம்."

மற்றவள்:—"அதுதான் நானும் யோசித்தேன். என்னடா இவ்வளவு அன்புடன் விலை யுயர்ந்த வைரத்தோடு வாங்கிக் கொடுத்திருக்கிறாரே என்ன சூழ்ச்சியோ என்று மதி மயங்கினேன். இப்போதுதான் தெரிகிறது."

***

"சரியான பதில்"



பெரிய மனிதர்:—(சிறைக்குள் சென்று) "உன்னுடைய சிநேகிதர் எப்போதாவது உன்னைப் பார்க்க வருவதுண்டா?"

கைதி:—"நாங்கள் அடிக்கடி ஒருவரை யொருவர் பார்த்துக் கொள்ளுவோம். என் சிநேகிதர் எல்லாரும் இங்கேயே இருக்கிறார்கள்."

***

கணவன்:—என்னடி, நீ இப்படி என்னை சொல்லுகிறாய். நான் எங்காவது கிணற்றில் விழுந்துதான் சாகவேண்டும்.

மனைவி:—விழுந்து விடுங்களேன்.

கணவன்:—நான் போய் விட்டால், உனக்கு யார் பிண்டம் போடுவான்.

மனைவி:—உங்களுக்குப் போடுகிறவனே (மகனே) எனக்கும் போட்டு விடுகிறான்; இதுதெரியாதா?

ஆஸ்ட்ரியாவில் கருநிற அன்னங்கள் இருக்கின்றனவாம்.

* * *

அயோவா (அமெரிக்கா)வில் ஸ்ரீமதி. க்ளிண்டன் என்பவளிடம் இருபத்தாறு ஆண்டுகட்கு முன் பழுத்த ஆப்பிள் பழம் ஒன்று இன்றும் கெடாமல் இருக்கிறதாம்.

* * *

அமெரிக்காவில் ஒரு கோழி கேள்விக் குறி—?—வடிவுடன் ஒரு முட்டையிட்டிருக்கிறதாம்.

* * *

கூவும் சக்தி வருமுன் குயிலைத் துரத்திவிடா விட்டால் காக்கைக்குக் குயிலின் சப்தம் பொருந்தி விடுமாம்.

* * *

அடுத்த ஆண்டில் ஹோலிவுட்டில் 650 சினிமா பிலிம்கள் தயாரிக்கப்படுகின்றனவாம்! இவற்றிற்காக மொத்தம் முப்பது கோடி ரூபாய் செலவாகுமாம்.

* * *

இல்காய்ஸ் என்னுமிடத்தில் மனித முகத்தையுடைய கோழி இருக்கிறதாம்.

* * *

பதினாறு வயதுள்ள லாரா ராத் என்னும் பெண் ஹோலிவுட்டில் சினிமாக் கம்பெனிகட்குரிய சிங்கங்களையெல்லாம் அடக்கி வளர்க்கிறாளாம்.

* * *

1792-ம் ஆண்டில் வெளியிடப்பட்ட ஒரு பஞ்சாங்கத்தில் முதலில் வெங்காயத்தாலும், பிறகு தேனைக் கொண்டும் வழுக்கைத் தலைகளில் ஒரு நாளில் இரண்டு வேளைகள் தேய்த்தால் மயிர் செழுமையாக வளரும் என்று எழுதப்பட்டிருக்கின்றதாம்.

* * *

கப்பல் தொழிலைப் பயிற்றுவிக்கும் ஒரு ஜெர்மன் ஸ்டீமரில் கேப்டனைத் தவிர மற்ற உத்தியோகஸ்தர்கள் எல்லோரும் பெண்களாகவே இருக்கிறார்களாம்.

* * *

சர்ஜரி ராயல் காலேஜைச் சேர்ந்தவர்கள் சில மீன்கட்கு ஆப்பரேஷன் செய்து அவைகளை நிலத்தில் சஞ்சரிக்கும் ஜந்துக்களாகச் செய்து விட்டார்களாம்.

* * *

பாரிஸ் நகரில் மாத்திரம் லைசென்ஸ் பெற்ற நாய்கள் நாற்பத்தையாயிரம் இருக்கின்றன. 1932-ல் மட்டும் நாய்களின் லைசென்ஸ் மூலம் நாற்பத்திரண்டாயிரம் பவுன் வருமானம் கிடைத்திருக்கின்றதாம்.

பாவையோடு காதல் நாடகம்:—

இங்கிலீஷ் கோர்ட்டில் ஸ்ரீமதி. சாலிலெவி என்ற ஒரு பெண் தம் விவாக ரத்து உத்தரவு வேண்டுமென்று வழக்குத் தொடர்ந்தாள். பிராதில் புருஷன் அவளோடு பேசுவதில்லையென்றும் ஒரு மரப்பாவையையே கையில் வைத்து விளையாடிக்கொண்டிருக்கின்றானென்றும், ஓய்வான வேளைகளில் அப்பாவையை மடிமீது வைத்துத் தாலாட்டி அத்துடன் பேசி நகைத்துக் கொண்டிருக்கிறானென்றும் குறிப்பிட்டாள். விவாகம் ரத்து செய்யப்பட்டது.

***

பேதைப் பெண்:—

லிதுவேனியா பிரதேசத்திலுள்ள கோவ்னோ என்னும் நகரில் ஒரு பெண் ஏராளமான பாங்கி நோட்டுகளுடன் ஒரு நதியில் குதித்துத் தற்கொலை செய்துகொள்ள முயற்சித்தாள். பக்கத்திலிருந்தவர்கள் அவளைக் காப்பாற்றினார்கள். தற்கொலை முயற்சிக்குக் காரணம் என்ன என்று வினவியபோது: தனக்கு எதிர்பாராத விதமாக ஏராளமான திரவியம் கிடைத்ததாகவும், அதைக்கொண்டு என்ன செய்வது என்று தோன்றாமல் தற்கொலை செய்துகொள்ள முயன்றதாகவும் பதில் கூறினாளாம்.

***

ராக்ஷஸ வாழைக்குலை:—

சேலம் புதிய காலேஜ் கட்டடத்தில் விவசாய உதவி டைரெக்டர் ஒரு விவசாயக் கண்காட்சியை நடத்திவைத்தார். அதில் பலவிதமான பழங்கள், கரும்பு தினுசுகள், பருத்தி வகைகள், நெல் வகைகள் மற்றும் புதிய பயிர்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தனவாம். அவற்றுள் ஐந்தடி உயரமுள்ள வாழைக்குலை ஒன்றும் வைக்கப்பட்டிருந்ததாம். அக் குலையில் பதினெட்டு சீப்புகள் இருந்தன. அவற்றில் 200 பவுண்டு நிறையுள்ள 250 வாழைப் பழங்கள் இருந்தன.

***

சக்கரமில்லாத ரயில்வண்டி:—

எம். நிக்கோலாஸ் யார்மல்சுக் என்னும் முப்பத்தைந்து வயதுடைய ஸோவியத் ருஷிய இஞ்சனீயர் ஒருவர் சக்கரங்களே இல்லாமல் – பால் பேரிங்குகளின் உதவியால் ஓடக்கூடிய ஒரு புதுமாதிரியான ரயில் வண்டியைக் கண்டுபிடித்திருக்கிறாராம். இது தண்டவாளமின்றி மணிக்கு 190 மைல் வேகம் ஓடுமாம். இரயில் வண்டியிலுள்ள ஒவ்வொரு கம்பார்ட்மெண்டிலும் 110 பிரயாணிகள் ஏறிக்கொண்டு பிரயாணம் செய்யலாமாம்.

ஆசிரியர் குறிப்புக்கள்.

அரக்கோணம் தாலூக்காபோர்டு உபாத்திமைச் சங்கம்

17-9-33-ம் தேதியில் அரக்கோணம் சி. எல். எம். எலிமெண்டரி பாடசாலையில் மேற்படி பாடசாலையின் தலைமை உபாத்தியாயரும் தாலூகாபோர்டு அங்கத்தினருமான மான்யுவல் அவர்கள் தலைமையின் கீழ் மேற்படி உபாத்திமைச் சங்கத்தின் விசேஷக் கூட்டம் ஒன்று கூடியது. அப்பொழுது உபாத்தியாயர்கள் தங்கள் குறைகளை முறையிட்டுச் சில தீர்மானங்கள் நிறைவேற்றினர். நமது நாட்டில் தாலூகா போர்டுகளின் ஆதிக்கத்திலுள்ள ஆரம்ப ஆசிரியர்களின் தொல்லைகள் அநந்தம். அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளமோ வெகு சொற்பம். அதுவும் மாதந்தோறும் கிரமமாகக் கிடைப்பது துர்லபம். இப்படியிருந்தால் வானம் அளாவப் போற்றிப் புகழப்படும் நாட்டு முன்னேற்றத்திற்கு அடிப்படையான ஆரம்பக் கல்வி எவ்வாறு செழித்தோங்கும் என்று கேட்கின்றோம். மத்திய மாகாணத்தில் ரத்தினகிரியைச் சேர்ந்த ஆரம்ப பாடசாலை ஆசிரியர்கள் தங்களுக்குரிய சம்பளம் கிடைக்கப் பெறாமல் வருந்துவதாகவும் சமீபத்தில் ஒரு செய்தி வெளிவந்திருக்கிறது. உயர்தரக் கல்விக்கு லக்ஷக்கணக்கான பணம் செலவு செய்யப்படுகின்றது. இதன் பயன் என்ன? கோரமான வேலையில்லாத் திண்டாட்டமே உயர்தரக் கல்வியின் பயனாய் இருக்கின்றது. ஒரு பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளுக்குக் கல்லூரிகளையும் கலாசாலைகளையும் மூடிவிட்டு ஆரம்பக் கல்வியில் கருத்தைச் செலுத்தல் சிறந்த அறிவுடைமை ஆகும் என்பது எமது அபிப்பிராயம். ஆனால் அரசாங்கத்தார் அங்ஙனம் செய்யத் துணிவார்களா? அரக்கோணம் தாலூகாபோர்டு உபாத்தியாயர் குறைகளைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சிரத்தையுடன் கவனிக்கவேண்டும் என்று விரும்புகின்றோம்.

காந்தி ஜயந்தி வாரம்

8-10-33-ம் தேதியோடு 'காந்தி ஜயந்தி வாரம்' முற்றுப் பெற்றது, நாட்டில் பல ஊர்களில் இந்த வைபவம் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது என்று அறிகிறோம். வெறும் ஊர்வல அளவில் பேச்சளவில் நின்று விடுதல் காந்தி ஜயந்தி வாரக்கொண்டாட்டமாகாது. காந்தியடிகள் உயிராகப் போற்றும் கதரை எல்லாரும் ஆதரிக்க வேண்டும். தீண்டாமைப் பேயை நமது சமூகத்தை விட்டு ஓட்டம் எடுக்குமாறு செய்ய வேண்டும். இவ்விதம் செய்தலே "காந்தி ஜயந்தி"யின் உண்மைத் தத்துவம் நிறைவேற்றி வைப்பதாகும். அடுத்த வாரத்தில் தீபாவளிப் பண்டிகை வரப்போகிறது. அத்திருநாளில் தமிழ் மக்களே உங்கள் கடமை என்ன? வெறும் வேடிக்கைகளில் காசைக் கரியாக்கப்போகின்றீர்களா? பகட்டான நமது உதிரத்தை உறிஞ்சும் அந்நியத் துணிகளை வாங்கிப் பணத்தைக் கொள்ளை கொடுக்கப் போகின்றீர்களா? நமது நாட்டில் வறுமைப் பேய் தலைவிரித்தாடிக்கொண்டிருக்கிறது. கோடிக்கணக்கான மக்கள் அரை வயிற்றுக் கஞ்சிக்கும் அல்லற் பட்டுக் கிடக்கின்றனர். எனவே ஏராளமாக இருப்பில் கிடக்கும் தூய கதராடைகளை வாங்கி உடுப்பதின் மூலம் ஏழை மக்கட்கு ஆறுதல் அளிக்க வேண்டுமென்று விரும்புகின்றோம். தீபாவளி என்பது நரகாசுரனை வதைத்து மக்கட்கு விடுதலை இன்பம் அளித்த கண்ணபிரானுக்கு நன்றி செலுத்தும் தத்துவத்தை அடிப்படையாகக்கொண்டது. இந்நாளில் வறுமையாகிய நரகாசுரனை வதைக்கவல்ல கதரை ஆதரித்துத் "தரித்திர நாராயண" சேவை

செய்யவேண்டும் என்று தமிழ் மக்களை வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகின்றோம். இச்சேவையே "காந்தி ஜயந்தி" வாரத்தின் பயனாக விளங்க வேண்டும் என்பது எமது வேட்கை. சிம்லாவில் ஜப்பான் பிரதிநிதிகளோடு இப்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கும் சம்பாஷணைகளைக் குறித்து யாரும் கவலைப்பட வேண்டியதில்லை. இந்தியமக்கள் உறுதியுடன் சுதேசி விரதம் பூண்டால் யாராலும் அவர்கட்கு நஷ்டம் உண்டாக்கமுடியாது. இந்தியா தனக்கு வேண்டிய வஸ்திரங்களைத்தானே சமாளித்துக்கொள்ளும் சக்தி வாய்ந்தது. இதற்காகப் பிறநாடுகளை எதிர் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை என்பதே நமது கருத்து. தீபாவளி போன்ற விசேஷ தினங்களிலும் பிற சமயங்களிலும் இந்திய மக்கள் சிறப்பாகக் கதரையும் பொதுவாகச் சுதேசி ஆடைகளையும் ஆதரித்து வாங்குவார்களானால் கோடிக்கணக்கான ஏழை மக்கட்கு உணவும் விடுதலையும் அளிப்பவர்கள் ஆவார்கள். சுதேசத் தொழில் வளர்ச்சியே நமக்கு விடுதலை அளிக்கவல்லது என்னும் உண்மையை ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இவ்விஷயத்தில் அரசாங்கத்தார் நமக்குப் பூரண ஆதரவு கொடுத்து விடுவார்கள் என்று நம்பி எதிர்பார்ப்பதில் பயன் இல்லை. வெள்ளைக்காகித திட்டம் அமலுக்கு வரும் வரும் காலத்தில் சுதேசத்தொழில்களுக்கு இப்பொழுது காட்டப்படும் ஆதரவும் எங்கே இல்லாமற் போய்விடுமோ என்றே அஞ்சவேண்டியிருக்கிறது. ஆகையால் இந்திய மக்கள் பிறரை எதிர் பார்க்காமல் தன்னம்பிக்கையுடன் சுதேசிப் பொருள்களை ஆதரிப்பதற்குக் காந்தி ஜயந்தியைப் பயன் படுத்திக் கொள்வார்களாக.

சட்ட சபைகளின் கால நீட்டம்

மாகாண சுய ஆட்சி முறை என்பதும் 1934-ம் ஆண்டில்தான் வெளிப்படுமாம். அதற்குப் பிறகு ஐக்கிய ஆட்சி முறை இந்தியாவுக்கு வர ஒரு ஆண்டுக்கு மேலாகும். ஆகையால் இந்திய சட்டசபைக்கும் மாகாண சட்ட சபைகட்கும் தேர்தல் நடத்தவேண்டும் என்று அங்கத்தினர்கள் எண்ணுகிறார்கள். ஆனால் அரசாங்கத்தார் 1935-ம் ஆண்டு வரை சட்ட சபைகளின் ஆயுளை நீட்டி வைப்பார்கள் என்று தெரிகிறது. இஃது உண்மையாயிருக்கும் என்றே நம்புகின்றோம். சட்டங்களில் யோக்கியதையைக் கெடுக்க இந்த முடிவைக் காட்டிலும் வேறொன்று இருக்காது என்று எண்ணுகிறோம்! ஏதோ சிறிது காலம் அநாவசியச் செலவே உத்தேசித்துச் சட்டசபைகளின் காலத்தைத் தள்ளி வைக்கலாமே யொழிய ஆண்டுக்கணக்கில் நீட்ட நினைப்பது பொறுப்புள்ளவர்களின் செய்கையாகாது. 1935-ம் ஆண்டிலேனும் புதிய சட்டசபைகள் அமைக்கப்படும் என்பது என்ன நிச்சயம்? முதலில் உலகப்பொருளாதார நிலை செழுமை அடைய வேண்டும். ரிஸர்வ் பாங்கு ஏற்படவேண்டும். சமஸ்தானங்கள் ஐக்கிய ஆட்சிமுறையில் சேரவேண்டும். அப்படி யானாலும் மாகாண சுய ஆட்சி முதலில் ஏற்படவேண்டும். அதற்குப் பிறகு ஐக்கிய ஆட்சிமுறை வரக் கொஞ்ச காலமேனும் செல்லும். ஆகையால் அரசாங்கத்தார் கூறும் ஐக்கிய ஆட்சி என்பது 1935-ம் ஆண்டிலாவது கிடைத்து விடும் என்று நம்ப இடமில்லை: எனவே அதற்கு மேலும் சட்ட சபைகளை நீட்டி வைக்கவேண்டும என்ற எண்ணம் தோன்றலாம். ஆகையால் இப்பொழுதே சட்டசபைகளைக் கலைத்து விட்டுப் புதிய தேர்தலுக்கு ஏற்பாடு செய்தால் புதிய அரசியல் சீர்திருத்தத்தின் மதிப்பு என்ன என்று

தெரிந்துகொள்ளுவதற்கு ஒரு வழி ஏற்படும். ஜனங்களின் உரிமைகளும் பாழ் போக மாட்டா.

நிஜாம் மன்னரின் செந்நெறி

ஹைதராபாத் நிஜாம் மன்னர் தமது சமஸ்தானத்தில் சமய சம்பந்தமாகவும் அரசியல் சம்பந்தமாகவும் மேற்கொண்டுள்ள கொள்கையை விளக்கி ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். அதில் தாம் இஸ்லாத்தையும், தீர்க்கதரிசியான முகம்மது நபிகள் நாயகத்தையும் தழுவிப் பின்பற்றி வந்தாலும் நிர்வாக விஷயத்தில் 'சர்வ சமய சமரஸ'க் கொள்கையையே மேற்கொண்டிருப்பதாகக் கூறியிருக்கிறார். "எனது பாதுகாப்பின்கீழ் பல்வேறு சமயங்களைச் சார்ந்தவர்கள் இருக்கின்றனர். அவர்களுடைய ஆலயங்களையும் பாதுகாப்பது எனது சமஸ்தானத்தின் தொன்று தொட்ட கொள்கை. ஆகையால் எந்த ஜாதி மதத்தினராயினும் அவர்களது மத உணர்ச்சியைப் புண்படுத்தவோ, மத வெறி பிடித்தவன் என்று என்னை எல்லாரும் எண்ணும்படி என் சொந்தமதத்திலேயே மூழ்கிக் கிடக்கவோ நான் விரும்பவில்லை. உலகிலுள்ள சகல மதங்களையும் வேற்றுமையின்றி நடுநிலையுடன் நோக்கவேண்டும் என்பதும், யாருடைய மத அநுஷ்டானங்களிலும் அநாவசியமாய்த் தலையிடக் கூடாது என்பதும் எனது பாரம்பரை தர்மமாகும்" என்று நிஜாம் மன்னர் கூறிய மொழிகள் பொன்னேபோல் போற்றத்தக்கவை ஆகும். ஹிந்துக்கள் பெரும்பான்மையோராக விளங்கும் சமஸ்தானத்தில் முஸ்லிம் மன்னர் இத்தகைய மனப்பான்மை கொண்டிருப்பது மகிழ்ச்சி தரத்தக்க விஷயமாகும். நிஜாம் மன்னரின் உயரிய பரந்த நோக்கத்தை நாம் பெரிதும் பாராட்டுகின்றோம். ஆனால் அவருடைய சமஸ்தான உத்தியோகஸ்தர்களும் இந்த நன்னோக்கத்தைக் கடைப்பிடித்து ஒழுகும்படி அவர் செய்யவேண்டும் என்று விரும்புகின்றோம். இன்றேல் நிஜாம் மன்னரின் உயர்நோக்கம் நிறைவேறாது என்பது உறுதி.

டாக்டர் அன்னிபெஸன்ட் மறைவு

செப்டம்பர் மாதம் 20-ந்தேதி மாலை சென்னை அடையாற்றில் டாக்டர் அன்னிபெஸன்ட் அம்மையார் இவ்வுலகினின்றும் மறைந்தார் என்ற செய்தி அறிந்து உலகம் முழுவதும் வருந்தியது. பெஸன்ட் அம்மையாரைப் போன்ற ஒரு பெண்மணி இதுகாறும் இவ்வுலகில் தோன்றியதில்லை என்றே கூற வேண்டும். நமது நாட்டின் கல்வி, சமூக, சமய, அரசியல் துறைகளில் பெஸன்ட் அம்மையார் அற்புதத் தொண்டாற்றியிருக்கிறார். பெஸன்ட் அம்மையார் ஒரு பாதிரியாரை மணந்தார். இரு குழந்தைகளைப் பெற்றார். கணவரை நீக்கினார். நாஸ்திகப் பிரசாரம் செய்தார். கருப்பத்தடையைச் சட்டமாக்க அரும்பாடு பட்டார். பிறகு தியாஸாபி என்னும் பிரமஞான சங்கத்தில் சேர்ந்தார். சகல சமயங்களிலும் உண்மை உண்டு என்று கண்டார். அவ்வுண்மையை பிரமஞான சங்கத்தின் வாயிலாக உலகில் பரப்பினார். பெஸன்ட் அம்மையார் கிளர்ச்சி மனப்பான்மை படைத்தவர். உணர்ச்சி மிக்கவர். பேச்சு வன்மையும் எழுத்துவன்மையும் சிறக்கப் பெற்றவர். எகிப்து சுதந்தரத்திற்கும் ஆப்கானிய சுதந்தரத்திற்கும் அரிய தொண்டாற்றினார். இந்தியாவில் ஹோம்ரூல் கிளர்ச்சியில் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டார். காங்கிரஸ் தலைவராகவும் விளங்கினார். பெஸன்ட் அம்மையாரின் பிரிவு உலகத்திற்கே நஷ்டம் என்பதில் ஐயம் இல்லை. அவரது ஆன்மா சாந்தி பெறுக.

நீல அறையின் மர்மம்

(எஸ். எஸ். வாஸன்.)

(236-ம் பக்கத் தொடர்ச்சி.)

பாலாமணி யம்மாள் வீட்டில் கதவு சாத்தப்பட்டிருந்தது. நான் கதவைத் தட்டினேன். ஒரு வேலைக்காரி கதவைத் திறக்க நான் "பாலாமணியம்மாள் இருக்கிறார்களா?" என்று அவளைக் கேட்க அவள் "இல்லீங்க. அவுங்க ஊரிலேயே இல்லீங்க" என்று விடை கொடுத்தாள்.

நான்:—கோகிலம்?

வேலைக்காரி:—கோகுலம்னு இங்கே யாரும் கிடையாதுங்களே!

நான்:—(ஏதோ தப்பாகச் சொல்லிவிட்டவன்போல்) அல்ல பெயரை மறந்து விட்டேன். கோகில மல்ல. மீனாள் என்றோர் பெண்.

வேலைக்காரி:—அவுங்களும் அம்மா கூடவே போயிருக்காங்க!

நான்:—எந்த ஊருக்குப் போனாங்களோ?

வேலைக்காரி:—தெரியாதுங்க.

நான்:—அவர்கள் போய் எத்தனை நாட்களாயின?

வேலைக்காரி:—மூன்று நாட்களாயின.

நான்:—அவர்கள் திரும்பி எப்பொழுது வருவார்கள்?

வேலைக்காரி:—இப்போதிக்கு வரமாட்டாங்க. ஐயா கூட அவுங்களோடே போயிருக்கிறாங்க. இன்னும் ஒருமாசமோ இரண்டு மாசமோ ஆகும் அவுங்க திரும்பி வாரதற்கு—என்றாள்.

பிறகு நான் இவ் வீட்டைவிட்டிறங்கிவந்து தங்கசாலைத் தெருவிலிருக்கும் ஆனந்தபவன் ஹோட்டலுக்குள் நுழைந்தேன். பாலாமணி யம்மாள் என் மனைவியின் பெயரை கோகிலம் என்று மாற்றிச் சொல்ல யாது காரணமென்றே என் மனம் சிந்தித்துக்கொண்டிருக்கிறது.

ஆனந்தபவான் ஹோட்டலில் நான் சிற்றுண்டி சாப்பிட்டுக்கொண்டிருக்கும்பொழுது என் அருகில் உட்கார்ந்திருந்த ஒரு மனிதர் மற்றொரு பேர்வழியைப் பார்த்து "என்ன? சங்கரா! ஒரு சமாச்சாரம் சொல்லுகிறேன் கேள். சுமார் ஒரு வாரத்திற்கு முன் ஒருநாளிரவு நன்றாக 1-மணி அல்லது 2-மணி

யிருக்கலாம். குருவிக்காரன் தெருவு, 94, நெ. வீடு தெரியுமா? அங்கிருந்து இரண்டு மூன்று மனிதர்களாகச் சேர்ந்து ஒவ்வொருவராக இரண்டு மனிதர்களைப் பிணத்தைத் தூக்குவதுபோல் தெருவழியாகத் தூக்கிக்கொண்டு போனதை நான் பார்த்தேன். அந்த வீட்டில் பன்னிரண்டு மணிக்கு முன்பாக துப்பாக்கிச் சப்தமும், 'ஐயோ' வென்ற அபயக் குரலும் கேட்டது. எனக்கு அப்பொழுதே கொஞ்சம் சந்தேகந்தான். ஆனால் நமக்கேன் தலையெழுத்து என்று என் சந்தேகத்தை யடக்கிக்கொண்டு சும்மா யிருந்துவிட்டேன். தூக்கிக்கொண்டு போகப்பட்ட மனிதர்கள் கொல்லப்பட்டிருக்க வேண்டுமென்று என் மனதிற்குப் படுகிறது. இதை வெளியில் சொன்னால் எங்கே என்பேரில் சந்தேகித்து விடுவார்களோ வென்று நான் யாரிடமும் சொல்லவில்லை. முதல்தடவை இப்பொழுதுதான் உன்னிடத்தில் சொல்லுகிறேன்" என்று மெலிந்த குரலில் இரகசியமாய்ச் சொன்னார். இவர் கூறினதையெல்லாம் நான் கவனமாகக் கேட்டுக்கொண்டேன். குருவிக்காரன் தெரு 94 நம்பர் வீடு என்று அவர் சொன்னதை நான் நன்றாக ஞாபகம் வைத்துக்கொண்டு ஹோட்டலை விட்டிறங்கியபின் ஒரு ரிக்ஷாவிலேறிக்கொண்டு குருவிக்காரன் தெருவுக்குப் போகும்படியாக ரிக்ஷாக்காரனுக்குச் சொன்னேன்.

குருவிக்காரன் தெருவிலுள்ள 94-ம் நெ. வீடு என் மனைவி மீனாள் இறந்து கிடந்த வீடாகவே காணப்பட்டது. இதுவே நானிதுகாறும் தேடிக்கொண்டிருந்த மர்ம வீடு. இவ்வீட்டில்தான் என்னுடைய அதிசயக் கலியாணம் நடைபெற்றது.

நான் ரிக்ஷாவைவிட்டிறங்கிச் சிறிது அச்சத்துடனேயே வீட்டின் வாசற்படியேறி கதவைத் தட்டினேன். ஒரு மனிதன் கதவைத் திறந்தான். நான் அவனைப் பார்த்து, "பூர்ணலிங்க முதலியார் இவ்வீட்டில் இருக்கிறாரா?" என்று கேட்டதற்கு அவன் நீங்கள் சொல்லுகிற பேர்வழி இவ்வீட்டில் கிடையாது. "இது அலமேலு அம்மாளுடைய வீடு' என்று பதிலுரைத்தான். பிறகு நான் அவனைப் பல கேள்விகள் கேட்டதற்கு அவன் எனக்குத் தெரிந்தவரையில் ஒன்றையும் மறைக்காமலே விடை கொடுத்தான்.

அவன், தான் அவ்வீட்டிற்கு வந்தே மூன்று நாட்கள் தான் ஆயினவென்றும் பூர்ணலிங்க முதலியார் யாரென்று தனக்குத் தெரியாதென்றும் அலமேலு அம்மாள் சென்ற நான்கைந்து வருஷங்களாக அவ்வீட்டிலிருக்கிறதாக மட்டும் தனக்குத் தெரியுமென்றும் தற்காலம் அலமேலு அம்மாள் தன்னை வீட்டைப் பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டு வெளியூர் போயிருக்கிறாளென்றும் தெரிவித்தான்.

இதை யெல்லாம் கேட்டுக்கொண்ட பிறகு நான் அவனைப் பார்த்து "பூர்ணலிங்க முதலியார் சில நாட்களுக்கு முன் இவ் வீட்டிலிருந்தார் என்பது உண்மையான விஷயம். அவரிருந்த வீடு இதுதானென்று நான் நிச்சமாய்ச் சொல்வேன். நான் அப்பொழுது இவ் வீட்டுக்கு வருவதும் போவதுமாக இருந்தேன்! இவ் வீட்டிலுள்ள அறைகள் எப்படி யிருக்கின்றன வென்று உள்ளே போய்ப் பார்க்கலா மல்லவா?" என்று கேட்டதற்கு அவன் என்மீது சந்தேகங்கொண்டு "அது எப்படி முடியும்?" என்று சொல்லி மறுதலித்து விட்டான். எனக்கு இவ் வீட்டில் நேர்ந்த விஷயத்தை யிவனிடம் சொல்வதனால் ஒரு கெடுதியும் ஏற்படாதென்று தீர்மானங்கொண்டு

அவனைப் பார்த்து "ஐயா! உம்மிடம் உண்மையைச் சொல்கிறேன். நான் சொல்வதைக் கேட்ட பின்புதான் நீர் என் இஷ்டத்திற்கு இணங்குவீர். இவ் வீட்டில் சில நாட்களுக்கு முன் எனக்கு ஒரு உயிர் கண்டம் ஏற்பட்டது. இந்தக் காரணத்தால்தான் இவ் வீட்டிலிருக்கும் அறைகளைப் பார்க்கவேண்டுமென்று ஆசைப்படுகிறேன். இவ் வேண்டுகோளுக்கு இணங்குவாயாகில் பசியுள்ளவனுக்குப் பலகாரம் கொடுப்பதைப்போல் பன் மடங்கு புண்ணியம் உனக்கு உண்டாகும்" என்று அவனைச் சற்று தூக்கி வைத்தே பேசினேன்.

நான் சொன்னதைக் கேட்டு சற்று மன மிரங்கியவன்போல் அவன் "அப்படியானால் என் பின்னே வாருங்கள்' என்று சொல்லி யழைத்துக் கொண்டு இதோ யுள்ளே அறைகளெல்லாவற்றையும் காண்பித்தேன். நான் இப்பொழுது பார்த்துகொண்டிருக்கும் அறைகளிலேயேதான் என் கலியாணத்தின் விருந்து முன் நடந்துகொண் டிருந்தது.

வெகு நேரம் நான் ஆச்சரியத்துடன் பிரமித்த வண்ணம் இம்மர்ம வீட்டின் அறைகளையே கவனித்துக் கொண்டிருந்தேன். அப்பால் நான் அவனைப் பார்த்து "ஏனப்பா, நீ இங்குவந்து சில நாட்கள்தானே ஆயின. நீ இங்கு வந்ததற்குமுன் பூர்ணலிங்கமுதலியார் என்பவர் இவ்வீட்டில் குடித்தனமிருந்திருக்கலாமல்லவா?" என்று கேட்க, அவன் "இருக்கலாம்; அப்படிப் பூர்ணலிங்க முதலியார் இவ்வீட்டிலிருந்தது உண்மையான சங்கதியேயானால் இவ்விஷயத்தை இவ்வீட்டின் எஜமானி அலமேலு அம்மாள் இரகசியமாகவே வைத்திருக்கவேண்டிய காரணந்தான் எனக்குத் தெரியவில்லை" என்றான்.

நான்;—ஏது இவ்விஷயத்தைப்பற்றி நீ முன்னமேயே விசாரித்து வைத்துக்கொண்டிருக்கிறாய்போ லிருக்கிறதே?

அவன்:—ஆம். ஏனென்றால் நேற்றையதினம் காலையில் வேறொரு பேர்வழி இங்குவந்து பூர்ணலிங்க முதலியாரையே தேடியபடியால் நான் இப்பெயர் கொண்டவர் யாரென்று அக்கம்பக்கத்திலுள்ளவர்களை விசாரித்தேன். அவர்கள் ஒருவருக்காவது தெரியவில்லை.

நான்:—நேற்றைய தினம் பூர்ணலிங்க முதலியாரைத் தேடி வந்தது யார்?

அவன்:—ஒரு பெண்—நல்ல அழகு வாய்ந்த பெண்ணாகக் காணப்பட்டாள்!

நான்:—அவள் எப்படியிருந்தாள்? அவளுடைய முகபாவனைகளைச் சொல்ல முடியுமா?

அவன்:—அவள் ஒரு முகமூடியால் தன்னுடைய முகத்தை மூடிக்கொண்டிருந்தபடியால் அவளுடைய முகத்தை நன்றாய்ப் பார்க்க முடியவில்லை...... உம்மைப்போல் தனக்கும் பூர்ணலிங்க முதலியாரை நன்றாய்த் தெரியுமென்றும் தானே இவ்விடத்திற்கு வந்திருக்கிறதாகவும், இப்பொழுது நீங்கள் பார்க்கும் இவ்வறைகளையே தான் பார்க்கவேண்டுமென்றும் அப்பெண் கூறினாள். இவ்விஷயம் மிக்க அதிசயமாயிருக்கிறது. அல்லவா?

நான்:—கிரம்பவும் ஆச்சரியமான விஷயமாயிருக்கிறது. அப்பெண் தான் இங்கு வந்ததன் காரணத்தை உன்[illegible]

அவன்:—அவள் வேறு [illegible] என்னிடம் கூறவில்லை.

நான்;—அவளுடைய [illegible]மென்ன கறுப்பா? அல்லது சிவப்பா?

"ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

ஸ்ரீமுக௵ ஐப்பசி௴—கலியுகாதி 5035, சாலிவாகனம் 1856, பசலி 1343, கொல்லமாண்டு 1109, ஹிஜரி 1352, இங்கிலீஷ் 1933௵ அக்டோபர்௴—நவம்பர்௴

ஐப்பசி	அக்டோபர்	வாரம்.	திதி.	நக்ஷத்திரம்	யோகம்.	விசேஷங்கள்.
1	17	செவ்	திர21-40	உத்36-0	அ36-0சித்	[(இரவில்) இயமதர்ப்பணம் நரக சதுர்த்தசி ஸ்நானம்
2	18	புதன்	ச●18-0	அஸ்33-35	ம33-35சி	அமாவாசை, கேதாரகௌரி விரதம், தீபாவளி பண்டி
3	19	வியா	அமா13-0	சித்29-50	சி29-50அ	தானியம் செலவிட [கை
4	20	வெ	பிர7-25 துதி59-38	சுவா25-13	சித்60	கார்த்திகசுத்தம், சந்திர தரி சனம், இயமத் துதியா
5	21	சனி	திரி52-18	விசா19-58	சித்60	ஆலோசன கௌரி விரதம்
6	22	ஞா	சது45-5	அனு14-35	மர60	மாசசதுர்த்தி விரதம்
7	23	திங்	பஞ்38-20	கே9-23	சித்60	சுவாதிகார்த்திக நா-18-35
8	24	செவ்	சஷ்32-15	மூல4-40	அ4-40சித்	கந்தர் சஷ்டி, சூர சம்ஹாரம்
9	25	புத	சப்26-53	பூரா0-40 உத்57-35	அமி60	
10	26	வியா	அஷ்22-28	திரு55-30	சித்60	
11	27	வெள்	நவ19-0	அவி54-25	சித்60	
12	28	சனி	தச16-35	சத54-10	அ54-10ம	
13	29	ஞாய	ஏகா15-5	பூர54-58	சி54-58அ	
14	30	திங்	து14-33	உத்56-30	சித்60	
15	31	செவ்	திர14-50	ரே59-0	சித்60	
16	1	புதன்	ச○16-30	அஸ்60	மர60	
17	2	வியா	பவு18-30	அஸ்2-25	அ2-25சி	
18	3	வெள்	பிர21-50	ப✲6-53	சித்60	
19	4	சனி	துதி26-25	கிரு12-23	அமி60	மாடு வாங்க
20	5	ஞா	திரி31-35	ரோ18-45	சித்60	கரிநாள், வித்யாரம்பம்
21	6	திங்	சது37-40	மிரு25-55	அ25-55சி	சங்கடஷ்ட சதுர்த்தி
22	7	செவ்	பஞ்44-15	திரு33-35	மர33-35சி	கதிரறுக்க
23	8	புத	சஷ்50-15	புன41-10	சித்60	விவாகம், சர்வ முகூர்த்தம்
24	9	வியா	சப்56-38	பூச48-15	அ48-15சி	சர்வ முகூர்த்தம்
25	10	வெள்	அஷ்60	ஆயி54-15	மர60	காலபைரவாஷ்டமி
26	11	சனி	அஷ்1-8	மக-58-40	அ58-40சி	மாடுவாங்க. கதிரறுக்க
27	12	ஞா	நவ3-55	பூர60	சித்60	10-க்குள மழை
28	13	திங்	தச4-35	பூர0-55	சித்60	சுபகாரியங்கள் செய்ய
29	14	செவ்	ஏகா3-10 து59-40	உத்1-13 அஸ்59-20	அ1-13சித்	சர்வ, மத்வ ஏகாதசி, அவ மாகம்
30	15	புதன்	திர54-13	சித்55-38	சித்60	விஷ்ணுபதி புண்யகாலம்

(1933௵ நவம்பர்௴)

ராகு	7-விரு-புத 15-தனு-சுக் 24-தனு-செவ்		
சனி			கே
	செவ் சுக்	சூரி புத	குரு

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR,
AT THE "ANANDA BODHINI" PRESS,
NO. 6, LAWYER CHINNATHAMBI MUDALI STREET, MADRAS.

சென்றமாதம் வெளியான போட்டிப் பந்தயத்தின் சரியான விடை

1. கீர்த்தி பெற்ற நூல். 2. ராக்ஷசப்பிறவி. 3. அற்ப ஆகாரம். 4. புது சிஷ்யர். 5. அரும்பிரயாசிகள். 6. தலைவாசல். 7. காற்றின் அகோரம். 8. தப்பறிவோன். 9. அன்பின்கரம். 10. யுத்த வீரன். 11. நவீன நாகரிகம். 12. ஏமாற்றமடைந்தோன். 13. பிரபஞ்சத்தின் ரூபம். 14. வயிறு வளர்க்கும் கோலம். 15. மாக்கலத்தின் மார்க்கம்.

பரிசு பெற்றவர்கள்.

முதற் பரிசு.

முதல் பரிசு ரூ. 20-ம் கீழ்க்கண்ட இருவரே சரியான விடை எழுதிய தால் தலா ரூ. 10—0—0 விகிதம் பங்கிட்டு அனுப்பப்பட்டது.

1. ஏ. ஜி. வெங்கடராமன்,
   5-வது பாரம், போர்டு ஹைஸ்கூல், கமுதி—(ராமநாதபுரம் ஜில்லா)

2. ஏ. நாககிரீஸ்வரன்,
   பெத்திநாயக்கன் பாளையம், சேலம் ஜில்லா.

இரண்டாவது பரிசு.

2-வது பரிசு, ரூ. 15ஐ ஒரு தப்புள்ள விடை அனுப்பின 17 பேருக்குப் பங்கிட்டு தலா 0—14—1 அனுப்பிவிட்டோம்.

1. பி. கே. கோபால நாயர், தேவலதாபாத், சேலம். 2, 3, 4. வி. சுப்பிரமணியம், பண்ருட்டி. 5. பி. சீனிவாசன், மதுரை. 6. வை. சுப்பிரமணியன், பண்ருட்டி. 7, ம. அ. செ. சுப்பிரமணிய செட்டி, எடப்பாடி, சேலம். 8. வி. டி. குப்புசாமி முதலியார், குயப்பேட்டை, வேலூர். 9. வி. எஸ். ராஜகோபாலய்யங்கார், சேலம். 10. எஸ். ஆர். வெங்கடராமன், கோயமுத்தூர். 11. ஆர். சோமவல்லி, கும்பகோணம். 12. ஆர். கிருஷ்ணராவ், திருவல்லிக்கேணி. 13. ஏ. சுப்பிரமணிய ஐயர், கண்ணனூர். 14. என். முத்துசாமி செட்டி, பல்லடம். 15. ஆர். கிருஷ்ணலாலா, கோயமுத்தூர். 16. மு. மெ. மெய்யப்ப செட்டியார், ஜெயங்கொண்டபுரம், காரைக்குடி. 17. டி. சுப்பிரமணியம், திருவல்லிக்கேணி.

மூன்றாவது பரிசு.

3-வது பரிசு ரூ. 15ஐ இரண்டு தப்புள்ள விடைகள் அனுப்பிய கீழ்க்கண்ட 42 பேருக்கும் தலா 0—5—8 வீதம் பங்கிட்டு அனுப்பிவிட்டோம்.

